# செவ்வந்தி

## சட்டம் - கலை - இலக்கியம்

ஆசிரியர் : **பா. தவபாலன்**

மாத சஞ்சிகை


இரண்டாவது ஆண்டு மலர் — 1978

**2**

சட்டம் · கலை · இலக்கியம்

விலை ரூபா
2-00

**SEVVENTHI MONTHLY MAGAZINE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க்வைற் மேலுறைகளின்

## பெறுமதி

★ 1. மாதாந்தச் செய்தி ஒன்று அல்லது வெளியீடுகளில் ஒன்று
நீலசோப் உறை 10 அல்லது நீம் சோப் உறை 2 அல்லது
பார் சோப் உறை 2 அல்லது மெடிக்கேட்டட் உறை 2
அல்லது சலவைப் பவுடர் உறை 2

★ 2 பொலித்தீன் பெரிய பை அல்லது சுவாமிப் படம் ஒன்று ★
நீலசோப் உறை 100 அல்லது நீம் சோப் உறை 10 அல்லது பார் சோப் உறை 10 அல்லது
மெடிக்கேட்டட் உறை 10 அல்லது சலவைப் பவுடர் உறை 10

★ 3. துவாய் ஒன்று — நீலசோப் உறை 500

**வியாபாரிகளுக்கு விசேட பரிசு**

72 சவர்க்காரம் சுற்றி வரும் உறை 50 அல்லது 36 சவர்க்கார்ம் சுற்றிவரும் உறை 100 அல்லது 30 சதம் சோப் சுற்றிவரும் உறை 50 அனுப்பி துவாய் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்

முகவரி: மில்க் வைற் யாழ்ப்பாணம்

வருங்கால சந்ததியினருக்காக மரம் ஒன்று நடுக

**Plant a Tree for Posterity**

*WITH THE BEST COMPLIMENTS FORM*

★★ **CEYMA SILK INDUSTRIES LTD.** ★★

*Manu Facturers of Pure Silk Rayon Synthetic & Cotton Textiles*

**FACTORY**

CEYMA SILK INDUSTRIES
THIRUNEL VELY,
JAFFNA.

TELE PHONE: 7170
TELEGRAMS CEYMASILK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1416

இலங்கை முழுவதும் விற்பனையாகிறது

★ பாப்பா முதல் பாட்டாவரை விரும்பிப் படிக்கும் ஈடிணையற்ற சிறுவர் மாத சஞ்சிகை

● இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த ஒரே சிறுவர் மாத சஞ்சிகை

# நட்சத்திர மாமா

சிறுவர் சிந்தனைக்கு விருந்தூட்டும் வண்ணப்படங்கள். கருவூலக் கதைகள் நிறைந்த ஒரே மாத இதழை தொடர்ந்து படியுங்கள்.

நிர்வாகி:

நட்சத்திர மாமா
189, செட்டியார் தெரு,
கொழும்பு 11

விலை ரூபா 1-75

போன் 29345

★ தொடர்ந்து வாசியுங்கள்

இந்திய சஞ்சிகைகளுக்கு இணையான ஈழத்து சஞ்சிகை

★ இலங்கை முழுவதும் விற்பனையாகிறது ★

★ சிறந்த இந்திய இலங்கை சினிமாச் செய்திகள், துணுக்குகள்.

★ சிறுகதை, தொடர் நாவல்

★ கவிதை, இலக்கிய விமர்சன அரங்கு கேள்வி—பதில்.

★ அழகிய மூவர்ண அட்டையுடன்

★ இன்னும் ஏராளமான சிறப்பம்சங்கள் நிறைந்த மாதசஞ்சிகை

# "கலாவல்லி"

விலை ரூபா. 1—00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, ... Road
No.

சிவமயம்

ஸ்ரீ

ஸ்ரீ மதே இராமாநுசாய நம

வெங்கடேஸ்வரா

## கலைமகள் துதி

நற்புலவோர் நாவிலுறை நலமே போற்றி
பொற்பதும பூரணியே போற்றி கோளல்
முற்பவநோய் பெருகாமல் முத்தி காட்டும்
கற்பகமே கலைமகளே போற்றி போற்றி

★ யாழ் நகரில் எங்கு பார்த்தாலும் எல்லோர் வாயிலும் வெங்கடேஸ்வரா

★ தட்டுப்பாட்டுப் பொருட்களை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள வெங்கடேஸ்வரா

## செவ்வந்தி வாசகர்களே

★ பாட்டா பாதணிகள்

★ சிந்தெட்டிக் சூட்டிங் சேட்டிங்

★ கைத்தறி பற்றிக் புடவைகள்

★ உத்தரவாதமளிக்கப்பட்ட தங்கமுலாம் பூசிய ஆபரணங்கள்.

★ பாடசாலைமாணவர்களுக்குத் தேவையான கணித உபகரணங்கள் ஏனைய உபகரணங்கள்

★ அழகிய உயிரோவியமான வண்ண சிலைகள் பொம்மைகள்

இன்னும் மங்கையர்விரும்பும் மங்கல நாகரீக பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

# வெங்கடேஸ்வரா

இல. 25 நவீன சந்தை
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

# WENKADESWARA

தலைமை அலுவலகம்
நாதன் அன் கோ
102 | 3 முதலாம் மாடி
3—ம் குறுக்கு வீதி சொழும்பு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியை வளர்த்துக்கொள்
பொறாமையை வளர்க்காதே

# செவ்வந்தி

சட்டம் • கலை • இலக்கியம்

மாத சஞ்சிகை

இரண்டாவது
ஆண்டு மலர் 1978

[22-23-24 வது இதழ்கள் உட்பட]

★ ஆசிரியர்

பா. தவபாலன்

கதைகள் யாவும் கற்பனை
கட்டுரை கவிதைகளில் உள்ள
கருத்துக்களுக்கு அவற்றின்
படைப்பாளிகளே உரிமையாளர்கள்
ஆக்கங்களில் வேண்டிய திருத்தங்கள்
செய்ய ஆசிரியருக்கு பூரண உரிமை
உண்டு

● சந்தா

ஒரு ஆண்டு — 15-00
அரை „ — 8-00

தபாற்செலவு ஆண்டுமலர்
இலவசம்

★ முகவரி

'ஆசிரியர்'
செவ்வந்தி கலைக் கூடம்
185 | 4 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம் — இலங்கை

## விமான விபத்தும் வீண் விமர்சனங்களும்

★ முன்னாள் பரீட்சை ஆணையாளர் கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்
தீர விசாரித்தறிவதே மெய்

இவ் அடைமொழிக்கு இணங்கவே ஆகஸ்ட் கலவரம் அரசியல் மோசடிகள் என்பவற்றை விசாரிக்கவென தனித் தனிக் கமிசன்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் முன்னாள் பரீட்சை ஆணையாளர் திரு போ கொட பிரேமரத்ன அளித்த கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்த 22-9-78 வெள்ளிக்கிழமை வீரகேசரி தமிழ் பத்திரிகையில் வெளியாகியுள்ள இவரது கூற்று இதுதான். நாட்டுக்கு 3 கோடியே 30 லட்சம் ரூபா நஷ்டத்தை செப்டம்பர் 7-ம் திகதி நடந்த 'அவ்ரோ விமான விபத்து' ஏற்படுத்தியுள்ளது. இவ்விபத்துக்கு தானே பொறுப்பு என்று ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கம் துண்டுப் பிரசுரத்தின் மூலம் வெளியிட்டுள்ளது அன்று நடைபெற்ற புதிய அரசியலமைப்பு வைபவத்திற்கு ஊறு விளைவிக்கவே இவ் விமானம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் 'தமிழர்கள் தமக்கு கூடிய சலுகைகள் வழங்கப்பட்டிருந்தும் நன்றியுடையவர்களாக செயற்படவில்லை' என்பதையே எடுத்துக் காட்டியுள்ளது எனக் கூறியுள்ளார்,

அவரது கூற்றில் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்பது 'சேகுவேரா" என்னும் பயங்கர இயக்கமா? அல்லது அண்மையில் தடைசெய்யப்பட்ட இயக்கமென பிரகடனப் படுத்தப்பட்ட 'புலிப் படை இயக்கமா'? என்பது அவருக்கே தெளிவு எனினும் அவரது அடுத்த கூற்று எதைக் கருதினார் என்பதை தெளிவுபடுத்துகிறது தமிழருக்கு கூடிய சலுகைகள் வ்ழங்கியும் நன்றியுடையவர்களாக செயற்படவில்லை என்பதிலிருந்து தமிழர்களெல்லாம் அவ்வியக்கத்தை சேர்ந்தவர்களென்றும் கூறாமல் கூறியுள்ளார். இவ்விபத்து தென்னிலங்கையில் வாழும் பயங்கர அரசவிரோத சக்திகளால் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என சில அதிகாரிகள் செய்திகள் தெரிவிக்கின்றன. அதுகூட அனுமான அளவிற்தான் ஆனால் இந்தப் பரீட்சை ஆணையாளரோ முடிவேகட்டிவிட்டார். தேசிய ஐக்கியத்தை விரும்பும் எந்த சக்திகளும் இக் கூற்றுப்பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை இவரின் அறியாமை மக்கள் மத்தியில் இனக்கசப்பை ஏற்படுத்துவதோடு எரிந்துவரும் வகுப்புவாதம் எனும் நெருப்புக்கு நெய்யூற்றுவதாக அமையும். என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

இவரது இக்கூற்றை செவ்வந்தி வன்மையாகக் கண்டிக்கிறது யாரோ என அறியமுடியாத அறியப்படாத பயங்கர வாதிகளால் செய்யப்பட்ட இச் சயெலுக்கு உலகிலேயே தனித்துவமும் வரலாற்றுப் பெருமையும் இந்நாட்டின் முக்கிய தனித்துவ சிறுபான்மை இனமாகவும் விளங்கும் ஒரு இனத்துக்கு மாசுகற்பிப்பதாகஅமைகிறது இவரது கூற்று. இக் கூற்றை வாபஸ் பெறுவதோடு குறிப்பிட்ட கூற்று சார்பாக மன்னிப்பும் கேட்க வேண்டும் என்று செவ்வந்தி கூறிக்கொள்கிறது.

★ ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் நோக்கு

# மூன்றாவது ஆண்டை நோக்கி

எமது வெற்றிப் பயணம் தொடர்கிறது.

பி. திவபாலன்

போட்டிகளை பொருமைகளாக கொள்ளாது போட்டியாகவேமனதிற் கொண்டு தன் சக பத்திரிகைகளுக்கு மதிப்பளித்து தானும் வளர்ந்து மற்றைய சஞ்சிகைகளின் வளர்ச்சியிலும் மகிழ்ச்சி கொண்டு தனித்துவமான மக்கள் இதயம் கவர்ந்த குறிப்பாக மாணவர்களின் அறிவுக் களஞ்சியமாக எல்லோரதும் அன்பை ஒருமுகமாகப் பெற்ற செவ்வந்தி தனது இரண்டாவது ஆண்டை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டினுள் பிரவேசிக்கவுள்ளது. இறுதியாக வெளிவந்த சஞ்சிகையில் புதிய மூன்று துறைகளை இணைத்து அதாவது சட்டத்துறையுடன் கலை, இலக்கியத்தையும் இணைத்து ஒரு புது முயற்சியாக வாசகர் மத்தியில் செவ்வந்தி வெளிவந்தது. இன்றும் இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த, தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கும் ஓரோ சஞ்சிகை என்ற பெயரை நிலைக்க வைத்து அதையே செழித்து தழைக்க வைத்த எனது முயற்சிக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கிக்கொண்டிருக்கும் வாசகர்கள் விளம்பரதாரர்கள் விற்பனையாளர்கள் ஆகியோருக்கு எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் ஒரு சஞ்சிகை வளர்ந்து வருகின்றதென்றால் அதனை முறியடிக்கவென ஒரு அறிவற்ற கூட்டம் இயங்கி வருகிறது. அவற்றிற்கு ஏற்றாற்போல் சிறு கொள்கைகள் திட்டங்கள் இவற்றின் திட்டங்கள் கொள்கைகள் எல்லாம் உருவாகிவரும் ஈழத்து சஞ்சிகைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு அவற்றை வெளிவராமல் தடுப்பது. இதற்க்கென இக் கூட்டத்தின் அறிவுக்கெட்டிய விளக்கமற்ற நகைச்சுவைகள், கைக்கெட்டிய நான்கு வெளிநாட்டு சஞ்சிகைகளை ஓசியில் படித்துவிட்டு அதற்கேற்ற விமர்சனங்கள் மக்கள் மத்தியில் ஏதோ ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தப் போவதாக செயற்பாடற்ற வாய்வீச்சுக்கள் என்பவற்றை தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கி வருகின்றது இது சாதித்தது ஒன்றுமில்லை. ஏனெனில் எதுவும் செய்யவில்லை இக் கூட்டத்தின் கெடுபிடிகளுக்கு உட்பட்டு பலியாகிய சஞ்சிகைகள் ஏராளம். தாக்குப்பிடித்தவை சில அவை இன்றும் வெற்நடை போடுகின்றது. இவ்விடத்தில் நான் ஒன்றைக் அழுத்திக் கூறவிரும்புகின்றேன். உண்மையான இலட்சியத்துக்காகவும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் வெளிவந்துகொண்டிருக்கும் ஈழச்சஞ்சிகைகளுக்கு இறப்பேயில்லை. ஆனால் இலக்கியத்தை இலக்கியமாக கருதாது அதனை வைத்து வயிற்றுப் பிழைப்புச் செய்ய முற்பட்டால் அவர் வீழ்ச்சியை நோக் செல்வதோடு உண்மையான இலக்கிய வளர்ச்சிக்கு இழுக்கு ஏற்படுத்தியவர் என்ற அவப்பெயரையும் பெற்றவர் ஆவார். எனவே இலக்கியத்தை வைத்து பிழைக்க எண்ணாதீர்கள். வளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்து வளர எண்ணுங்கள்.

இரண்டு முழு வருடங்களை ஈழத்து சஞ்சிகை யொன்று அதுவும் இந்தவேளையில் கடப்பது என்றால் மிக கஷ்டமான காரியம் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இந்த இரண்டாவது வருட நிறைவில் செவ்வந்தியில் ஆரம்பமாகிய புதுயுகம் பகுதி மிகவும் பாராட்டைப் பெற்றுள்ளது. ஏராளமான வாசகர்கள் குறிப்பாக பெண் வாசகர்கள் பங்குபற்ற விருப்பம் கொண்டுள்ளனர். இளம் வாசகர்கள் என்பதாலோ என்னவோ இதமான உணர்ச்சிகரமான அறிவோட்டமான, ஆக்கபூர்வமான, பல்துறை சார்ந்த ஆக்கங்கள் அவர்களின் புகைப்படங்களுடன் எமக்கு வந்து சேர்ந்துள்ளன. நிச்சயமாக இவ்விளம் ஆக்கவாளர்களின் ஆக்கங்கள் அவர்கள் எழுதிய வாறே படங்களுடன் பிரசுரமாகும் என உறுதி கூறுகிறேன். இப்பகுதியே அவர்கள் பயிற்சிக் களமாக அமைய இதனை மேலும் விஸ்தரிக்க எண்ணியுள்ளேன். மனதில் விளைந்ததை எழுத்தில் வடியுங்கள் புதுயுகத்தில் அவை பிரசுரமாகும்.

தரமான சினிமாச் செய்திகளையும் ஈழத்தில் இலைமறை காயாய் தனித்துவமாக இயங்கிவரும் திறமை வாய்ந்த கலைஞர்கள் சம்பந்தமான சகல விபரங்களையும் உள்ளடக்கி அவர்கள் பற்றிய விபரம் இந்தமலரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கலைஞர் கோட்டம்' பகுதியில் ஆரம்பமாகவுள்ளது. இலைமறைகாயாக உள்ள கலைஞர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு உங்கள் விபரங்களை அறியத்தந்து இப்பகுதியை சிறப்பிக்க உதவும்படி வேண்டுகிறேன்.

இவை தவிர இலங்கை எழுத்தாளர்களின் பிரசுர முயற்சியை ஊக்குவிக்கு முகமாக செவ்வந்தி தனது இரண்டாவது ஆண்டில் 'செவ்வந்தி பிரசுரம்' எனும் பிரசுரப் பகுதியை ஆரம்பித்து அதன் முதற் பிரசுரமாக 'காலநதி' என்னும் சிறு கதைத் தொகுப்பை கடந்த மாதத்தில் வெளியிட்டுள்ளது. இச் செவ்வந்தி பிரசுரம் பல பத்திரிகைகள் எழுத்தாளர்களால் பாராட்டப்பட்டதோடு பலர் இப்பிரசுரத்தில் பங்குகொண்டு எழுதவும் முற்பட்டுள்ளனர். அனைவரையும் வரவேற்கிறேன். இன்னமும் சிறப்பாக எழுத்தாளர்கள் தாம் வெளியிடும் சஞ்சிகைகளுக்கு இலவச விளம்பரம் ஒன்றையும் செவ்வந்தியில் பிரசுரிக்க ஏற்பாடுகள் செய்துள்ளேன். இதுபற்றிய விபரம் இம்மலரின்42 பக்கத்தில் வெளியாகியுள்ளது. செவ்வந்தியின் இம்மலரிலிருந்து இறுதிப் பக்கம்வரை புதிய அமைப்பு மாற்றத்தையும் நிரந்தரமாக மேற்கொண்டுள்ளேன். கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத, தவிர்க்க முடியாத நிலையில் செவ்வந்தியின் தனிப்பிரதிவிலை அடுத்த இதழிலிருந்து இருபத்தைந்து சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது இதற்கேற்ப பக்கங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தாபெறுபவர்களுக்கு மட்டும் தபாற் செலவையும் ஆண்டுமலரையும் இலவசமாக வழங்க முன்வந்துள்ளேன்.

இறுதியாக இனம், மொழி, மதம், பண்பாடு பாரம்பரியம் இவற்றுக்காக பாடுபடும் பிரசுர முயற்சிகளுக்கும் மக்கள் கூட்டத்துக்கும் முயற்சிகளுக்கும் செவ்வந்தி வாசகர்கள் அனைவரும் இதயசுத்தியுடன் தமது பங்களிப்பை வழங்கி இதனை மாசுபடுத்த விளையும் காளான்களை அகற்ற முன்வரவேண்டும். என்று வேண்டி விடைபெறுகிறேன்,

## விசேட அறிவித்தல்


அன்பு வாசகர்களுக்கு அடுத்த இதழிலிருந்து செவ்வந்தியின் பிரதி ஒன்று இருபத்தி ஐந்து சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஈழத்து இலக்கிய உலகில் கடுமையான சஞ்சிகை வர்த்தக போட்டியின் மத்தியில் சிந்தனைக்கு விருந்தளிக்கும் புதுமை மலராக வெளி வந்துகொண்டிருக்கும் செவ்வந்தியை தொடர்ந்து உங்களுக்கு வழங்கவே இச்சிறு விலை அதிகரிப்பு காகிதம், மை, அச்சுக் கூலி, ஆகியவற்றின் விலைகளில் அதிகரிப்பு சஞ்சிகையின் அமைப்பு மாற்றம், பக்கங்கள் அதிகரிப்பு இவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் சிறு விலை அதிகரிப்பைச் செய்துள்ளோம். என்றும் போல் எமது அன்பின் வாசகர்களும் அருமை மாணவர்களும் தமது இதயபூர்வமான ஆதரவை வழங்குவார்களென்ற நம்பிக்கையுடன் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

★ தனிப்பிரதி விலை 1—25
★ ஒரு வருட சந்தா 15—00
★ அரை வருட சந்தா 8—00
★ தபாற் செலவு ஆண்டுமலர் இலவசம்

★ ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச. வேல்முருகானந்தன்
நீர்வேலி.

கே. ஆஸ்தான கவிஞர் பட்டம் பெற்ற கண்ணதாசனுக்கு என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

ப. 'அரசு கவிஞர்' என்ற பட்டம் பெற்ற கண்ணதாசனுக்கு மாதச்சம்பளம் 1000 ரூபாவும் போக்குவரத்துக்கு காரும் வழங்கியுள்ளார்கள். 1 நாளில் ஆயிரம் ரூபா உழைக்கும் திறமை வாய்ந்தவர் கவிஞர்.

கே. இதய சுத்தியான காதலர்களை இன்று காணமுடிவதில்லையே ஏன்?

ப. நாமும் காதலிக்கிறோம் என்று காதலிப்பவர்கள் தொகை பெருகி அதுவே பாஷனுகி விட்டதால் போலும்.

நா. வயலவன்
ஸ்பிறிங்வலி.

கே. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலைப்பரிவர்த்தனை உண்மையில் பேணப்படுகிறதா?

ப. பரிவர்த்தனை என்பதற்கே அர்த்தமில்லாதவாறு நடந்து கொண்டிருக்கிறது பேச்சுவார்த்தைகள் தான் பதில் அளிக்க வேண்டும்.

கே. எமது நாடு இலக்கியத்துறையில் பெரு வெற்றி பெற......?

ப. சங்கப்புலவர்கள் தோன்றினுலும் முடியாது. அதிசயம் ஏதாவது...

க. சின்னத்தம்பி
சுருவில்'

கே. 'தமிழ் மொழி'யை கற்றுக்கொள்ள சிங்களவர் முன்வருவாரா?

ப. முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாக கேள்வி இகழ்ச்சி அடையாவிட்டால்சரி

த. கோமளன்
மானிப்பாய்,

கே. இலங்கையில் வெற்றிகரமாக இயங்கிவரும் சஞ்சிகைகள் எவையெனச் சொல்லமுடியுமா?

ப. பணரீதியிலா, இலட்சியரீதியிலா என்று கேட்கவில்லையே தளராதமுயற்சியால் இன்று நட்சத்திர மாமா கலாவல்லி, சிரித்திரன், மல்லிகை, செவ்வந்தி, சுடர், ஊற்று, கதம்பம், கீதா ஆகியவற்றை குறிப்பிடலாம்.

மணியம்
புன்னலைக்கட்டுவன்.

கே. இலங்கையில் தனியார்துறை பஸ் போக்குவரத்தை கையேற்றல்?

ப. நெருக்கடியான நிலைமையை இது போக்க உதவும் ஆனல் வீதியால் மக்கள் போக அவர்கள் போட்டி ஓட்டம் இடம் வழங்குமா?

செல்வி ச. ரமணி

கே. உங்கள் சஞ்சிகையில் சினி இல்லாதது ஏதோ போல் உள்ளது ஏன் சினிமா மீது உங்களுக்கு வெறுப்பா?

ப. இம்மலரில் உங்களைப் போல் ஏராளமானேரின் ஆவலை நிறைவேற்ற ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது தரமான சினிமாச் செய்திகள் விமர்சனங்கள் துணுக்குகளையே நீங்கள் எதிர்பார்க்கலாம். நான் ஒன்றும் முனிவரல்ல தவிர என் ஒருவன் வெறுப்பால் சஞ்சிகையைப் பனியிட சஞ்சிகை எனக்கு மட்டும் உரியதல்ல அது உங்களைப்போன்ற வாசகர்களுடையதே.

செல்வி சோ. ராதா
முல்லைத்தீவு.

கே. பெண்களைக் கண்டதும் பல்லைக் காட்டுவதோடு நின்றுவிடாமல் தொடரும் ஆண்களை என்ன செய்யலாம்?

ப. உங்கள் கேள்வியிலிருந்தே

நீங்கள் அவருடைய நடவடிக்கைகளை எல்லாம் கூர்ந்து அவதானித்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது. நீங்கள் இந்நடவடிக்கைகளை தொடராது விட்டால் பலன் நிச்சயம் உண்டு.

பா. விமலநாதன்
கிண்ணியா.

**கே.** மேக்கப் செய்துகொள்ளும் பெண்கள் பற்றி......

**ப.** ''இரவல் அழகை'' நன்கு விரும்புபவர்கள்.

**கே.** கணவனுக்கு பணியாத மனைவி......

**ப.** பூசைக்கு உதவாத மலர்

**கே.** மனைவி விரும்பும் ஆசைகளை நிறைவேற்ற முடியாத கணவன்...

**ப.** லட்சம் ரூபா பரிசு கிடைத்தும் என்ன செய்வது என்று தெரியாது திணறுபவன்

**கே.** அரசியல் வாதி உண்மை பேசுவதானால்......

**ப.** அதனையும் நீண்டநாட்கள் பாடமாக்கி பேசுவான்

ச. ராஜசுந்தரம்
கிளிநொச்சி.

**கே.** உங்கள் தீர்ப்புக் கூறமுடியுமா கேள்வியில் வரும் சம்பவங்கள் உண்மையில் நடந்தவையா?

**ப.** பெயர்மாற்றம் செய்து நடந்த வழக்குகளில் உள்ள சம்பவங்களை வினவாக்கியே உங்களுக்கு 'தீர்ப்புக்கூற முடியுமா?வை தருகிறோம்,

**கே,** சட்டம் சம்பந்தமான கேள்விகளுக்கும் விடையளிப்பீர்களா?

**ப.** சட்டத்துக்காக வெளிவரும் சட்ட அம்சங்கள் நிறைந்த சஞ்சிகையில் நீங்கள் கேட்கும் கேள்வி விசித்திரமானது நினைப்பது நிறைவேறும்.

ச. சண்முகரத்தினம்
இறக்குவானை.

**கே.** செவ்வந்தியை மாதம் மூன்று இதழ்கள் ஆக்குவதற்கு எம்மால் என்ன செய்ய முடியும்?

**ப.** ஆதரவுக்கு எமது நன்றிகள் மாதம் இரண்டு இதழாக்கியதும் அதுபற்றி உங்களுக்கு தெரிவிக்கிறேன்.

**கே.** வாழ்வில் நிரந்தரமாக முன்னேற......

**ப.** பிறரை ஏமாற்றாத உண்மை உழைப்பு அவசியம். தவிர பிறரைத் திருத்தமுன் தான் திருந்தவேணடும்.

**கே.** புலி வருகுது புலி என்ற இந்தியத் திரைப்படம் இங்கும் திரையிடப் படுமா?

**ப.** நிச்சயம் திரையிடப்படும். படத்தில் மருந்துக்குக்கூட புலி வருமா என்பது சந்தேகம் பெயருக்கும் படத்திற்கும் சம்பந்தம் தற்போது வரும் படங்களுக்கு இல்லையே!

க. சிவகணேசராஜன்
முல்லைத்தீவு.

**கே.** ஆண்கள் கண்ணீருக்கும் பெண்கள் கண்ணீருக்கும் இடையில்உள்ள வேறுபாடு எத்தகையது?

**ப.** வரண்ட பிரதேசத்தில் பெய்யும் மழைபோன்றது ஆண்கள் கண்ணீர் மலைநாட்டில் பெய்யும் மழைபோன்றது பெண்கள் கண்ணீர். ஆண்கள் கண்ணீர். விட்டால் பெண்ணே பொறுக்க மாட்டாள். பெண்கள் கண்ணீர் விட்டால்...?

**கே.** ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் உள்ள வேறுபட்ட குணவியல்பு...?

**ப.** 'பொறுமை' இது பெண்களிடம் அதிகம் இதனால் நினைத்ததை சாதிக்கிறார்கள். இது ஆண்களிடம் பெருமளவில் காணமுடியாத ஒன்றாகும்.

சி. செல்வலஷ்மி
கோண்டாவில்.

**கே.** பிரச்சினைகளில் சிக்காமல் இருக்க ஒரு வழி சொல்லுங்களேன் பார்ப்போம்?

**ப.** அதில் தலைபோடாமல் இருப்பது.

**கே.** பெண்கள் கற்பைப்பற்றி கவலைப்படும் ஆண்கள் தங்கள் கற்பைப்பற்றிக் கவலைப் படுவதில்லையே! ஏன்?

**ப.** பெண்கள் 'ஆண்களது' கற்பைப்பற்றி சிறிதும் கவலைப் படாமல் இருப்பதால் போ போலும்.

---

கேள்வி அனுப்ப வேண்டிய முகவரி

**செவ்வந்தன் பதில்கள்**
செவ்வந்தி கலைக்கூடம்
185 | 4 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கோட்டம்

★ பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் இலங்கை
விஜயத்தின்போது செவ்வந்தி ஆசிரி
யர் பா. தவபாலனுடன் எடுத்துக்
கொண்ட படம்,



'பைலட் பிரேம் நாத்' இலங்கை இந்தி
யக் கூட்டுத் தயாரிப்பில் உருவாகிய முதல் தமிழ்
வண்ணப்படம் இவ்வருட திரைவிருந்தாக இலங்
கையிலும் இந்தியாவிலும் திரையிடப்படவுள்ளது
மிகவும் சிறப்பாகவும் இதுவரை இந்தியாவில்
எந்தத் தமிழ்ப் படமும் விலைபோகாத அளவு
32 லட்சம் ரூபாவுக்கு இப்படம் விலைபோயுள்ளது
இலங்கையின் இயற்கைக் காட்சிகளின் ஒருபகுதி
படப்பிடிப்பைப் பார்த்துவிட்டே இவ்விலைபோயு
ள்ளது. இலங்கையின் இயற்கைக் காட்சிகள் இணை
யற்றவை இதனை அழகாகப் படம்பிடித்து பைலட்
பிரேம்நாத்தை உருவாக்கியுள்ளனர்.

உலகின் தலைசிறந்த தமிழ் நடிகர் திரு சிவாஜி
கணேசன் இக் கூட்டுத் தயாரிப்புக்கு தனது பூரண
ஒத்துழைப்பை நல்கியுள்ளார். ஒருதடவை இவ
ரை நான் சந்திக்க சென்றபோது இவரது காரிய
தரிசி குருமூர்த்தி கூறினர் காலை 7-00 மணிக்கு
சென்ற அவர் இரவு 8-00 மணியாகியும் திரும்ப
வில்லை என்று அன்று தாலிக்கொடி தமிழ்ப்பட
ஆரம்பவிழாவிற்கு வரஇருந்தும் வரமுடியவில்லை
மிகவும் உணர்ச்சிகரமான கட்டமொன்றை அன்று
விஜயா ஸ்ருடியோவில் படமாக்கிக் கொண்டிருந்த
னர். அன்று அவர் நள்ளிரவு 12-00 மணிவரை
நடித்தார். அன்று நான் புரிந்துகொண்டேன் இத்
தகைய கடினஉழைப்புதான் இன்று இவரை இமயம்
போல் உயரவைத்துள்ளது என்பதை கலைஞர்கள்
எவராயினும் அவர்களிடத்து பாகுபாடு காட்டுவ
தில்லை என்பது சிவாஜியின் உரையாடலில் புலப்
பட்டது மேலும் அவர் தொடர்ந்து பல கூட்டுத்
தயாரிப்புகளில் நடிக்கவுள்ளார், குறிப்பாக ஒரு சிங்
களப்படத்தில் சிங்கள மொழிபேசி நடிக்க முயற்
சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவரது
முதல் முயற்சி பெருவெற்றிபெற்றதை யடுத்து இந்
இந்தியக் கலையர்கள் இலங்கைப்படத்திலும் இல
கைக் கலைஞர்கள் இந்தியப் படத்திலும் நடிக்கத்
தொடங்கியுள்ளனர். இதன் மூலம் சிறந்தமுறை
யில் கலைப்பரிவர்த்தனை நடைபெறும் என எதிர்பா
ர்க்கலாம்.

யாழ்ப்பாணம் திருகோணமலை மட்டக்களப்பு
பகுதிகளில் படப்பிடிப்பை திட்டவட்டமாக நடா
த்த முடிவுசெய்தபோதும் சில அரசியல் சக்திகளி
ன் தலையீடு இவற்றை தடைசெய்து விட்டது. என
கூறப்படுகிறது, இம்மூன்று தமிழ்ப் பகுதிகளும் பட
த்தில் வரும் பாடலொன்றில் இடம்பெற்றுள்ளன
எனினும் இதற்கான படப்பிடிப்பு நடைபெறுது
அதற்காக வேறு பகுதிகளில் படப்பிடிப்பு நடை
பெற்றுள்ளது. தவிர பைலட் பிரேம்நாத் படப்பி
டிப்பு சம்பந்தமாகவோ அல்லது தனிப்பட்ட முறை
யிலோ இதில் பங்கேற்ற கலைஞர்கள் எவரும் இப்
பகுதிகளுக்கு விஜயம் செய்ய மிகவும் விரும்பிய
போதும் அனுமதி வழங்கப்படாமையால் இவர்கள்
விஜயம் தடைப்பட்டுள்ளது. இதனை மெல்லவும்
முடியாமல் விழுங்கவும் முடியாமல் கலைஞர்கள் அவ
திப்பட்டு இன்னொரு தடவை விஜயம் செய்கிறோம்
என்று சமாளிக்க வேண்டியதாயிற்று தலைசிறந்த
தமிழ்க் கலைஞர் ஒருவரை வடக்கு கிழக்கு பகுதிக
ளுக்கு செல்ல அனுமதிக்காமை கண்டனத்துக்கு
மட்டுமல்ல கவலைக்குரியதுமாகும். எனினும் பைல
ட் பிரேம்நாத் வெளியீட்டு வீழாவுக்கு தான் நிச்
சயம் யாழ்ப்பாணம் வருவதாக எமக்கு உறுதிகூறி
யுள்ளார் எனவே எப்படியும் தீய அரசியல் நோ
க்க சக்திகளின் எதிர்ப்பை முறியடித்து யாழ் வரு
வார் என எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் காலநிலை மாறுகின்றதா?

தைப்பொங்கலை புத்தரிசியில் பொங்கி மகிழ்வது எமது வழக்கம். இந்தப் புத்தரிசி உண்மையிலேயே வயலில் விளைந்து அறுவடை செய்த நெல்லிருந்தே எமது பொங்கல் வழக்கம் தோன்றியகாலத்திலிருந்து பெறப்பட்டு வந்தது. ஆனால் தைப்பொங்கல் வருகின்ற ஆங்கிலத்திகதியான பொதுவாக அந்தப் பதினான்காம் நாள் எம்மில் எத்தனைபேர் எமது வயல்களில் பெற்ற புத்தரிசியிலிருந்து பொங்கல் படைக்கின்றோம். முன்னர் இருந்த காலநிலை எமக்கு ஜனவரி 14-ம் திகதியளவில் வயல்களில் நெல் அறுவடைக்குத் தயாராகி விட்டநிலையைத் தந்தது. ஆனால் இன்று பச்சை அரிசியைக் கடையில் அளந்து விலைக்கு வாங்கித்தான் நாம்புதுப்பொங்கல் கொண்டாடுகிறோம். தைப்பொங்கல் கொண்டாடுகின்ற நாளில் எமது வயல்கள் இன்று அப்போதுதான் மஞ்சள் நிறம்மாறாத பச்சை நிறமாகிக்கொண்டிருக்கின்ற இளம்பயிர்களுடன் இருப்பதைக் காண்கிறோம். காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவுதானா இது? வயல்கள் அறுவடையாகும் காலம் ஏறக்குறைய ஒன்றரை மாதங்கள் இன்று பின்போடப்பட்டிருக்கின்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்திநான்காம் ஆண்டு தென்மெற்கு மொன்சூன் காற்றால் ஏற்பட்ட மழை வீழ்ச்சியினால் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கு இந்தியாவின் மேற்குகரை பங்களாதேஷ், பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை ஆகிய நாடுகளில் அளவிட முடியாத பயங்கர சேதங்களை விளைவித்தது அண்மையில் இந்தியாவில் தமிழ் நாட்டில் பயங்கரப்புயலும் கடற்பெருக்கும் கணக்கிட முடியாத அளவு உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் விளைவித்தன. மே 1978-ல் கொழும்பைச் சுற்றிய பகுதிகளிலும், கொழும்பிலும் பெருமழை காரணமாக 1000 க்கு மதிகமானோர் வீடிழந்து போனார்கள். முன்எப்போதும் இல்லாத அளவு இத்தகைய இயற்கைத் தாக்கங்கள் எப்படி நிகழ்கின்றன என்பது எம்முன் உள்ள முக்கியமான கேள்வி.

ஆபிரிக்காவின் சில பகுதிகளில் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக வரட்சி நிலவி வருகின்றது. சகாரா பாலைவனத்தின் வடபகுதியில் வெப்பம் குறைவாகவும் தென்பகுதியில் வெப்பம் அதிகரித்துச் செல்வதாகவும் கருதப்படுகின்றது. தவிர சகாரா பாலைவனம் தெற்கு நோக்கி நகர்வதாகவும் அவதானிக்கப் பட்டுள்ளது. இவை எதனைத் தெளிவு படுத்துகின்றன.

இத்தகைய பல நிகழ்ச்சிகள் அல்லது ஒழுங்கற்ற நிகழ்வுகள் இன்று வளி மண்டல வியலாளர்கள். விஞ்ஞானிகள் ஆகியோரிடையே முரண்பாடான கருத்து மோதல்கள் தோன்ற வழிவகுத்திருக்கின்றன.

மேற்கத்தைய வளிமண்டல வியலாளர்கள், உலகின் வட கோளார்த்தப் பகுதியில் நிகழ்கின்ற காலநிலை அமைப்பு அப்படியே தெற்கு நோக்கி நகர்வதாக கருதுகின்றார்கள் சகாராப் பாலைவனத்தின் வடபகுதியில் வெப்பம் குறைந்து வருவதற்கும் அதன் தெற்கு நோக்கிய விரிவுக்கும் இதுவே காரணம் எனக் கூறுகின்றார்கள். ஐக்கிய அமெரிக்காவின் சில பகுதிகளிலும் யப்பான் பாக்கிஸ்தான், ஆகியவற்றிலும் அளவுக்கதிகமான மழைவீழ்ச்சி 1972-ல் ஏற்பட்டதற்கும் வழக்கமாக மழை பெய்துகொண்டிருக்கக்கூடிய பிரித்தானியாவில் வரட்சி நிலவியதற்கும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களே காரணம் எனக் கருதப்படுகின்றது. ஆபிரிக்காவில் தொடர்ந்து 1968 லிருந்து வரட்சி நிலவிவரும் பகுதிகள் அதிகம் உள்ளன. செனிகல், மாலி, மொறிற்றானியா, நைகர், சாட், மேல்வோல்டா, ஆகிய பகுதிகளில் தொடர்ந்து வரட்சி நிலவியதனால் மணல் வரண்டு இன்று தூசிப் புயல்கள் வீசுகின்றன. நைஜீரியா, ஐவரி கோஸ்ட், கானா, பெனின், டொகோ, சாம்பியா, கினியா, கமறூன் ஆகிய நாடுகளிலும் வரட்சி பயமுறுத்திக்கொண்டிருக்கின்றது. நீர்மட்டம் குறைந்து நதிகள், கிணறுகள். குளங்கள் எல்லாம் வற்றிவிட்டன. 1973 லிருந்து இந்தப் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் அல்ஜீரியா, மொரோகோ, டுனீஷியா, லிபியா வட ஆபிரிக்காவில் சூடான், சோமாலியா, எதியோப்பியா,

அ. சேனாதிராஜா
*B. A. B. Phill. Hons*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்யா, தன்சானியா ஆகிய எல்லா நாடுகளும் வரட்சியின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுள்ளன. ஆபிரிக்க வரலாற்றிலேயே அரிதாக ஏற்பட்டுள்ள இன்றைய வரட்சிக்கு காரணம் காலனித்துவ காலப்பகுதியில் இப்பிரதேசங்களில் செழித்திருந்த பசுமையான காடுகள் அழிக்கப்பட்டதே என்றும் கருதப்படுகின்றது. இயற்கைத்தாவர அழிப்பு நிலப்பரப்பிலிருந்து அதன் ஈரப்பதன் தாங்கும் ஆற்றலை இழக்கச்செய்து விடுகின்றது. ஆபிரிக்க வரட்சிக்குக் காரணம் உயரகலக்கோட்டுமையச் சுழல் காற்றுக்கள் (CIRCUMPOLAR WINDS) ஈரப்பதன் கொண்ட மத்திய கோட்டு காற்றுக்களைத் (EQUATORIAL WINDS) தடை செய்தமையே என்ற கருத்தும் நிலவுகின்றது.

தவிரவும் வரட்சி நிலைமைகள் மத்திய அமெரிக்காவிலிருந்து மேற்கு ஆசியா, இந்தியா வரையிலான ஒரு பரந்த பிரதேச அளவில் தென்பட்டுள்ளமையும் காலநிலை அமைப்பு முறையில் ஏதோ ஓர் ஒழுங்கீனம் நிகழ்ந்திருப்பதை தெளிவுபடுத்துகின்றன. தென்மேல் மழைவீழ்ச்சியின் தோற்றமும் அதன் பருவ ஒழுங்கற்ற தன்மையும் காலநிலை ஒழுங்கில் ஏதோ ஒரு அடிப்படையான மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டுமென ஊகிக்க இடம் தருவதாக உள்ளன.

புவியச்சு நிலையில் மாற்றம் ஏற்பட்டாலும், அல்லது அதன் காந்த சக்தியில் மாற்றம் இருந்தாலும் காலநிலைத்தன்மை பாதிக்கப்படலாம். பூமியில் வளிமண்டலத்திலும், சுற்றாடலிலும் ஏற்பட்டுள்ள அசுத்தங்கள் (POLLUTION) சூரிய கதிர்வீச்சைத் தடுப்பதன் காரணமாக உலகத்துக்குக் கிடைக்கும் வெப்பம் குறைந்து அதனால் குளிர்ச்சியடைகிறது என விவாதிக்கப்படுகிறது. கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து இன்று இவை 50 வீதத்தால் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை சூரியவெப்பத்தைத் தடைசெய்வதால் புவியை குளிர்மையடையச் செய்கின்றன எனவும் கருதப்படுகின்றது.

இந்த மாற்றங்கள் நிகழ்வதை அடிப்படையாகக்கொண்டு உலகம் ஒரு புதிய பனியுகத்தை நோக்கி(TOWARDS AN ICE AGE) நகர்வதாக ஒரு கோட்பாடும் இருந்து வருகின்றது. வழக்கமாக பனியுகம் நிகழ எடுக்கும் காலப்பகுதியிலும் பார்க்க இது விரைவாக நிகழ்வதாக கருதப்படுகின்றது. கடந்த தொடர்ந்த மூன்று பத்தாண்டுக் காலப்பகுதிகளில் பதிவாகியுள்ள வெப்ப நிலைகள் தொடர்ந்து உலகம் குளிர்ந்து செல்வதைக் காட்டுவதாகஅமைந்துள்ளன.

உலகம் தொடர்ந்து குளிர்ந்து செல்கின்றது என்ற கருத்துக்கு மாறாக வெப்பம் அதிகரித்து வருகின்றது. என்ற கருத்துக்கும் வலுவான ஆதாரங்கள் உண்டு. வருடா வருடம் எரிபொருட் பாவிப்பினால் வளிமண்டலத்தில் 927 மெற்றிக் தொன் அளவான காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் கலக்கின்றது. இது பச்சை வீட்டுத் தன்மையை (GREEN HOUSE EFFECT) குறைக்குமாதலால் புவியை மேலும் வெப்பமாக்குவே செய்யும் இத்தகைய நிலைமை காலநிலைத் தன்மைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. புவி தொடர்ந்து குளிர்ந்து செல்கின்றது என்ற கருத்தை இது மறுப்பதாக உள்ளது.

மேலும் சூரிய வெப்பத்தை பூமியின் மேற்பரப்பில் உள்ள அசுத்த மண்டலங்கள் மேல்மட்டத்திலேயே தடை செய்வதால் அசுத்த மண்டலத்துக்குள்ளேயே ஒரு புதிய நிலைமை அதாவது வெப்ப அதிகரிப்பு ஏற்பட்டு விடுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனால் புவி மேற்பரப்பில் உள்ள பனிமுகிழ்கள் (ICE CAPS) உருகத் தொடங்கி விடுகின்றன இதனால் கடல் மட்டம் உயர்ந்து கரையோரங்களில் காணப்படும் கிராமங்கள், நகரங்கள், என்பன கடலினுள் மூழ்கிவிடக் கூடிய நிலையையும் உருவாக்கலாம். கடலரிப்புகள் நிகழ்வதற்கும் இத்தகைய பனி உருகுவதும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது,

உலகின் சக்திப் பொருட் பாவனையும் வெப்பத்தை அதிகரிக்கின்றது. அணுசக்தி எண்ணெய், வாயு, நிலக்கரி ஆகியவற்றின் பாவனை புவியின் வெப்பநிலைமை அதிகரித்த நிலையில் வைப்பதற்கு மேலும் துணை புரிகின்றன. நகரப் பிரதேசங்களில் பொதுவாக அவற்றைச் சூழ உள்ள கிராமப் பகுதிகளிலும் பார்க்க 5—10°C உயர்ந்த வெப்பநிலை அதிகமாகக் காணப்படுகின்றது, உயர்ந்த கட்டிடங்கள் வெப்பத்தை விரைவில் ஈர்த்து விடுகின்றன. ஆனால் அவற்றை வெளியிடுவது குறைவு. இரவில் இவ்வாறு வெளியிடும் வெப்பம் அதிகம் கிராமப்பகுதிகளில் இயற்கைத் தாவரங்கள் அதிகம் இருப்பதனால் ஆறுதலாகவே வெப்பத்தை ஈர்த்து ஆறுதலாகவே அதனை வெளியிடும் தன்மை காணப்படுகிறது. ஆகையால் நகராக்கம் அதிகரித்துச் செல்வது வெப்ப அதிகரிப்பை ஏற்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதன் காரணமாக காலநிலை மையிலும் மாற்றத்தை ஏற்படுத் தக்கூடிய சூழ்நிலையை உருவாக் குகின்றது.

பொன்(BONN) பல்கலைக்க ழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹேர்மன் வுலென் (PROF, HERMAN FLOLAN) இயற்கைத் தாவரப்பிரதேசங்கள் விவசாயத் துக்கான பிரதேசங்களாக மாற் றப்படுவதன் காரணமாகவும் காலநிலைமாற்றம் நிகழும் என்று கருதுகின்றார். கடந்த 8000 ஆண் டுகளாக உலகின் 11 வீதமான நிலம் விவசாய நிலமாகவும், 20 வீதம் புல்நிலமாகவும் ஆக்கப்பட் டுள்ளன. ஆகவே உலகின் $\frac{1}{3}$ பகுதி அது முன்னர் இருந்த இயற் கையான நிலையில் இல்லை. மேலும் விவசாயத்துக்காக காடழிக்கப் படுதல் இன்றும் நடைபெறுகின் றது. இவை காலநிலையில் பார தூரமான மாற்றங்களை நிகழ்த்த வல்லன. என்று பேராசிரியர் வுலோன் கருதுகின்றார்.

சகாராப் பாலைவனம் ஆண்டு தோறும் வடக்கும் தெற்குமாக அரைமைல் தூரம் நகரக்காரணம் காலநிலை மாற்றம் அல்லவென றும், மாறாக இயற்கை வளங்க ளின் மேலதிகப் பாவனை அல்லது சுரண்டலே என்றும் விளக்கப்ப டுகின்றது. பனியுகத்தின் போது ஏற்பட்ட சுரங்கச் சுவடுகளைச் சுரண்டுவதினாலும் இது நிகழ்கின் றதென வாதிடப்படுகின்றது.

ஆர்க்டிக் கடல் உருகுமா னால் வழக்கமாக புவிப் பௌதி கவியலாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கு மாறான விளைவு ஏற் படுமென பேராசிரியர் வுலோன் மேலும் தெரிவிக்கின்றார். இவ் வாறு ஆர்க்டிக் பனி உருகுமேயா னால் மத்தியகோட்டுப் பகுதிக்கும் துருவப் பகுதிக்கும் இடையிலான வெப்ப வித்தியாசம் குறையும் இது அவ்வாறு நிகழ்வதனால் வெப்பப் பருவகாலங்களின் போதே நிகழும். அத்துடன் இந்த நிகழ்வு ஏற்படுமிடத்து உப அயன மண்டல உயரமுக்க முறை யும் தற்போதுள்ள வரண்ட வலயப் பகுதியும் ஏறக்குறைய 200 மைல்கள் வடக்கு நோக்கி நகருமென இவர் அபிப்பிராயப் படுகிறார்.

புவியின் வெப்பநிலை குறை யாது என்பதற்கு ஆதரவாக மேலும் ஒரு கருத்து தெரிவிக்கப் படுகின்றது. அதிகரிக்கும் என் ரோபி விதிப்படி (LAW OF INCR-EASE OF ENTROPY) இதுநிகழும் புவியானது குறைந்த வெப்பநி லையில் இருக்கும் போதெல்லாம் கூடிய வெப்பமுள்ள பிற கிரகங் களிலிருந்து புவிக்கு வெப்ப மாற் றம் நிகழ்ந்துகொண்டே இருக் கும். ஆகவே புவி அசுத்தமண் டலம் போன்ற காரணங்களினால் குளிர்ச்சி அடைந்து விடும் என்று கூறமுடியாது.

புவி குளிர்ந்து செல்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டும் கார ணங்களைப் போலவே அது வெப் பநிலையில் மாற்றமடையவில்லை. அல்லது வெப்பம் அதிகரித்துச் செல்கின்றது என்பதற்கும் வலு வான ஆதாரங்களினால் வாதிக்கப் படுகின்றது. புவி தொடர்ந்து குளிர்ந்து செல்கின்றதா அல்லது வெப்பநிலை அதிகரித்துச் செல் கிள்றதா என்பன ஒரு புறம் இருக்க பொதுவான, நிகழ்ந்து வந்த காலநிலை ஒழுங்கில் ஒழுங் கீனங்கள் நடந்து வந்துள்ளமை மிகத் தெளிவாக அவதானிக்கப் பட்டுள்ளன. காலநிலையை நிர் ணயிக்கும் காரணங்கள் பற்றிய ஆய்வில் தெளிவான அபிவிருத்தி ஏற்படும்வரை எடுகோள்களான முன் கூறல்கள் முற்றும் நம்பிக்கை தருவன எனக் கொள்ள முடி யாது. பொதுவாக 30 அல்லது 35 வருடங்களாக அவதானிக்கப் பட்டு வந்துள்ள வானிலை (WEATHER) அறிக்கைகளைக் கொண்டுதான் ஒரு பிரதேசத்தின் காலநிலை நிர்ணயம் செய்யப்படு கின்றது. இந்த முறையில் பூமி யின் தொடர்ந்து குறைந்து செல் வதாகப் பதியப்பட்டுள்ள வெப் பநிலை உலகம் அத்தகையதொரு காலநிலை மாற்றத்துக்கு உள்பட் டுச் செல்வதாதக் காட்டுகின்றது. இருப்பினும் விளக்கப்பட்ட பல் வேறு நிகழ்ச்சிகளும் மேலும் விரி வான ஆய்வை வேண்டி நிற்கின் றன.

## ★ புவியியல் ★

## 'தெமள பறைய'

சிங்களக் கவிதை நாடகங் களிலும் பாட்டு நாடகங்களி லும் வாசிக்கப்படும் ஒருவகை பறைக்குத் 'தெமள பறைய' என்று பெயர் உண்டு. இது தமிழ்ப் பறையாகிய மத்தளத் தைக் குறிக்கும்.

ஈழத்தமிழ் நாடக வளர்ச்சி நூலில் இருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தியின் இரண்டாவது ஆண்டு
நிறைவுக்கு எமது வாழ்த்துக்கள்

ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
தரித்திரத்திலும் பரோபகாரம்
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எளிமை
பதவியிலும் பணிவு

நல்லதை நினை நல்லதை செய்

★★ பூபாலசிங்கம் புத்தகசாலை ★★

4, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

கிளைகள்;
199, 1-ம் குறுக்குத் தெரு.
யாழ். புகையிரத நிலையம்.

தொலைபேசி: 7631

பருத்தித்துறையில்

அனைவரும் நாடும் மருந்து ஸ்தாபனம்

நேர்மை — நாணயம் — நியாயவிலை

★ ஆயுர்வேத மருந்துவகைகள்
★ ஆங்கில மருந்து வகைகள்

உங்களுக்கு தேவையான சகலவித மருந்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

★★★

ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்


பஸ் நிலையம், — பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ செல்வி ஏ. கதிஜா
68 புளக் 'ஜே'
மேற்கு சம்மாந்துறை.

பல்துறைக் கல்விப் பணியில் தனித்துவம் பெற்று விளங்கும் செவ்வந்தியே உன்பணி என் போன்ற பல்லாயிரக்கணக்கான க. பொ. த, (உ. த.) படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு உத வியளித்துள்ளது. சகல துறைப் பகுதிகளுக்கும் உனது சேவை நிலைநிற்கின்றது. உன்பணி மேலும் உயர, உனது படைப்புகளில் ஒன்ருக ஒரு விஞ்க் கொத்தையும் வெளியிட்டு புகழ் பெறுக.

வாழ்க செவ்வந்தி — வளர்க உன்பணி




★ ஈழக்குயில் இத்திரிஸ்
பொது நூலகம்
மருதமுனை கல்முனை.

செவ்வந்தி தன்பலத்தால் அடக்கி, பிடித்து வைத்திருக்கும் வாசகர்களுள் ஈழக்குயிலும் ஒரு வன். செவ்வந்தியைக் காணுது தவிக்கும் வேளை யில் செவ்வந்தியின் முதலாவது பிரசுரமான கால நதியை காணும் ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள். செவ்வந்தியில் ஆரம் பிக்கப்பட்டுள்ள புதுயுகம் ரெவேற்கத்தக்கது. மேலும் செவ்வந்திக்கு சில ஆலோசனைகள். செவ்வந்தி அளவை மாற்ற வேண்டாம். பேனு நண்பர் பகுதி வேண்டாம். இலங்கையின் இலக் கிய கர்த்தாக்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் அறிமுகப்படுத்தவும், கவியரங்கம் பகுதி ஒன்றை ஆரம்பிக்கவும். இவற்றில் கவனம் செலுத்தினுல் செவ்வந்தியின் வளர்ச்சி, ஆயுள் கணக்கிடமுடி யாது.

வாழ்க செவ்வந்தி — வளர்க அதன் பணி

★ எம். எஸ். சபீ உன் நிஸா
தெஹி தெனிய மடிகே
ஹதயலியத்தை.

நான் ஏப்பிரலில் க. பொ. த. (உ. த) பரீட்சை எடுக்கிறேன் பரீட்சைக்கு தேவையான பாடப்புத்தகங்களும் குறிப்புகளும் இருந்தாலும் தாங்கள் மாதா மாதம் வெளியிடும் செவ்வந்தி இதழால் மிகவும் பயன் பெறக்கூடிய தாகவுள்ளது. கடந்தசில மாதங்களாகஇதழ்கள் கிடைக்கவில்லை. மாணவருக்கு உதவும் வகையில் வெளிவரும் செவ்வந்தியை காலம் தாழ்த்தாது வெளியிட்டு உதவவும்,

★ ஐ. ஏ. ரகுமான்
மாவடிப்பளை,
காரைதீவு.

கனம் ஐயா! வணக்கம். நான் உங்கள் செவ்வந்தி மலரைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டி யது. நீங்கள் வெளியிடும் இம் மலரால் என் போன்ற இம்முறை க. பொ. த. (உ. த) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கும் வேறு சட்டம் கற் கின்ற மாணவர்களுக்கும் உதவியாக இருக்கின்றது தரமான கட்டுரைகளை வெளியிடுகின்ற உங்களை போன்ற நல்லவர்களை போற்ருமல் இருக்க முடி யாது, தொடர்ந்தும் செவ்வந்தி பெரு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

★ எஸ். எம் ஜெமீனு
மத்திய மகா வித்தியாலயம்
எருக்கலம்பிட்டி.

வாழ்த்துவேன் எந்நாளும்
ஓயாப் புகழால் அறிவைப் பெற்றெடுக்க
செழித்து வளரும் என் செவ்வந்தியை

புகழ் மிக்க கதை என்ன
அழகுமிக்க கவிதை என்ன
சிந்தனையைத் தூண்டும் நல்ல
சுட்டுரையாம் ஏராளம்
வாயார வாழ்த்துகிறேன்
வளர்ந்து வரும் என் செவ்வந்தியை

தொடரட்டும் உங்கள் பணி
செழித்து வளரட்டும் செவ்வந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ செல்வி சுந்தரி கதிர்காமத்தம்பி
பெரிய தபாற் கந்தோர்
கொழும்பு—1

அன்பின் ஆசிரியருக்கு! தங்கள் வாசகர்களில் நானும் ஒருவர் தங்களால் வெளியிடப்படும் சஞ்சிகையில் வரும் கட்டுரைகள் மிகவும் தரமானவை இத்தகைய ஒரு சஞ்சிகையை தொடர்ந்து பெற்று என் அறிவை வளர்த்துக் கொள்ள ஆவலாயிருக்கிறேன். தங்கள் சஞ்சிகையை நான் மட்டுமன்றி எமது வித்தியலங்கார வளாக மாணவர்களும் பாராட்டுகின்றூர்கள்.

தொடர்ந்து வெளியிட்டு எமக்கு உதவ வாழ்த்துகிறேன்.

★ செல்வி ராதிகா குணசிங்கம்
காலிவீதி,
தெஹிவளை.

அன்பின் செவ்வந்திக்கு, அலட்டல் நிறைந்த பத்திரிகைகள் மத்தியில் ஒவ்வொரு பக்கத்தையும் அறிவுக்கு விருந்தாக எமக்கு அளிக்கும் உனக்கு வாழ்த்துக்களைக் கூறுகிறேன் தீர்ப்புக் கூறமுடியுமா? பகுதி மிகவும் அருமை. வினுவை வாசித்ததும் விடையை உடன் படிக்கவேண்டும் போல் உள்ளது. போட்டியில் பரிசுபெற்ற கதைகள் சுவையாக உள்ளன. பரிசளிப்பு விழா சிறப்புற நடந்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். சட்டம் சம்பந்தமான விடயங்களை அதிகம் பிரசுரிக்கவும் மிகவும் சுவையாகவுள்ளது. ஆனுல் சட்டத்துறை சார்ந்தவளல்ல நான். இரண்டாண்டுகள் ஈடிணையற்ற சேவைக்கு எப்படி வாழ்த்துக் கூறுவது!

★ க. சிவலோகவதி
வசாவிளான்.

வளர்ந்துவிட்ட செவ்வந்திக்கு வாழ்த்துக்கள். முத்துறைகளை இணைத்து முழுவெற்றி பெற்றுவிட்ட முத்தான செவ்வந்தியை வாசசர்களுக்கு தொடர்ந்து வழங்கிவரும் ஆசிரியருக்கு எனது பாரட்டுக்கள். காலம் தாழ்த்தாது உடனுக்குடன் வெளியிடாமையால் எனது இதயம் சில வேளை வருந்துகிறது. செவ்வந்தி நின்றுவிட்டதோ என்று மாணவச் செல்வங்களுக்கு ஓர் அரிய பொக்கிஷமான செவ்வந்தி மங்காது வெவிவர வாழ்த்துகிறேன்,

★ ச. புவனேந்திரன்
கொல்லங்கலட்டி.

சிறந்த போட்டியை நடாத்தி வெற்றிவிழாவாக பரிசளிப்பு விழாவை இதயங்கவர்ந்த வாசகர்களுடன் கொண்டாடிய செவ்வந்திக்கு பாராட்டுக்கள். துணிச்சலான ஆசிரியர் தலையங்கம் தொடர்ந்தும் தேவை. இதுபோல் துணிச்சல் முயற்சிகள் நிறைந்த கட்டுரை ஒன்று செவ்வந்தியில் தொடர்கிறது அது வடக்கு கிழக்கின், பொருள்வளம் சகலருக்கும் பயன் நிறைந்தது. செவ்வந்தியின் இலட்சியப் பணிக்கு வெற்றி நிச்சயம். வாழ்க செவ்வந்தி, வளர்ப்போம் நாம் செவ்வந்தியை.

★ பொன் பூலோகசிங்கம்
20, சிறபறி காடின்ஸ்
கொழும்பு,4

வணக்கம்! மாணவர்களுக்கு செவ்வந்தி செய்துவரும் சேவை போற்றத்தக்கது. உங்கள் பணி இனிதே தொடர எனது வாழ்த்துக்கள் கட்டுரைகளை அதிக அளவில் வெளியிடும்படி வேண்டுகிறேன்.

★ எப். எம். அமீருள் அன்சாரி
மசூர் மௌலானு வீதி,
மருதமுனை 1

செவ்வந்தி கண்டேன், பெருமிதம் அடைந்தேன். கலை, இலக்கியம், சட்டம் ஆகிய ரீதியில் மாணவ உலகுக்கு சேவை செய்துவரும் செவ்வந்திக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். பின்தங்கிய பகுதிகளில் கல்வி பயின்று கொண்டிருக்கும் எம்போன்ற மாணவர்க்கு செவ்வந்தி ஊன்றுகோலாக இருந்து வழிகாட்டுகின்றது. வாழ்க செவ்வந்தி வளர்க அதன் கல்வித் தொண்டு.

★ ஏ. எஸ். கே. ராஜரட்ணம்
முதலாம் டிவிசன்
ஸ்பிறிங் வலி குருப்
ஸ்பிறிங்வலி.

உங்கள் அன்பு வாசகர்களில் நானும் ஒருவன். ஆனுல் இதழைப் பெறுவது கஷ்டமாக உள்ளது. க. பொ. த. உயர்வகுப்பு மாணவனுகிய நான் எனது படிப்பை ஒழுங்காக நடத்த உங்கள் செவ்வந்தியில் வரும் கட்டுரைகள் உதவுகின்றன இக்கட்டுரைகள் நிறைந்த பிரதிகளை உடன் பெற விரும்புகின்றேன். இது எனக்கு பெரும் உதவியாக இருக்கும். என்றென்றும் நன்றியுடையவனுயிருப்பேன்.

# ஒரு ஓவசியர் சமத்துவம் பேசுகிறார்.

அன்று பத்தாம் தேதி. வழமையிலும் பார்க்க சற்று முன்னதாகவே புறப்பட்ட நாகரத்தினம் வேலைத்தளத்தை நோக்கி நடையைக் கட்டினான். அன்று அவனுக்கு சம்பள நாள். ஆனால் இந்தச் சம்பளநாள் ஒவ்வொன்றும் அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நாளாக அமைவதில்லை. கையிலே சிறிது பணம் வருமென்ற ஒரு மனநிறைவு உண்டாகுவது உண்மைதான் என்றாலும் அதனைத் தொடர்ந்து அந்தப் பணத்தில் அவன் வீட்டிற்குக் கொண்டுபோகின்ற தொகையை நினைத்தால் அந்த நிறைவு மறந்து துயரமும், அதனை மீறி ஒருவித ஆவேச உணர்வும் எழும்.

எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்த நிலை சகஜமானது என்றாலும் அவனுக்கு ஏற்படும் அந்த ஆவேச உணர்வுக்கு நியாயமான காரணங்கள் இருக்கத்தான் செய்தன. சம்பளம் எடுத்தும் கடன்களைத் தீர்த்துவிட்டு மறுபடி கடன்களை வாங்குவது பொதுவாகவே தொழிலாளர்களின் நிலையாக இருந்தாலும் அவனும் அவனோடு வேலைசெய்யும் மற்றைய தெரழிலாளர்களும் சம்பளம் எடுத்ததும் வாங்காத சில 'கடன்'களையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. சம்பளப்பணத்தில் மூன்றிலொரு பங்குக்கு மேல் அவர்கள் கூடாரத்தைவிட்டு வெளியே வருவதற்கிடையில் பறிபோய்விடுகிறது. மீதி மூன்றில் இரண்டு பங்கு அவர்கள் கைக்கு வரவேண்டுமானால் இந்த இழப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்,

அவன் வேலைக்காகிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போய் வேலைகளை ஆரம்பித்தான். 'ஓவசியர்' சின்னத்தம்பி அருகே வந்து பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்,

''என்ன நாகரத்தினம் இண்டைக்குப் பேப்பர் பாத்தியே?''

''இல்லை சேர், எங்கை நேரம்? விடிய எழும்பி வேலைக்கு வந்திட்டான்...''

''எங்கடை 'கம்யூனிஸ்ட்டு'கள் கடைசிவரையும் தங்கடை கொள்கையை விடமாட்டினம். இன்றைக்குத் தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார். தெரியுமே?''

நாகரத்தினம் சுவாரசியமாகக் கேட்கவேண்டுமென்பதற்காக கேள்வியைப் போட்டு நிறுத்துகிறார். சின்னத்தம்பி. அவன் என்ன? என்ற பாவனையில் அவரை நோக்குகிறான். அவனுக்கு சம்பளம் பற்றியும் அதில் வெட்டப்படவிருக்கும் தொகை பற்றியும் நினைவு. ஓவசியர் வழமைபோல் இன்றைக்கும் கம்யூனிசம் பேச அரம்பித்தார்.

தோழர் சின்னத்தம்பி பொதுவாகவே கம்யூனிசம் பேசுபவர்தான் அவர் ஒரு கம்யூனிஸ்ட் பழம். ஆனால் இந்தப் பத்தாம் திகதி காலைக்கும் அவர் தொழிலாளர்களிடமிருந்து தமக்குரியதாகக் கூறிக்கொள்ளும் சில தொகைகளை அறவீடு செய்யும் நாள் அது! அன்று ஒவ்வொரு தொழிலாளியோடும் மிக நெருங்கிச் சென்று தோழமையோடும் ஆதரவோடும் அடுக்களை முதல் அரசியல் வரை அலசுவார். பாட்டாளி வர்க்கத்தினரின் கஷ்டநஷ்டங்கள் பற்றி அவர்களுடன் மிக்க கவனத்துடன் உரையாடுவார்.

ஆனால் சம்பளம் வழங்கும் உத்தியோகத்தர் வந்தவுடன் அவருக்கு தொழிலாளர்களின் கஷ்டங்கள் துன்பங்களைவிடத் தமது கஷ்டங்கள் தெரியத் தொடங்கும் மாலை வாங்கவேண்டிய 'மென்டிஸ் ஸ்பெசல்' ஆட்டிறைச்சி இவற்றுக்கான 'பில்' தொகைகள் மனதில் கிளம்பும். அதன் பின் அவர் தொழிலாளி வர்க்கத்தின் முதல் எதிரியாக மாறிவிடுவார்.

நேரம் பத்துமணி ஆகியதும் சம்பளம் வழங்கும் உத்தியோகத்தர் வந்தார். தொழிலாளர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பெருமூச்சுகளோடு அங்கே வந்தனர். அறை வாசலுக்கருகில் ஒரு கதிரையைப் போட்டுவிட்டு ஓவசியர் சின்னத்தம்பியர் இருந்தார், அவரது கைகளில் ஏதோ கணக்குகள் எழுதப்பட்ட கடதாசி இருந்தது.

தொழிலாளர்கள் ஒவ்வொருவராக உள்ளே போய் கையெழுத்துப் போட்டுப் பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே வருகிறார்கள். வாசலில் ஓவசியர் அவர்களிடமிருந்து சிறு தொகைகளைப் பெற்றுக்கொள்கிறார்.

★ கோப்பாய் ★

சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் புதிய சகாப்தம் படைத்து வரும்
செவ்வந்தியின் இரண்டாவது ஆண்டு
நிறைவுக்கு எமது அன்பு வாழ்த்துக்கள்.

தமது நிறைவான சேவையால் நிலையான
இடத்தைப் பெற்றுவிட்டவர்கள்

கமலா அன் பிறதர்ஸ்

★ பாடசாலை மாணவர்களுக்கு தேவையான:

- புத்தகங்கள்
- அப்பியாசக் கொப்பிகள்
- கணித உபகரணங்கள்
- மற்றும் சகல உபகரணங்களும்

★ அழகுசாதனப் பொருட்கள்
★ தையல் நூல்கள், தையல் உபகரணங்கள்
★ நவநாகரீகப் பொருட்கள்
★ இலங்கை இந்திய நாவல்கள், கொமிக்ஸ் சஞ்சிகைகள், கவிதை தொகுப்புகள்

இன்னும் உங்களுக்கு தேவையான சகலவிதமான பாவனைப்பொருட்களையும்
ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்,

## கமலா அன் பிறதர்ஸ்

## KAMALA & BROTHERS

இல. 3 மக்கள் சந்தை பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரெத்தினம் கையெழுத்துப் போடும்போது வரவுப் பதிவு டாப்பைப் பார்க்கிறுன், அவனுக்கு இருபத்தைந்து நாளுக்கு வரவு அடையாளம் இடப்பட்டிருக்கிறது. எட்டுரூபாவின்படி இரு நூறு ரூபாய்களை வாங்கிக் கொண்டு வெளியே வருகிறுன். அவன் மனம் கணக்குப் பார்க்கிறது, உண்மையில் வேலைக்கு வந்த நாட்கள் இருபது. மீதி ஐந்து நாளும் ஓவசியர் ஐயாவின் கைவரிசை. (இது ஒன்றும் புதுமையானதல்ல. வழமையாகவே நடப்பதுதான்) வெளியே வந்ததும் ஓவசியர் கையை நீட்டியபடி ''ஐம்பது ரூபா என்றுர்அவனுக்கு திக்கென்றது,

நியாயப்படி அவன் வேலை செய்த இருபது நாளுக்கும் பார்த்தாலும் நூற்றி அறுபது ரூபா வரவேண்டும். மீதி நாற்பது ரூபா தான் ஓவசியர் வாங்குவார் என அவன் நினைத்தான். ஆனல் ஐம்பது ரூபா கேட்கிறுரே?

''ஐயா நான் இருபதுநாள் வேலை செய்தனுன்......'' என்று பயந்துகொண்டே முணுமுணுத்தான் நாகரெத்தினம்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ வாறமாதம் வேலை செய்யிற எண்ணம் இருக்கோ இல்லையோ? என்று அதட்டினுர் ஓவசியர். அப்போது அவரது சிவப்புநிற சேட்டில் மட்டும்தான் கம்யூனிசம் இருக்கிறது என்று நினைத்துச் சிரித்துக் கொண்டு ஐம்பது ரூபாக்களை கொடுத்து விட்டு வந்தான்,

''நாகரெத்தினம்'' பின்னுலிருந்து மறுபடி கூப்பிட்டார் ஓவசியர், அவன் திரும்பிப் போனுன்' ''அண்டைக்கு தேத்தண்ணி குடிச்ச காசு......''என்று இழுத்தார் ஓவசியர்.

சில நாட்களுக்கு முன் ஒரு நாள் காலை ஓவசியர் சின்னத்தம்பியும் தானுமாக தேத்தண்ணி குடித்தது நினைவு வந்தது. அன்று அவன் வேலைக்கு வந்தபோது சற்றுத் தாமதமாகி விட்டது. ஓவசியர் முதலில் வேலைதர மறுத்து விட்டார். பிறகு.''வா நாகரெத்தினம், ஒரு தேத்தண்ணி குடிச்சிட்டு வருவம்.'' என்று அழைத்தார். அவனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை, அன்றைக்கும் போத்தல் எடுத்திருக்கின்றுர் போலும். அதனுல்தான் இந்த சமத்துவம் என்று எண்ணிக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்தான் நாகரெத்தினம்.

தேநீர் குடித்துவிட்டு எழுந்ததும் ''உன்னட்டைக் காசு இருக்குதோ நாகரத்தினம்?'' என்று கேட்டார் ஓவசியர்.

''இல்லை சேர்...'' என்று தயங்கினுன் நாகரத்தினம். உண்மையாகவே அவனிடம் அப்போது ஒரு சல்லிக் காசும் இல்லை

''சரி நான் குடுக்கிறன் பிறகு பார்ப்பம்......', என்றபடி கடையில் காசைக் கொடுத்துவிட்டு ' சரி நீ போய் வேலையைச் செய்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்

அந்தத் தேனீர்க்கான பணத்தைத்தான் இப்போதுஅவர் கேட்கிறுர் என்று புரிந்துகொண்ட நாகரத்தினம் அவரை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் அருவருப்போடு பார்த்துக்கொண்டு ஒரு இரண்டு ரூபாவைக் கொடுத்து விட்டு திரும்பினுன். மீதிக்காகக் காத்திருக்க அவன் விரும்பவில்லை

சில நாட்களுக்கு முன்னர் ஓவசியரும் அவரது நண்பர்கள் சிலரும் பேசிக்கொண்டிருந்த போது இவனும் அருகில் நின்றிருந்தான். அப்பொழுது 'சுரண்டல்' பற்றியும் முதலாளித்துவம் பற்றியும் காரசாரமாகவும் தீவிரமாகவும் கண்டித்துப் பேசிய ஓவசியரை அவன் நினைத்துக் கொண்டான். அப்படியானுல் இப்பொழுது அவர் செய்வது என்ன; ஐந்து நாட்களை மேலதிகமாகப் பதிந்து நியாயமற்ற முறையில் அரசாங்கத்தை சுரண்டுவது போதாதென்று மேலதிகமாக ஒரு பத்து ரூபாவையும் தேநீர்க்காசு என்று சில ரூபாய்களையும் இந்த ஏழைத் தொழிலாழியிடமிருந்து சுரண்டுகின்ற இந்தக் கொடியவனைவிட வேறுயாரை 'பூர்ஷ்வா' என்றும் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதி என்றும் கூறமுடியும். நாகரத்தினத்தின் நெஞ்சு ஆத்திரத்தில் கொதித்தது. ஆனல் அவனுல் என்ன செய்ய முடியும்; எதிர்த்துக் கதைத்தாலோ நியாயத்தைப் பேசினுலோ இப்போது கிடைக்கின்ற சில நாட்களுக்கான வேலையும் இல்லாமல் போய்விடும்

அன்றைக்கு அந்தநண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு நண்பர் ''இன்றைக்கு பொதுவுடமை பொதுவுடமை என்று பேசிக்கொண்டு திரியிறவர்கள் தான் உண்மையில் பெரிய முதலாளிகளாகவும் பணமுதலைகளாகவும் இருக்கின்றுர்கள். அவர்கள் தங்கள் சுயரூபங்களை மறைப்பதற்காகத்தான் இந்தக் கம்யூனிச வேஷத்தை அணிந்து

கொள்கிறார்கள். ஆனால் ஒன்று உண்மை, உண்மையான கம்யூனிச பொதுவுடமைச் சித்தாந்தத்தை நானும் வரவேற்கிறேன் அது நியாயமான முறையில் இந்த உலகம் முழுவதும் பரவ வேண்டும். ஆனால் இந்தக் கம்யூனிசம் ஒரு சிவப்புச் சட்டையைப் போல இலகுவில் போடுவதற்கும் கழற்றுவதற்கும் உரியதல்ல. என்று பேசினார்.

இன்றைய கம்யூனிசப் பிரமுகர்களில் பலர் உல்லாசமாகக் கார்களில் பவனி வருவதையும் மாளிகைகளில் மின்விசிறிகளின் கீழ் கோலக்குமரிகளுடன் கொஞ்சி விளையாடுவதையும், அந்நியச் செலாவணி மோசடிகளின்கீழ் குற்றப்பட்டு நிற்பதையும் உதாரணங்காட்டிப் பேசிய அந்த நண்பர் மீண்டும்,

''அந்தப் பிரமுகர்களின் சொத்துக்களெல்லாம் உண்மையில் ஏழைகளைச் சுரண்டி பெற்றவைகள்தான்.' என்று கூறி முடித்தபோது அதனை அவசரமாகவும் ஆவேசமாகவும் மறுத்துரைத்தார் ஒவசியர். அத்தகைய சுரண்டல் சொத்துக்கள் ஒன்றாகப் பிரத்தியட்ச தரிசனம் கொடுத்துக்கொண்டிருந்த ஒவசியரின் புத்தம்புதிய ஸ்கூட்டரையே அப்போது முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான் நாகரத்தினம்.

சமயாசமய அடிப்படையில் ஐந்து வருடங்களுக்கு மேல் இந்தத் திணைக்களத்தில் தொழிலாளியாக வேலைபார்த்து வருகிறான் நாகரத்தினம். இரண்டு வருடங்களுக்கு முன் நாலைந்து இடங்களில் இழைப்பிடிக்கப்பட்டிருந்த பழைய காற்சட்டையும் நிறம் மங்கிய சேட்டுமாக சின்னத்தம்பியர் அந்த இடத்திற்கு ஒவசியராக வந்து அவர்களை அதட்டி உருட்ட ஆரம்பித்த காலத்தை நினைத்துப் பார்த்தான் அவன். இந்த இரண்டு வருடங்களில் மாதம் சுமார் முந்நூற்றைம்பது ரூபாவிற்கும் குறைவான சம்பளம் எடுக்கின்ற தினமும் சிகரெட் சாராயம், இறைச்சி இவற்றோடும் நண்பர்கள் குழாத்தோடும் வாழுகின்ற ஒவசியர் சின்னத்தம்பிக்கு அந்த ஸ்கூட்டர் உரிமையானது எப்படி என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம் அதே சின்னத்தம்பி வார்த்தைக்கு வார்த்தை பொதுவுடமை பேசுவது கேலிக்குரிய விஷயம்,

அன்றைக்கு வேலைசெய்து முடிந்ததும் ஒவசியர் எல்லாரையும் மறுநாள் வரும்படியும் எல்லாருக்கும் வேலை உண்டென்றும் கூறிய அதிசயத்தைக் கேட்டு வியந்தபடி மறுநாள் வந்த நாகரத்தினம் ஓர் அதிசயக் காட்சியை காண நேர்ந்தது. அதே திணைக்களத்தில் வேலைசெய்யும் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரான திருஞானசம்பந்தரின்வீட்டு வாசலில் அவர்கள் அலுவலக 'ஸ்டோரி'லிருந்து வேலை நடக்கும் இடமொன்றிற்கு சீமெந்து போய்க்கொண்டிருந்தது. அதிலிருந்து சில சீமெந்துப் பைகள் இறக்கப்பட்டு அவரது வீட்டிற்குள் கொண்டுபோகப்பட்டன. அவர் புதிதாக வீடொன்று கட்டுகிறார் என்பது நாகரத்தினத்திற்கு தெரியும். திணைக்களத்தின் சீமெந்து பொதுவுடமையாகின்ற விஷயத்தை விளங்கிக்கொள்ள அவனுக்கு அதிகநேரம் எடுக்கவில்லை.

வேலையாட்கள் அனைவரையும் அழைத்த ஒவசியர், திருஞானசம்பந்தரின் வீட்டைச் சுற்றியுள்ள காணிப் பற்றைகளை வெட்டி துப்பரவு செய்யும்படி கூறினார். நேற்று முன்தினம் சம்பந்தர் வீட்டில் ஒவசியர் சின்னத்தம்பிக்கு 'விருந்து' நடந்தது. அதன் விளைவுதான் இவை என்று புரிந்து கொண்டான் நாகரத்தினம்.

நாகரத்தினம் போன்ற தொழிலாளர்கள் குடியிருக்கும் சிறு குடில்கள் இருக்கும் அரசாங்கக் காணியைத் துப்பரவு செய்ய வேண்டுமென்று அவர்கள் மாதக்கணக்காக வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எதுவும் கவனிக்கப்படவில்லை. ஆனால் சம்பந்தர் வீட்டிலே கேட்காமலே இத்தகைய உதவி செய்யப்படுகிறது. இதுதான் சின்னத்தம்பியின் பொதுவுடமை.

அந்தமாதம் திருஞானசம்பந்தரின் காணி துப்பரவாகியது மட்டுமல்லாமல் அவர் கட்டிவரும் வீட்டிற்கு வேலைசெய்வதற்கும் இவர்கள் அனுப்பப்பட்டதால் அந்தமாதம் எல்லாத்தொழிலாளர்களுக்கும் சராசரி இருபத்தெட்டு நாட்களுக்கு மேல் வேலைகிடைத்தது. சின்னத்தம்பிக்கும் சம்பந்தர் வீட்டில் அடிக்கடி விருந்து நடந்தது, அரசாங்கத்தின் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு தனிநபருக்கு வேலை செய்வது நாகரத்தினத்துக்கும் சக ஊழியர்களுக்கும் தவறென்று தெரிந்தபோதும் அவர்கள் வயிறு காயாமல் இருக்கவேண்டுமே என்பதற்காக உழைத்தார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

அடுத்த பத்தாம் தேதி வந்தது காலையிலேயே தொழிலாளர்கள் யாவரும் ஒன்றுகக் கலந்து பேசி ஒரு முடிவோடு வந்திருந்தார்கள் வழமைபோல் ஓவசியர் கதிரையில் வீற்றிருந்தார். புகை மண்டலங்களுக்குள் மூழ்கியபடி சிவந்த கண்களோடு வாசலைப் பார்த்தபடி இருந்தார். முதலில் நாகரத்தினம் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வெளியே வந்தான் சின்னத்தம்பி கையை நீட்டிய படி ''இருபத்தைந்து'' அவன் அலட்சியமாக அவரைப் பார்த்து ''இது நான் உழைத்த பணம் என்னிடம் கேட்க நீ யார்?'' என்றுன்.

''டேய்! மரியாதையாய்ப் பேசு அடுத்தமாதம் என்ன செய்யப் போருய்?,' என்று மிரட்டினுர் ஓவசியர்,

எங்களுக்கும் கைகால்இருக்கு நாங்கள் உழைச்சு சாப்பிடுவம் என்று கூறியபடி நடந்தான். நாகரத்தினம். அவனைத் தொடர்ந்து எல்லாத் தொழிலாளர்களும் ஓவசியரை அருவருப்போடு பார்த்தபடி விரைந்தார்கள். வீறு கொண்ட அந்தப் புதிய தலைமுறையை விழித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார் 'கம்யூனிஸ்ட் சின்னத்தம்பி.

★

## செவ்வந்தியில் ஆக்கம் இடம்பெற

தரமான சிறுகதை, கவிதை துணுக்குகள் உண்மைச் சம்பவங்கள், சாதனைகள் புவியியல், பொருளியல், தமிழ், அரசியல், வர்த்தக சட்டம்மற்றும்இலக்கிய கட்டுரைகள் வாசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டு தபால்மூலம் ஆசிரியர் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். எமக்கு கிடைக்கும் ஒழுங்கில் இவை பிரசுரமாகும் என்பதை கவனத்தில் கொள்க.

★ ஆசிரியர்

# ஒரு கிராமத்திற்கு மின்சாரம் வருகிறது——

கவியரசன்

இலையோடும்
அலை ஓடும்

வயல் வெளியை வகிடெடுத்த
புதுத் தெருவின் எதிர் முகங்கள்-
இருபுறத்தும் தலையுயர்த்தி...
இருட் கறுப்பாய் எழுந்து நிற்கும்
கருந்தூண்கள்...!

புல் சரிந்த
வாய்க்காலின் இருபுறமும்
வயல் வரம்பின் மேலேயும்
செயல் கெட்டுப் பலகாலம்
புரண்டிருந்த
கருந்தூண்கள்-
திடீரென்று உயிர்கொள்ளும்

கோழி குரல் கொடுத்து
அதிகாலை விழிப்பெடுக்கும்
என்னூரின் தலை மேலே
விஞ்ஞான விரிப்புக்கள்.

கூரையற்றுச் சடசடத்த
வாகனங்கள்-
இவைகாவும்
ஏணிகளும் தண்டுகளும்
ஒரு நாளில் தெருவிறங்கக்
கம்பிகளும், கோப்பைகளும்
கருந்தூணை அரவணைக்கும்-!

தெருமேலே
வயல்மேலே,
இன்னும் தொலைவு கொண்டு...
திருப்பங்கள் நிறைந்திருக்கும்
கல்லொழுங்கை மேலேயும்-
பளபளத்து நீள்கின்ற
வெண்தகடாய்க்
கம்பிகளின் முடிவற்ற
நீட்சி—!

பெருந் தெருவின் ஓரத்தில்-
சடைத்திருந்த குடைவாகை-
நிசியில் பயங்காட்டத்
தலைவிரித்த பனை மரங்கள்

சிவப்புத் தளிர் மலர்த்திச்
சலசலக்கும் அரசமரம்—
ஒவ்வொன்ருய்...
இலையிழந்து
கிளையிழந்து,
உடலிழந்து...
உயிரிழக்கும்—!

குடைவாகை நிழல் விரித்த
பெருந் தெருவின்
தார் விரிப்பில்-
நடையின்றி வெயில் தகிக்கும்...

கரிக்குருவி பொந்தெடுக்க...
பனங்காகம் கூச்சலிட
இருப்பாக அமைந்தபடி
தொலைவிருந்தும் பார்வை
கொள்ளும்,

பெருமரங்கள்—

வெறுந் தூண்கள் சிலவற்றின்
தலை எடுப்பில்-
நிலம் தழுவும்...!

மதில்கள், குரோட்டன்
எனப் படர்ந்திருக்கும்
வீடுகளில்—
புதுமாற்றம், திடீரென்று...
தலைக்குமேல் விளக்கேந்திக்
கரகமிடும் சிலவீடு...
நீலத்தில் குளுகுளுப்பாய்க்
கோலமிடும் இன்னும் சில—
எனினும்
பலவீட்டில்...
திரிதூண்டி, விளக்கெடுத்துத்
தீப்பெட்டி உரசலினுல்
மெதுமெதுவாய்ச் சிறுவெளிச்சம்
சிணுங்கிச்
சிணுங்கி அழும்—!

இனிமேல்
என தூரில்...
இருளில் முகங்காட்டும்
தெருவிளக்கு-
நீண்டதென
விரைகின்ற கம்பிகள் மேல்
குருவிகளின் குடியிருப்பு—!

★ மூன்றுவது பரிசு பெற்ற கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் பிரசித்தி பெற்ற நகை வியாபாரிகள்
● நம்பிக்கை ● நாணயம் ● நியாயவிலை

# செல்லையா அன் சன்ஸ்

222, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு
நவீன முறையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

VPP உடன் கவனிக்கப்படும்.

போன்: 7659

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நகரில் தலைசிறந்த மருந்து ஸ்தாபனம்

ஒருதடவை விஜயம் செய்தால்
தொடர்ந்தும் விஜயம் செய்வீர்கள்

★ உங்களுக்குத் தேவையான சகலவிதமான ★
மருந்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்:

# அன்னை மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

மக்கள் சந்தை

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் - கிழக்கின் பொருளாதார வளம்

## யாழ் குடா நாட்டின் தரைகீழ் நீர்வளம்

S. T, B- இராஜேஸ்வரன் B A (HONS) CEY-

(சென்ற இதழ் தொடர்)

ஈ. 150—500 பங்கு ஆயின் சாதாரணநீர்
உ. 500—1000 பங்கு ஆயின் சவர்நீர்
ஊ. 2000 பங்கு ஆயின் கடல்நீர்

குடாநாட்டில் செய்யப்பட்ட சில ஆழ்துளை களைக் கொண்டு பார்க்குமிடத்து குறிப்பிட்ட ஆழத்திற்கு கீழ் உவர்த்தன்மை ஆயிரக்கணக்காக கூடுகின்றது. மேல் மட்டங்களில் மட்டும் நன்னீர் அமைப்பும் கீழ்மட்டங்களில் உபயோகத் திற்குதவாத நீரும் காணப்படுகின்றது. பின்வரும் இரு உதாரணங்கள் எவ்வாறு உவர்த்தன்மை ஆழத்துடன் வேறு படுகின்றது என்பதைக் காட்டுகின்றது.

| உதாரணம் 1 | | | உதாரணம் 2 | | |
|---|---|---|---|---|---|
| ஆள்துளை K N I | | | ஆள்துளை P T | | |
| காரைநகர் | | | புத்தூர் | | |
| துளையின் ஆழம் 75 அடி | | | துளையின் ஆழம் 75 அடி | | |
| உவர்த்தன்மை நிலை | | | உவர்த்தன்மை நிலை | | |
| ஆழம் | | | ஆழம் | | |
| 10 அடி | 560 | PPM | 10 அடி | 420 | PPM |
| 15 ,, | 540 | ,, | 15 ,, | 250 | ,, |
| 20 ,, | 680 | ,, | 20 ,, | 230 | ,, |
| 25 ,, | 1310 | ,, | 25 ,. | 220 | ,, |
| 30 ,, | 1900 | ,, | 30 ,, | 220 | ,' |
| 35 ,, | 1960 | .' | 35 ,, | 220 | ,, |
| 40 ,, | 6060 | ,, | 40 ,, | 240 | ,, |
| 45 ,, | 16,160 | ,, | 45 ,, | 220 | ,, |
| 50 ,, | 17,000 | ,, | 50 ,, | 220 | ,, |
| 55 ,, | 17,000 | ,, | 55 ,, | 220 | ,, |
| 60 ,, | 17,000 | ,, | 60 ,, | 230 | ,, |
| 65 ,' | 17,000 | ,, | 65 ,, | 300 | ,, |
| 70 ,, | 17,000 | ,, | 70 ,, | 260 | ,, |
| 75 ,, | 17,000 | ,, | 75 ,, | 320 | ,, |

இவ் அட்டவணைகளில் இருந்து எமக்கு புலனாவது என்னவென்றால் தரை கீழ் நீர் எனலாம் எல்லாமட்டங்களிலிருந்தும் பயன்படுத்த முடியாது என்பது இடத்திலும் காலத்திலும் நீரின் பண்பு மாறிக் கொண்டே இருக்கும். எனவேதான் வளம்பயன்பாடு கட்டுப்பாடு உடையது.

மழைவீழ்ச்சியில் $\frac{1}{3}$ பங்கு நிலத்துட் புகுந்து தரைகீழ் நீராகிறது என்று ஆராச்சியாளரின் கருத்தின் படி 30 அங்குல மழைவீழ்ச்சியிருக்குமானால் ஒவ்வொரு ச. மைல் பரப்பிற்கும் 640,000 தொன் மழை நீர் புகும் எனலாம். இவ்வாறு புகுந்த நீரில் $\frac{1}{2}$ பங்கை மீட்டால் நிரந்தரமாக ஒரு கியூ செக் (CUSEC) வீகிதம் 136 நாட்களுக்கு 250 ஏக்கர் பயிர் செய்ய நீர் விநியோகிக்கலாம் என்று ஆராச்சியாளர் குறிப்பிடுகின்றனர். குடாநாட்டைப் பொறுத்த அளவில் வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்திலேயே பெரும் பகுதி மழைகிடைக்கின்றது இதை இவ்வுதாரண அட்டவணை காட்டுகிறது.

| அவதான நிலையம் | ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சி 1955-1966 (அங்குலம்) | வடகீழ்ப் பருவ மழைவீழ்ச்சி 1955-1966 (அங்குலம்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 47.07 | 38.05 |
| காங்கேசன்துறை | 49·07 | 39·70 |
| ஊர்காவற்றுறை | 40·70 | 31·90 |
| பளை | 47·40 | 43·90 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 51·50 | 39·20 |
| இராமநாதன் ,, | 51·80 | 42·20 |
| யாழ்ப்பாண விவசாய பாடசாலை | 51·70 | 40·90 |
| பருத்தித்துறை | 42·40 | 34·80 |
| நெடுந்தீவு | 37.10 | 29·50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுதாரண அட்டவணையில் இருந்து தெரிவது வருடமழைவீழ்ச்சியில் 82 வீதம் அளவில் வடகீழ் பருவத்திலேயே கிடைக்கின்றது. குடாநாட்டில் பெய்யும் மழையின்நீரை வரண்டு போயிருக்கும் பூமி உறிஞ்சுகின்றது. ஓர் சாதாரண மழைவீழ்ச்சி வருடத்தில் 90,000 ஏக். அடி நீர் நிலத்தில் புகும் நீரின் இந்த நீரில் 40,000 ஏக் அடி நீர் வீட்டுப் பாவிப்புக்கும் விவசாயத்திற்கும் பயன்படுகிறது. எஞ்சியதன் பெரும்பாகம் கழிவுநீராக ஓடுகின்றது. எனவே தரைநீருக்கு மூலமாக மழையே பிரதானமாக இருக்கிறது, இத்தகைய வளம் சேமிப்பால் உருவாகி அது கிணறுகள் கேணிகள் மூலம் இங்குள்ள மக்களுக்கு பயன்படுகிறது.

குடாநாட்டில் விவசாயமும் வீட்டுத் தேவைகளுக்கும் நீர் பெருமளவு தேவைப்படுகின்றது. பின்வரும் அட்டவணை ஓர் ஆராய்ச்சியாளரின் முடிவின்படி குடாநாட்டின் கிணறுகள் மூலம் எடுக்கப்படும் நீர்வளம் என்ன தேவைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது

## யாழ் குடாநாட்டின் வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகளின் அடிப்படையில் கிணற்றுநீர் உபயோகத்தின் புள்ளிவிபரம்

| | விவசாயத் தேவைக்கான கிணறுகள் | வீட்டுத்தேவைக்கான கிணறுகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 207 | 12,349 |
| வலிகாமம் கிழக்கு | 2917 | 4,149 |
| ,, வடக்கு | 3485 | 7,787 |
| ,, மேற்கு | 3695 | 10,245 |
| தென்மராட்சி | 1621 | 5,587 |
| வடமராட்சி | 1219 | 5,591 |
| பளை | 78 | 1,443 |
| நெடுந்தீவு | 175 | 1,239 |
| தீவுகள் | 2701 | 7,182 |

ஏறத்தாழ 66000 கிணறுகள் வீட்டுத்தேவைக்காகவும் 18000 கிணறுகள் விவசாய தேவைக்காகவும் பயன்படுகின்றது எனலாம்.

மேலும் குடாநாட்டின் நீர்த்தேவை பயிர்களின் அடிப்படையில் எவ்வாறு தேவைப்படுகின்றது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பயிர் | காலம் மாதம் | தேவையான மழைவீழ்ச்சி | ஏக்கரில் தேவையான நீர்ப்பாசனம் | ஏக்கரில் விளைச்சல் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. நெல் | 4—5 | 60 | 5 ஏக் அடி | 30—70 | 14 நாள் வரட்சி தாங்காது |
| 2. குரக்கன் | 4—5 | 50 | ,, | 15 | நீடித்த வரட்சி தாங்கும் |
| 3. தினை | 2 | 10 | 1 ,, | 20 | ,, ,, |
| 4. சாமி | 2 | 10 | — | 8 | ,, ,, |
| 5. வெங்காயம் | 3 | 30 | $1\frac{1}{2}$ | 10 | ஒரு வார ,, |
| 6. மிளகாய் | 3—4 | — | $3\frac{1}{2}$ | 10 | ,, ,, |

இந்த அட்டவணைப்படி பயிர்ச் செய்கையில் எவ்வளவு நீர் தேவை என்பது புலனாகிறது. எனவே தரைகீழ் நீர் வளத்தில் முக்கியமாக சிறுதாளிய உபஉணவுப் பயிர்செய்கை நடைபெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. வீட்டுத்தேவைக்காக பெருமளவு நீர் நகரப்பகுதியில் உபயோகிக்கப்படுகின்றது. இத்தகைய தேவை தரை கீழ் நீர் வளத்தினுல் பூர்த்தி செய்யப் படுகின்றது, இவை கிணறுகள் குள்ங்கள் மூலம் எடுக்கப்படுகின்றது.

மழை பெய்யும்போது வானத்திலிருந்து மழைநீருடன் கலந்து வரும் மென் காமனிக் அமிலம் (CARBONiC ACID) சுண்ணக் கற்பாறை இடைவெளிகளுட் புகுந்து கற்பாறைகளை அரித்து மெதுமையாக்கி இறுதியில் சோறையாகியுள்ள இடங்களை இடிந்து விழச்செய்யும். இவ்வாறு கற்பாறை இடிந்து விழும் போது பாணவடிவமான நீர்த்தேக்கம் நிலத்தில் தோன்றும் உதாரணம் நிலாவரைக்கேணி இது 50 அடி நீளம் 40 அடி அகலம் 164½ அடி ஆழம் கேணியின் நீர்மேற்பரப்பு கடல்மட்டத்திலிருந்து 0·2 அடி ஆழத்திலிருக்கிறது. மேற்பரப்பிலிருந்து 50 அடி ஆழம் வரை நன்னீர். 50—80 அடி ஆழ எல்லை சவர் நீர் 80—130 வரை கடல் நீரை ஒத்தது 130 அடி தொட்டு அடிக் கேணிவரை கடல் நீரிலும் பார்க்க காரமானது.

இக்கேணியில் இருந்து 250 ஏக்கர் நிலம் ஒருவித கேடும் ஏற்புடாமல் பலகாலம் அளவான நீர் பாய்ச்சி நல்ல விளைவு பெறலாம் எனக் கூறப்படுகின்றது. இக் கேணியில் மேற்பரப்பு 300 PPM ஆகும் 50 அடி ஆழத்தில் 1200 PPM ஆகையால் வாழை மரம் போன்ற பயிர்களை பயிர் செய்யலாம். மிளகாய் போன்றன 1000 PPM நி யிமயிலும் உயிர் வாழும். இப்படியான மூலங்கள் நீரைப் பயன்படுத்த ஏதுவாகின்றன. இப்படியான அமைப்பு குடாநாட்டின் சில பகுதியில் காணப்படுகின்றன.

குடாநாட்டின் வளத்தை பெறும் முக்கிய ஏதுவாக கிணறுகள் விளங்குகின்றன. ஏறத்தாழ 84,000 மேற்பட்ட கிணறுகள் காணப்படுகின்றன. குடாநாட்டில் 60 வீத வீடும் வீட்தோட்ட நிலமாகவும் 13 வீதம் துணை உணவுப் பயிர் நிலமாக்வும் 12½ வீதம் நெல்வேளாண்மை நிலமாகவும் 10 வீதம் உப்பேரிகளும் பரவியுள்ளன எஞ்சிய 4½ வீதம் நிலத்தைப் பிரயோசனப் படுத்த எத்தனிக்காது மண்டிக்கிடக்கும் பாழ் அடைந்த நிலமாகவும் பிரித்தார்கள்,

2,60,000 ஏக் 100 வீதம் குடாநாடு
1,56,000 ஏக் 60 வீதம் வீடும் வீட்டுத் தோட்டநிலம்
33,000 ஏக் 13 வீதம் துணை உணவுப் பயிர் நிலம்
32,500 ஏக் 12½ வீதம் நெல் வேளாண்மை
26,000 ஏக் 10 வீதம் உப்பேரி
11,700 ஏக் 4½ வீதம் பிரயோசனப் படுத்தாத நிலம்

ஏற்கனவே கூறியது போல 84,000 கிணறுகள் இங்கு உண்டு இவற்றில் 66,000 வீட்டுத் தோட்டப் பாவிப்புக்கு மாத்திரமே உபயோகப்படுகின்றன. வீட்டுக் கிணறுகள் கூடுதலாக யாழ்ப்பாணப் பட்டினத்திலும் (ஒவ்வொரு 100 ஏக்கருக்கு 150 கிணறு) அதன் அண்மையில் உள்ள கொக்குவிலிலும் (100 ஏக்கருக்கு 129 கிணறுகள்) இருக்கின்றன. மறு இடங்களில் இவற்றிற்கு குறைந்த தொகையான கிணறுகள் உள்ளன. வீட்டு தோட்டத்திற்கு உபயோகப்படும் ஒவ்வொரு கிணறுகளில் இருந்து 0·3 ஏக்கர் அடி நீர் இறைக்கப் படுகின்றது.

எஞ்சிய 18,000 கிணறுகள் (33,800 ஏக்கர்) கமத்தொழிலுக்கு (உபஉணவுப் பயிர் செய்கைக்கு) உதவுகின்றன, கமக்காரருக்கு உதவும் கிணறுகள் உரும்பிராய், ஊரெழு, உடுவில் மல்லாகம் ஆகிய கிராமங்களில் இருக்கின்றன. இக் கிராமங்களில் 100 ஏக்கருக்கு 30 கிணறுகள் வீதம் உண்டு. இக்கிணறுகள் ஒவ்வொன்றில் இருந்து வருடம் ஒன்றிற்கு 1½ ஏக்! அடி நீர் இறைக்கப்படுகின்றது.

தற்போதைய நிலையில் நன்னீர் கிணறுகள் உள்ள நிலப்பரப்பு 145 00 ஏக்கர் கோடை காலத்தில் உவர் நீராகும். கிணறுகள் 47 000 ஏக் நிலப்பரப்பில் பரவியுள்ளன. உவர்நீர் உள்ள கிணறுகள் 12 450 ஏக்கர் நிலத்தில் இருக்கின்றன. ஆராய்ச்சியின் படி யாழ் குடாநாட்டிலுள்ள 13 000 கிணறுகளில் ஒவ்வொன்றிலுமிருந்து வருடாவருடம்நடைமுறையில் 1½ ஏக். அடி நீர் இறைக்கப்படுவதில்லை. குடாநாட்டின் மத்திய பாகத்திலும் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும் குறைவாகவும், தீவுப்பகுதி கீழ் மேற்க்குக் கரையோரங்களிலும் அதிகமான நீர் இறைக்கப்படுகின்றது. அதிகமாக இறைக்கப்படும் இடங்களிலும் வேறுபாகங்களிலும் கடல் நீரானது பாறைப் படை இடையூடாக ஊடுருவி கிராமங்களுள், நிலத்தில் நீரோட்டங்கள் மூலம் செல்வதால் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS FROM*

**COLOMBO RESTAURANT**

**NO 77**

**Kasturiar Road,**

**JAFFNA**

யாழ் நகரில் பலசரக்கு சாமான்களை
நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**

★ பாடசாலை உபகரணங்கள்
★ புதினப் பத்திரிகைகள்
★ இந்திய, இலங்கை சஞ்சிகைகள்
★ வாழ்த்து இதழ்கள்
★ விவசாய இரசாயனப் பொருட்கள்
★ மற்றும் சாய்ப்பு சாமான்கள்

நம்பிக்கை நாணயத்துடன் பெற்றுக்கொள்ள

**ஐங்கரன் பலசரக்கு மாளிகை**

280, (102), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறுகளின் நீர் உவராகின்றது.

முற்காலத்தில் யாழ் குடா நாட்டில் கிணறு இறைப்பதற்கு பூட்டைப் பொறி (துலாப் பட்டை) ஒற்றை வாளி இரட்டை வாளி பூட்டிய சங்கிலி இறைப்பு (SINGLE DOUBLE MOT) சில்லிச் சங்கிலி வாளி (PERSIAN WHEEL) ஆகியவற்றைப் பாவித்து நாள் ஒன்றிற்கு நல்ல ஊற்றுள்ள ஒரு கிணற்றில் இருந்து சராசரி ¾ ஏக் (300 கன்றுத்தரை இறைப்பது வழக்கம். அத்துடன் ஒரு கிணறு 3 ஏக்கர் நிலத்துக்கு உரியதாயின் நாலு கமக்காரருக்கு பங்காகவும் இருந்தது. இக் காணிகளால் நீர் இறைப்பு அமைதியாகவும் அளவாகவும் இருந்தது. தற்போதைய நிலையில் அநேக கிணறுகள் 6—8 கமக்காரருக்கு பங்காக இருக்கிறது. ஒவ்வொரு பங்காளரும் ½ ஏக்கர் அளவில் பயிர் நாட்டுவதாலும் நாலுநாள் இடைவிட்டு இறைப்பதாலும் காலையிலும், மாலையிலும் நீர் இறைக்கும் இயந்திரத்தினால் நீர்ப்பாசனம் செய்வதாலும் கிணறுகளில் உவர் நீர் வருவதற்கும் பயன்படாத தன்மை ஏற்படுவதற்கும் காரணமாகின்றன.

எனவே கேணிகள் கிணறுகள் மூலம் தரைநீர் வளத்தை மனிதன் பயன் படுத்தி வருகின்றான். இந்த நீர் குடாநாட்டு மக்களின் பொருளாதார சமூக நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாக இருக்கின்றது. வளர்ந்து வரும் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக மிகையான நீர் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் கோடை காலங்களில் நீர்மட்டம் கீழே சென்று விடுகின்றதால் குடாநாட்டின் சில பகுதிகள் நீர் இன்றி கஷ்டப்படுகின்றன. சில கிணறுகள் வற்றி விடுகின்றன, நீரினைப் பெறக்கூடிய வேறு மூலங்கள் இல்லாமையால் தரைநீர் பிரச்சனை எழுகின்றது. இப்பிரச்சனை தவிர்க்க முடியாத பிரச்சனை அல்ல இவ்வரிய வளத்தை தகுந்தபடி பராமரித்து பயன் படுத்தினால் நீண்டகாலத்திற்கு பிரச்சனை இல்லாமல் வாழ முடியும்.

தரைகீழ் நீர்வளம் வற்றாத வளம் அல்ல மிகையான உபயோகம் காரணமாக இவை அழிந்து போகும் இன்று எம்மை எதிர் நோக்கும் பிரச்சனை என்ன? மிகையான நீர்த் தேவையை பெறமுடியாமல் இருப்பதும் வரட்சிக்காலத்தில் நீர் அற்றுப் போவதுமாகும் இது எவ்வண்ணம் ஏற்பட்டது? ஆரம்ப காலத்தில் சனத்தொகை குறைவு காரணமாக நீர் உபயோகம் மட்டுப்படுத்தப் பட்டது. இயந்திர பொறிகள் உபயோகித்து நீர் பெறப்படவில்லை. நீர் பெறுவதுகூட கால இடைவெளிகளில் நடைபெற்றது. மேலும் கட்டட நிலங்கள் இன்றுபோல அதிகரிக்கவில்லை. நிலத்தில் நீர் ஊறிச் செல்வதற்காக நிலப்பரப்புகளில் பள்ளங்கள் அதிகம் காணப்பட்டன தரிசு நிலங்களில் நீர் தேங்கி நிற்க வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இன்று மனிதத்தொகை அதிகரிப்பு அவன் தேவை அதிகரிப்பு காரணமாக கட்டடங்கள் வடிகால்கள் போன்றன அமைக்கப்பட்டு நில மேற்பரப்பில் நீர் நிற்காமல் வெளியேற்றப்பட்டது இதன் காரணமாக நிலத்தில் தண்ணீர் ஊறுவது குறைவுபட்டது. இதன் விளைவு என்ன? நீர் வங்கிக்கு (தரைகீழ் நீர்வளம்) வைப்பு குறைகின்றது. வைப்பு இல்லாமல் எவ்வண்ணம் மேலதிக தேவைக்கு பற்று எடுப்பது. இதன் காரணமாகத்தான் வங்கி தொழிற்பட முடியாமல் போகிறது. எனவே இவ்வளத்தை நாம் எவ்வண்ணம் பாதுகாப்பது? இதற்கு சில வழிகளை நாம் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் இவ்வண்ணம் குடாநாட்டில் உள்ள ஒவ்வொருவரும் கடைப் பிடிக்குமிடத்து நீண்டகாலம் இவ்வங்கியை இயங்கச் செய்யலாம். நாம் செய்யக்கூடியவை என்ன? இவைதான் அவை.

(1) தரிசு நிலங்களில் உயர்ந்த எல்லை வரம்பு அமைத்தல் (இதன் மூலம் நீர் தேங்கி நிற்றல் அதிகரித்து தரையில் மீள் செலுத்துகை அதிகரிக்கும் இதனால் வங்கிக்கு வைப்பு அதிகரிக்கும்)

(2) பாழ் அடைந்துபோன நிலமேற்பரப்பு நீர்த்தேக்க நிலையங்களை நிபுணர்கள் ஆலோசனைப் படி நிவர்த்தி செய்தல் (இதன் மூலம் நிலக்கீழ் நீர்ச் சேமிப்பு தகுந்த முறையில் பராமரிக்கலாம்.)

(3) தரிசு நிலமெல்லாம் வான் பார்த்த மரங்களை வளர்த்தல்

(4) வயற்கிணறுகளை தகுந்த பராமரிப்புடன் நீர் இறைத்துப் பயன்படுத்தல்.

(5) உயர்நிலங்களில் அகலமான ஆளமற்ற கிணறுகள் அமைத்து நாள் ஒன்றிற்கு ¼ ஏக்கருக்குமேல் நீர் இறைக்காவண்ணம் இருத்தல்.

(6) நன்னீருள்ள ஊற்றுச் சுரக்கும் நன்னிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து நாளை ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● திருமண வைபவமா? ● மங்கள நிகழ்ச்சிகளா? ● பிறந்தநாள் வைபவமா?
உங்கள் வீட்டுத் தங்க நகைத் தேவைகளை நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

**ஹரன் ஜுவலர்ஸ்** **HARAN JEWELLERS**

RG பில்டிங் 50 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்-
போன்: 444

R G BUILDINC 50 KANNATHIDDY ROAD
JAFFNA
தந்தி: 'இரத்தினம்ஸ்'

★ கண்ணைக் கவரும் விதத்தில் உயிரோவியமான
புகைப்படங்களை எடுப்பதில் முன்னணி வகிப்பவர்கள்
★ யாழ்நகரில் சிறந்த கலைஞர்களுடன் சிறந்த முறையில் இயங்கும் ஸ்தாபனம்

**பாரத் ஸ்ருடியோ**

82 | 1 & 2 கஸ்தூரியார் வீதி,
போன்: 252
யாழ்ப்பாணம்.

செவ்வந்தி இரண்டாவது ஆண்டு நிறைவுக்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்
★ பாட்டா பாதணிகள் ★ தையல் நூல் வகைகள்
★ ஸ்டிப் கொலர் ★ பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்கள்
மற்றும் உங்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள

**மூலைக்கடை (F)பன்சி**

பிரதான வீதி
பருத்தித்துறை

நகரின் நடுமையத்தில் புகழ்பெற்ற சைவ ஹோட்டல்
அசோக் பவன்
★ சுவையான சைவ உணவு வகைகள்
★ கல்யாண வைபவங்களுக்கான பலகார வகைகள்
ஓடர் உடன் கவனிக்கப்படும்
★ இலங்கை இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள

**அசோக் பவன்**

112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி மலரே! ★ ★ ★ ★

❀ திருமகள் ❀

மெல்லிதழ் கொண்டாய்! பெண்ணின்
மேனியை நிகர்ப்பாய்! வண்டின்
புல்லுதல் உணர்வாய்! உள்ளம்
பொலிவுடன் மகிழச் செய்வாய்
படிப்பது எளிது யாவற்கும்
என்றும் கூறுவாய் நன்று
துல்லிய உடலாய் தீண்டத்
துயரினை, பொறுக்க மாட்டாய்

அழகினில் நீயோர் உச்சம்!
அவனியில் அறிவு மிக்க
செவ்வந்தி மலரே வாழ்க!
நீ வளர் மதிபோல் வளர
என் வாழ்த்துக்கள் உனக்கே மலரே!

படிக்கப் படிக்க இன்பந் தரும்
மலரே செவ்வந்தி நீ வாழி
இன்றுபோல் என்றும் வாழி செவ்வந்தி!

நறுமணம் தருவாய் நீ! நல்ல
அறிவைத் தருவாய்! நட்புக்
குறுதுணையாவாய்! எமக்கு
உன் திறமையைக் காட்டி
மாதமொரு முறை மலர்வாய்
மலருனை தாண்டி நிற்பாய்
செவ்வந்தி மலரே நீ மலர்ந்து
மணம் வீசிக் கொண்டிரு!

தென்றலும் அலர்த்த இசையை
தெவிட்டிட ஈவாய்! வாசகர்
நன்னுற உண்டு, உண்டு
நனிமிகப் போதை கொண்டு
சென்றிடும் மலர்கள் தோறும்
செழிப்புறும் செவ்வந்தி மலரே!
எட்டுத் திக்கும் உன் மணம்
வீச என் வாழ்த்துக்கள். ★

---

றிற்கு ஒரு ஏக்கருக்கு மேற்படாது மெதுவாக இறைத்தல் (இதனுல் உவர் நீர் கிணற்றில் வராது தடுக்கலாம்.)

(7) இடைவிடாது இறைத்தல் முறையை தவிர்த்தல்

(8) ஒவ்வொரு வீடுகளிலும் வெள்ளம் சிறிதளவாவது தேங்கி நிற்கச் செய்தல் (இது சுகாதார வசதியைப் பாதித்தாலும் உபயோகமற்ற காணிகளிலாவது செய்யலாம்)

(10) கிணறுகளை தோண்டுவதிலும் கட்டுப்பாடுகளை வைத்திருத்தல்.

(11) தரைகிழ் நீர்வளத்தை பாவித்தலைப் போல தரை நீர்வளத்தையும் பேணல் வேண்டும். இதன் மூலம் முன்னதைப் பேணலாம்.

இப்படியான நடவடிக்கைகளை மக்கள் தேச பக்தியுடன் தமது எதிர்கால சந்ததிகளின் நன்மை கருதியும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இவ்வளத்தைப் பேணமுடியும் அனுபவிக்கமுடியும் வெட்டிப் பேச்சுகளான ''வரட்சி நிலவுகிறது'' ''பாலைநிலமாகப் போகிறது'' என்பது எல்லாம் உதவாது. நாம் கவனமாக வளத்தை உபயோகிக்கும் பொழுது இயற்கையின் ஏற்றத் தாழ்வுகளையும் சமாளிக்கலாம். மழைகாலங்களில் ஏற்படும் மிகையான நீரைப் பேணினுல் வரட்சிகால தட்டுப்பாட்டை நீக்கலாம். மழைகாலங்களில் கிடைக்கும் நீரை கோட்டை விட்டுவிட்டு வரட்சி காலங்களில் அவதிப்படுவதால் பயன் இல்லை. எனவே எங்கள் தரைநீர் வங்கிக்கு நீரை வைப்புச் செய்து வரட்சிகாலத்தில் எங்கள் தேவையின் போதுஎடுத்துக் கொள்ளலாம். வைப்புச் செய்யாதவர்கள் எவ்வண்ணம் வங்கியிலிருந்துஎடுக்கஅனுமதியுண்டு? எனவே நாம் இனியாவது எமது இந்த தரைகீழ்நீர் வளத்தைப் பேணி நீண்டகாலத்திற்கு வளத்தைக் காத்துப் பயன் பெறுவோம்.

முற்றும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROLEX AUTO CENTRE

*WATCHES CLOCKS REPAIRES*
*AMTURE MOTOR REWINDERS*
*AND*

## Electrical Goods

No 9 Jummah Mosqu Lane *JAFFNA,*

விஜயம் செய்யுங்கள்

## றெலெக்ஸ் ஒட்டோ சென்ரர்

யாழ்நகரிலே

உங்கள் அச்சுவேலைகள் எதுவானாலும்

- வியாபாரச் சிட்டைகள்
- புத்தகங்கள்
- விளம்பர நோட்டீஸ், போஸ்ரர்
- திருமண பூப்புனித நீராட்டு அழைப்பிதழ்கள்
- லேபல்கள்

சகலவித அச்சு வேலைகளையும் குறைந்த செலவில் அழகாக செய்துகொள்ள
விஜயம் செய்யுங்கள்

## சாந்தி அச்சகம்

575 கே. கே. எஸ். வீதி, — நாச்சிமார் கோவிலடி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கொலை வழக்கு

அங்கம் 5

சட்டத்தரணி: கே. சற்குணநாதன்

## இதுவரை நடந்தவை

உருத்திரபுரம், ஐயந்திநகர், கல்மடு நகர் இங்கெல்லாம் ஒரே பரபரப்பு, ஐயரைக் காணவில்லை. கிளிநொச்சி முழுவதும் தேடினார்கள் காணவில்லை, ஐயரின் தந்தை குப்புசாமி ஐயர் கொடுத்த தகவலின் பெயரில் ஜீப் ஐயரின் வீட்டுக்குப் பறந்து வந்தது. கோகிலாம்பாளிடம் பலவித கேள்விகளை கேட்டார் இன்ஸ்பெக்டர் முடிவில் ஐயர் வீட்டு சாணக் கும்பல் தோண்டப்படுகிறது என்ன ஆச்சரியம் கும்பலை வெட்ட வெட்ட சாண வெக்கை அதனூடே பிண நாற்றம் சகிக்க முடியவில்லை. முடிவில் ஒரு பெரிய மூட்டையைக் கண்டெடுத்தனர். மூட்டையை அவிழ்க்கும்போது அவிழ்த்தவர் ஐயோ அம்மா என்று அலறுகிறார் சுற்றிவரநின்ற எவரையும் காணவில்லை. இரத்தச் சகதிக்குள்ளே குட்டையான மனித முண்டம் தலைவேறு, கால்வேறு, சதைத் துண்டுகள், நரம்பு நார்கள் பிதுங்கிய விழிகள், சூம்பிய கால்கள் உடல் அவயவங்கள் எல்லாம் சேர்த்து அதனுள் அடக்கப்பட்டிருக்கின்றன. வேறு யாருடையதுமல்ல, நெடுந்தீவுக்குப் போனதாக மனைவி கோகிலாம்பாளால் கூறப்பட்ட ஐயரின் உடல் துண்டுகள்தான் அங்கு கிடந்தன. விசாரணையின்போது பயங்கரமான உண்மைகள் வெளிவருகின்றன வேலுப்பிள்ளை கண்டதுண்டமாக ஐயரை வெட்டுகிறான் பசுபதி ஐயரை ஆடாது அசையாது கால்களை அமுத்திப் பிடிக்கிறான். ஒரு பெண்ணுருவம் பிரமை பிடித்ததுபோல் இவைகள் எல்லாவற்றையும் பார்த்தபடி நின்றது அதுதான் ஐயரின் அருமை மனைவி கோகிலாம்பாள் அனைவரினதும் சாட்சியங்கள் கோட்டில் இடம்பெறுகின்றன. வழக்கறிஞர்களின் வாதப் பிரதிவாதங்கள் பிரேதப் பரிசோதனை செய்த டாக்டரின் சாட்சியம்; தொடர்ந்து விசாரணைகள் பெருமளவு இறுதிக்கட்ட நிலைக்கு வந்துவிட்டது இந்த நிலையில் எதிரியின் சாட்சியம்.

## எதிரியின் சாட்சியம் ★

அரச தரப்பினர் தமது வழக்கை முடித்துக் கொண்டதும் எதிரிகள் தமது சாட்சியங்களை அழைக்கலாம் அல்லது தாமே சாட்சியம் அளிக்கலாம் இதனை மேல் நீதிமன்ற நீதிபதி அவர்கள் எதிரிகளுக்கு எடுத்து உரைப்பார்

"நீங்கள் சாட்சிகளை அழைப்பதோ அல்லது நீங்கள் சாட்சியம் அளிப்பதோ உங்களைப் பொறுத்த விடயம். ஆனல் நீங்கள் சாட்சியளிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை மேலும் நீங்கள் சாட்சிக் கூண்டில் ஏறி அளிக்கும் சான்றானது பெறுமதி கூடியது காரணம் குறுக்குக் கேள்விகளுக்கு உட்படுத்தப்படுவதாலேயே அதன் பெறுமதி கூடியதாகும். ஆனல் ஏதாவது கேள்விக்கு நீங்கள் மறுமொழி அளிக்காது மௌனம் சாதித்தால் உங்களுக்கு எதிராக அனுமானம் எடுப்பதற்கு எதிர்தரப்பினருக்கு அதிகாரம் உண்டு

எதிரி ஒருவர் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியம் அளிப்பதென்பது ஒரு பிரச்சனைக்குரிய விஷயம். காரணம் கொலை போன்ற பாரதூரமான குற்றச் சாட்டில் எதிரி ஒருவன் எத்தகைய பதட்டத்தில் இருப்பான் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகவே வழக்கின் சூழ்நிலையும் எதிரியின் மன உறுதியையும் ஆராய்ந்தே "அவரை சாட்சிக் கூண்டில் ஏற்றுவதா? இல்லையா" என்ற பிரச்சனைக்கு எதிரியின் சட்டத்தரணி தீர்வு காண்பார். எதிரி சாட்சிக் கூண்டில் சாட்சியம் அளிக்காவிட்டால் இதுபற்றி தமது தொகுப்புரையின் போது எடுத்துக் கூறுவதற்கு அரசதரப்புச் சட்டத்தரணிக்கே நீதிநிருவாகச் சட்டம் இடமளிக்கின்றது.

தொகுப்புரையின்போது எதிரிதரப்புச் சட்டத்தரணிகள் சாட்சிகளின் முரண்பாடு (CONTRADIEFIONS)களைஎடுத்துத் விளக்குவது வழக்கம் இவை அரசதரப்பு சாட்சியங்களின் வலுவை குறைக்கத்தக்கனவாக முக்கிய விஷயங்கள் பற்றியனவாக அமைந்திருத்தல் அவசியம்.

### தொகுப்புரை

2-வது எதிரியின் சார்பில்

கனம் ஜூரிக் கனவான்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கட்சிக்காரருக்கு எதிராக போதிய சாட்சியம் கிடையாது எனவே அவரை விடுதலை செய்ய வேண்டும்.

3-வது எதிரியின் சார்பில்

வேண்டுமென்றே 3-வதுஎதிரி இவ்வழக்கில் கொண்டு வரப்பட்டிருக்கின்றார். அவரின் மேலிருந்த இரத்தம் வேண்டுமென்றே எவரோ தெளித்திருக்க வேண்டும் மை நிரப்பும் குழாயினூற் கூட இவ்வித இரத்தக்கறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்தானே?

அரசு தரப்பில்

கனம் பெரியோர்களே ஐயர் காலஞ்சென்று விட்டாலும் அவரது ஆவி உங்கள் தீர்ப்பை எதிர்பார்த்து கட்டைக் காட்டினுள் அலைந்து கொண்டேயிருக்கும். எனவே சகல சாட்சியங்களையும் ஆராய்ந்து தீர்க்கமான ஒரு முடிவுக்கு வாருங்கள் இந்தக் கொலைக்கு என்ன காரணம் என்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயமல்ல. முதலாவது எதிரிக்கும் மூன்றாவது எதிரிக்கும் இடையே இருந்த காதல் நாடகத்தின் எதிரொலியே இக் கொலை.

நீதிபதியின் தொகுப்புரையே இறுதியாக அமையும் தொகுப்புரையாகும். இவ்வழக்கில் அவரது தொகுப்புரை அரச தரப்பின் சாட்சியத்தை நம்புவதாகவே அமைந்தது.

தீர்ப்பு

யாழ் மாநகரசபை மண்டபத்தைச் சுற்றி ஒரே சனத்திரள் பொலிசாரினல் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மாலையும் இரவும் சந்திக்கும் நேரம் வந்தது. ஆமாம்! இரவின் முடிவு பகல் ஒன்றின் முடிவு இன்னென்றின் தொடக்கம் அல்லவா ஜூரிமாரின் முடிவு எதிரிகளின் முடிவாக அமையப் போகிறதா? இதுவே சனங்களின் அங்கலாய்ப்பு.

நீதிபதி அவர்கள் கறுத்த அங்கியை தலையில் அணிந்த வண்ணம் வந்தமருகிறார்.

நீதிமன்றம் அமைதி

எங்கும் ஒரே அமைதி இரண்டாவது எதிரி விடுதலை செய்யப்படுகின்றார். முதலாவது மூன்றாவது எதிரிகளுக்குத தூக்குத் தண்டனை.

தண்டனையைக் கேட்டதும் முதலாவது எதிரி மயங்கி வீழ்கிறான்

சிறைச்சாலை டிரக் வருகிறது

ஒருமுறையாவது இவர்களது முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் அவ்வாகனத்தைச் சுற்றி சனக் கூட்டம் மொய்த்துக் கொண்டது.

யாழ் புகையிரத நிலையத்தில்

மீண்டும் அதே ஜனக் கூட்டம் '24 மணி நேரத்தில்' யாழ் மண்ணிலிருந்து எதிரிகள் வெளியேற்றம். பத்திரிகைகளில் செய்தி பிறந்த மண்ணைவிட்டு ரயிலில் எதிரிகள் கொண்டு செல்லப் படுகிறார்கள். முதலாவது எதிரியின் கண்ணில் கண்ணீர். பார்க்கமுடியாமல் இருக்கிறது அவன் அழுது கொண்டே ரயில் ஏறினன். அவன் எங்கே பயணம் செய்கிறான். அவனின் பரிதாப நிலையைக் கண்டு சனங்களும் பச்சாதாபப் பட்டனர். பின்னர் அவர்கள் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

முடிவுரை

இந்தவழக்கின் மூன்றாவது எதிரியைப் பற்றி எழுதாத பத்திரிகைகள் இல்லை. ஆனாலும் நீதிமன்றத்தின் முடிவுக்குத் தலை வணங்கும் அதே நேரத்தில் சில சிக்கலான சூழ்நிலை காரணமாகவே இது நடைபெற்றிருக்கிறது வாழ்க்கையில் நாம் எதிர்பார்ப்பது நடக்காவிட்டால் அதற்காக மனம் புழுங்குவது மனித இயல்பு இந்த இயல்புதான் இக் கொலைக்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

'மன்னிப்பது' மனித பண்பு சில தவறுகள் நடைபெற்றிருக்கலாம் அதற்காக வீணாக ஒரு பெண்மணி மீது அபாண்டவான பழியைச் சுமத்துவது தர்மமே அல்ல மனித வாழ்க்கையில் எத்தனை பெரிய தவறுகள் நடக்கின்றன அவற்றை மறைக்கவும சகிக்கவும் முடியாவிட்டால் எத் எத்தனை அனர்த்தங்கள் நடைபெறுகின்றன. இக் கேள்விகளுக்கு இக்கதை ஒரு விடையாக இருக்கட்டும்; ★

— முற்றும் —






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமானக் கணிப்பீடு

★ ஒரு பொது நோக்கு

ஆ. செந்தில்வடிவேல்
B A HONS (CEY) S.L A S
— உதவி அரசாங்க அதிபர் நெடுந்தீவு —

இன்று உலகின் எல்ல நாடுகளிலும் தேசிய வருமானக் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆரம்ப காலக் கணிப்பீட்டு முறைகளிலும் பார்க்க இன்றைய கணிப்பீட்டு முறைகள் வேறுபட்டனவாக, பல தேவைகளுக்கும் பயன்படக் கூடியனவாக அமைந்துள்ளன. ஒரு நாட்டில் ஒரு குறிக்கப்பட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த முடிவுப்பொருட்கள் சேவைகளது பண ரீதியான பெறுமதியினையே தேசிய வருமானம் என வரையறை செய்யலாம். குறிக்கப்பட்ட காலம் என்பது பொதுவாக ஒரு வருடமாக அமைகிறது. இதில் தொட்டுணரக் கூடியனவற்றைப் பொருட்கள் எனவும், தொட்டுணர முடியாத கல்விச்சேவை வைத்திய சேவை போன்றவற்றைச் சேவைகள் எனவும் கூறுகின்றோம். பொருட்கள், சேவைகள் பற்றிய பெறுமானங்களை தோன், புசல், கலன், யார் என்ற பௌதீக ரீதியான மதிப்பீடாகக் கூற முடியும். ஆனால் இன்று சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் அலகான பணத்தைக் கொண்டே பொருட்கள், சேவைகளினது பெறுமானத்தை மதிப்பிடுகின்றோம்.

தேசிய வருமானக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நாட்டு மக்களது வாழ்க்கைத்தரம் மதிப்பிடப்படுகின்றது ஒரு நாட்டின் கடந்தகால, நிகழ்கால ொருளாதாபர வளர்ச்சி வீதத்தினை ஒப்பிட்டு நிகழ்காலப் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை ஒப்பிட்டு நிகழ்கால பொருளாதார வளர்ச்சி வீதம் என்ன வீதத்தில் மாறுபட்டுள்ளது என்பதனை அறியமுடிகின்றது. இவற்றைவிட ஒரு நாட்டையும் மற்றொரு நாட்டையும் பொருளாதார ரீதியாக ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான பண ரீதியான குறிகாட்டியாகவும் தேசிய வருமானக் கணக்கீடு அமைந்துள்ளது. மேலும் ஒரு நாட்டின் விவசாயத்துறை, கைத்தொழிற்றுறை போன்றவற்றின் சார்பான முக்கியத்துவத்தை அறியவும், நாட்டின் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கும் தேசிய வருமானத் தரவுகள் உதவி வருகின்றன. இத்தகைய காரணங்களால்தான் எல்லா நாடுகளிலும் தேசிய வருமானக் கணக்கீட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

தேசிய வருமானக் கணக்கீடு உற்பத்தி (வெளியீடு) செலவீடு, வருமானம் ஆகிய மூன்று துறைகளில் கணிப்பிடப்படுகின்றது. ஒரு நாட்டில் ஒரு குறிக்கப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மொத்த முடிவுப் பொருட்கள் சேவைகளது பண ரீதியான பெறுமானத்தை மொத்த தேசிய உற்பத்தியென்றும், அம் முடிவுப் பொருட்கள், சேவைகள் மீது ஏற்படும் செலவீடுகளின் கூட்டுத்தொகையினை மொத்த தேசிய செலவீடென்றும், அம் முடிவுப் பொருட்கள், சேவைகள் உற்பத்தி, செய்யப் பயன்படுத்தப்படும் நிலம், மூலதனம், உழைப்பு, முயற்சி போன்ற சாதனங்கட்கு முறையே வழங்கப்படும் வாடகை, வட்டி, கூலி இலாபம் ஆகியவற்றின் கூட்டுத்தொகையினை மொத்த தேசிய வருமானமென்றும் குறிப்பிடப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் மற்றொவ்வொன்றுக்குச் சமமாக இருக்கும்.

தேசிய வருமானத்தை மூன்று வழிமுறைகளால் கணிப்பிடலாம் என்றாலும் ஒரு நாடு எந்தெந்த வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்பது அந்த நாடு தேசிய வருமானக் கணக்கீட்டால் எவ்வகையான பயன்பாட்டைப்பெற விரும்புகின்றதென்பதையும், கிடைக்கக் கூடிய புள்ளி விபரங்களையும் பொறுத்துத் தீர்மானிக்கப்படும். இலங்கையில் உற்பத்தி செலவீடு ஆகிய இருவகையான வழிமுறைகளே பின்பற்றப்படுகின்றன.

உற்பத்தி வழியான கணக்கீட்டை நோக்கின் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மொத்த முடிவுப் பொருட்கள், சேவைகளது பண ரீதியான பெறுமானமே உற்பத்தி வழியிலான தேசிய வருமானமாகும். இங்கு மூலப் பொருட்கள், இடைப் பொருட்கள் போன்றவற்றின் பெறுமதி கவனத்திற் ஒகடுக்கப்படாது முடிவுப் பொருட்களது பெறுமதி மாத்திரமே

கவனத்திற்கெடுக்கப்படும். உதாரணமாகப் பஞ்சு, நூல், துணி என்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்போது மூலப்பொருட்களான பஞ்சு, இடைப்பொருளான நூல் போன்றவற்றைக் கவனத்திற்கெடுக்காது துணி என்ற முடிவுப் பொருளை மாத்திரமே கவனத்திற்கெடுக்க வேண்டும்' இதனையே, இரட்டைக் கணக்கிட்டைத் தவிர்த்தல் எனக் கூறப்படுகின்றது.

உற்பத்தி வழியிலான தேசிய வருமான மதிப்பீட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்ற கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்படும் விவசாயத்துறை, கைத்தொழிற்துறை, சேவைத் துறையினது பணரீதியான பெறுமானமே மொத்த உள்நாட்டு உற்பத்தி யாகும். இம் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் குறிக்கப்பட்ட நாட்டுக்குச் சொந்தமான ஆனால் வெளிநாட்டில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் காரணிகளுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளைக் கழிக்க வருவதே மொத்த தேசிய உற்பத்தி யாகும். வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் காரணி வருமானம்' வெளிநாட்டுக்குச் செலுத்தவேண்டிய காரணி வருமானம் ஆகிய இரண்டையும் சேர்த்து தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் எனலாம். எனவேதான் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறியவெளிநாட்டுக்காரணி வருமானத்தைச் சேர்க்க (இது நேர்க்கணியமாகவும் இருக்கலாம் அல்லது எதிர்க்கணியமாகவோ இருக்கலாம்) வருவது மொத்த தேசிய உற்பத்தி ஆகும்.

உற்பத்தி வழியிலான தேசிய வருமானத்தை காரணி விலை (காரணிச் செலவு) சந்தைவிலை ஆகிய இருவழிமுறைகளில் கணிப்பிடலாம். காரணி விலையிலான மொத்த தேசிய உற்பத்தி+ மறைமுகவரி— மானியம் (உதவிப் பணம்) = சந்தைவிலையிலான மொத்த தேசிய உற்பத்தி, பொருட்கள் சேவைகளின் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளுக்கு ஏற்படுகின்ற செலவினங்களின் கூட்டுத்தொகையே காரணிச் செலவு வழியிலான தேசிய வருமானம் ஆகும்! அந்த முடிவுப் பொருட்கள் சேவைகள் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டு என்ன விலைக்கு விற்கப்படுகின்றதோ அதுவே சந்தை விலை ஆகும். இவை இரண்டுக்குமிடையே மறைமுகவரி, மானியவரி என்பன தொடர்பினை ஏற்படுத்துகின்றன.

செலவீட்டு வழியிலான தேசிய வருமானத்தை நோக்கும்போது தனியார் நுகர்வுச்செலவு அரசாங்க நுகர்வுச் செலவு, மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், இருப்பு மாறுதல் ஆகியவற்றைக் கூட்ட வருவது மொத்த உள்நாட்டுச் செலவு இம்மொத்த உள்நாட்டுச் செலவுடன் ஏற்றுமதி வருமானத்தைக் கூட்டி இறக்குமதிச் செலவீட்டைக் கழிக்க வருவது மொத்த தேசிய செலவீடாகும். இம் மொத்த தேசிய செலவீடு சந்தை விலையில் மாத்திரம்தான் கணிப்பிடப்படுகின்றது.

வருமான வழியிலான தேசிய வருமானத்தை நோக்கும்போது தனிப்பட்டவர்கள், தனியார் உற்பத்தி நிறுவனங்கள், பொதுத்துறை ஆகியன பெறுகின்ற கூலி வாடகை, வட்டி, இலாபம் ஆகியனவற்றின் கூட்டுத்தொகையே வருமான வழியிலான தேசிய வருமானம் ஆகும். இதில் மாதாந்த ஓய்வுநிதி, மாதாந்த பொதுசனப் பணம் அண்மையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் ஐம்பது ரூபா வருமான ஆதரவுநிதி போன்ற மாற்று வருமானங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை: வருமான வழியிலான கணக்கீடு காரணிச் செலவு அடிப்படையில் மாத்திரமே கணிப்பிட முடியும்.

உற்பத்தி, செலவீடு வருமானம் ஆகிய மூன்று வழிமுறைகளில் கணிப்பிடப்படும் தேசிய வருமானம் பணம் தேசிய வருமானமாக கணிப்பிடப்பட்டுப் பின் மெய்த்தேசிய வருமானமாக மாற்றப்படுகின்றது. ஒரு குறிக்கப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மொத்த முடிவுப் பொருட்கள், சேவைகளது பெறுமதியை அதே ஆண்டுக்கான சராசரி விலை மட்டத்தால் பெருக்க வருவது பணத் தேசிய வருமானம் ஆகும். ஆனால் மெய்த் தேசிய வருமானம் என்பது குறிக்கப்பட்ட ஆண்டுக்காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளது பெறுமதியை ஒரு நிலையான ஆண்டின் சராசரி விலையால் பெருக்க வருவது ஆகும். எல்லா நாடுகளிலும் பொதுவிலை மட்டம் பொதுவாக அதிகரித்துச் செல்வதால் பணத் தேசிய வருமானம் ஒரு நாட்டின் உண்மையான உற்பத்தியை எடுத்துக் காட்டும். குறிக்கப்பட்ட ஆண்டிற்கான மொத்த மெய் தே வருமானத்தை அக்குறிக்கப்பட்ட ஆண்டின் நடுக் காலச் சனத்தொகையால் பிரிக்க வருவது ஆள்வீத வருமானம் ஆகும். உதாரணமாக 1977ல் இலங்கையில் மொத்தத் தேசிய வருமானம் 11952 மில்லியன் ரூபா. இதனை 1977ம் ஆண்டு நடுஆண்டு குடித்தொகையான 13.9 மில்லியனால் பிரிக்கும் பொழுது தலா 855 ரூபா என்ற வருமானம் கிடைக்கிறது.


★ பொருளியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமானக் கணிப்பீட்டில் இடம் பெறும் சில தொடர்புகள்

(1) பெறுமானத் தேய்வு
(2) தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
(3) தேறிய மறைமுக வரி
(மறைமுகவரி — மானியம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள்
வெளிவந்து கொண்டிருக்கும் 'செவ்வந்தி'
மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்:

# யாழ் மெட்டல் விற்பனை நிலையம்

● யாழ் மெட்டல் உற்பத்திப் பொருட்களான

❁ அலுமினியப் பாத்திரங்கள்

❁ பித்தளைப் பாத்திரங்கள்

லேக்ஹவுஸ் பத்திரிகைகள் விற்பனையாளர்

ஆகியவற்றை

★ மொத்தமாகவும் ★ சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# யாழ் மெட்டல் விற்பனை நிலையம்

இல. 7 நவீனசந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்; 7596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோறு வேண்டாம்

... செங்கை ஆழியான் ...

சன்னதி முருகன் கோயில் மணி ஒலிக்கின்றது. அதனைத் தொடர்ந்து பறைமேளம் முழங்குகின்றது. மடத்தின் திண்ணைக் குந்தில் அமர்ந்திருந்தார் முருகர் திண்ணையின் மூலையில் சுருண்டு முடங்கிக் கிடந்த சண்முகம் மணிச்சத்தம் கேட்டுத் துடித்து எழுந்தான்.

''அம்மான்...பூசை தொடங்கிவிட்டது. எழும்பி வாருங்கோ கெதியாப் போனால்தான் ஏதாவது கிடைக்கும். இன்றைக்கு ஆரோ அவிச்சுப் போடுகினமாம்

சண்முகத்தை முருகர் ஆழமாகப் பார்த்தார்.

''எல்லாரும் பூசை காணவா ஓடுகினம்?''

''வயிறு என்று ஒன்று இருக்கிறதே அம்மான்) ஏதோ சன்னதியான் ஏழை எளியதுகளுக்கு, அனாதைகளுக்கு...முடம் நொண்டிகளுக்கு சாப்பாடு போடுகிறான். அவனிடம் தான் எல்லாரும் சரண்.''

''உண்மைதான்... சண்முகம் ஆனா அவனவன் தன் பாவங்களை அனுபவிக்கத்தான் வேணும். பூசை எப்ப முடியும் அவியல் சோறு எப்ப போடுவினம் என்பதில் எல்லாருக்கும் கவலை நீ போ சண்முகம்...நான் வரவில்லை.''

''உங்களுக்கு என்ன அம்மான் குறை? எங்களைப்போலவா ஐம்பது சதத்தை எறிந்தால் கடைக்காரன் இடியப்பம் தாறான் பிச்சைச் சாப்பாடு தேவையில்லை

''பிறரிடம் கையேந்தி வாழ வேண்டும் என்ற நிலையை ஆண்டவன் தரவில்லை. பனையில் எனக்கிருக்கிற தென்னங்காணி இருக்கும் வரை நான் கையேந்த மாட்டன். அப்படியொரு நிலை வந்தால் கந்தன் என்னை விடமாட்டான் சண்முகம்.''

'கொடுத்து வைச்சனீங்கள்' என்றபடி சண்முகம் பெட்டியை எடுத்துக்கொண்டு சுடுமணலில் இறங்கி சூம்பியகால்களை இழுத்து இழுத்து விரைந்தான்.

முருகரின் காதுகளில் சண்முகம் கூறிய கடைசி வார்த்தைகள் 'கொடுத்து வைச்சனீங்கள் உதடுகளில் சிரிப்பு ஏளனம். ஏமாற்றம் சண்முகம் ஒருநாள் கேட்டான் 'அம்மானுக்கு பிள்ளை குட்டியில்லையே?'

'கலியாணம்செய்தால்தானே அப்பா ...

'ஏன் அம்மான் செய்யவில்லை

'நீ ஏன் செய்யவில்லை சண்முகம்...?' என்று அவர் பதில் கேள்வி கேட்டார்.

நான் நொண்டி ஊனமுள்ளவன்"

''நீ உடலால் நான் மனத்தால் பாசமும் கடமையும் என்னை ஊனமாக்கி விட்டன சண்முகம். அப்புவுக்கும் ஆச்சிக்கும் நாங்கள் ஐந்து பிள்ளைகள். நான் இரண்டாவது மகன் மூத்த அண்ணன் தன் விருப்பப்படி ஒருத்தியோடு ஓடிவிட்டான். அந்தக் கவலையிலை ஆச்சியும் அப்புவும் ஒருவர்பின் ஒருவராக...... பாரம் என் தலையில் நான் அதுக்காகக் கவலைப்படவில்லை. மூன்று தங்கச்சிமாரை வளர்த்து ஆளாக்கிக் கலியாணம் செய்து கொடுக்கிற பொறுப்பை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டன். மாடாய் உழைச்சன். எல்லாருக்கும் நல்ல வாழ்வைத் தேடிக் கொடுத்தன். கடமைகளை நிறைவேற்றி விட்டு உட்கார்ந்தபோது எனக்கு நாற்பத்தைந்து வயது தாண்டிவிட்டது. இதுக்காக நான் கவலைப்படவில்லை. ஒரு தியாகத்தில் பலர் வாழ்வு கிடைக்கும் என்றால் அதனை வரவேற்கத்தான் வேண்டும்... எல்லாத் தங்கச்சிமாரும் நல்லா இருக்கினம்.

அந்நியர் ஆட்சியில் அதிகார பீடத்தில் இருந்த அதிகாரிகளுக்கும் அடிவருடிகளுக்கும் அவரவர் தொழிலுக்கேற்றவாறு அவர்களின் வீட்டு வாசலில் நிலைப்படியின்மேல் சித்திரமாக வரையப்பட்டிருப்பதை யாழ் நகரில் மட்டுமே காணமுடியும் யாழ்நகர் பாங்ஷால் வீதியில் உள்ள கிட்டங்கிகளில் இன்னும் காணலாம்

... இரத்தினம் ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்படி இருக்க நீங்கள் ஏன் அம்மான் இப்படி அலைய வேண்டும்'.

''விசரா... விசரா பாசத்திலா உலகம் இருக்குது. பணத்திலையடா. நான் நல்லா உழைக்குமட்டும் சகோதரங்கள் அண்ணை அண்ணை என்று உசிரை விட்டுதுகள். நான் முடங்கியதும்' எனக்குச் சோறு போடுற பத்துப்பரப்புச் தென்னங் காணியையும் தங்களுக்கு எழுதித் தரும்படி ஆள்மாறி ஆளாகக் கேட்டினம். நான் கொடுத்துப் பழகியவன் வாங்கிப் பழக்கமில்லை உனக்கு ஏன் காணி எனக்கு எழுதித்தா அண்ணை என்று ஒருத்தி இப்படி ஒவ்வொருவரும் நச்சரிப்புத் தாளவில்லை நான் மறுத்ததால் ஏற்பட்ட மனஸ்தாபம் வந்திட்டன்.''

சண்முகம் அவரை வியப்புடன் பார்த்தான்.

கோயிலில் அரோகரா என்ற ஒலி கேட்கின்றது. பூசை முடியப் போகின்றது. சோறு அவித்துக் கொட்டும் மடத்தில் இழுபறி நடக்கப் போகிறது. சண்முகம் சூம்பிய கால்களை இழுத்து இழுத்து அங்கு விரைந்தான்.

''உங்களுக்கு என்ன குறை அண்டைக்குக்கூட கோயில் வாசலில் ஒருவர் உங்களுக்குப் புக்கைக் கட்டி ஒன்றை தந்தார் வாங்க மறுத்திட்டியள் அந்தாள் பேசின பேச்சு''

''சீவிக்க வழியில்லாமல் சன்னதிக்கு வந்திட்டு கொடுக்கிறதை வாங்க மறுக்கிறார் பெரியபிரபு இவர்... என்று அந்தாள் பேசினான். அதற்காக நான் கவலைப் படவில்லை! வயிற்றை நிரப்ப முருகன் வழிவிட்டிருக்கிறான். வழியில்லாதவனுக்கு அது உதவட்டும்.''

''அப்ப ஏன் இங்கு வந்தியள் அம்மான்?''

''ஏழையளும் பிச்சைகாரரும் தான் சன்னதிக்கு வரவேண்டுமா அப்பா?''

பணம்...பணம்...அது தான் உலகத்தில் எல்லாவற்றையும் நிர்ணயிக்கின்றது. காணி எழுதி தரவில்லை என்ற ஆத்திரத்தில் அவருடைய மூன்று தங்கைகளும் அவரை மதியாது ஒதுக்கி விட்டார்கள் அவராகவே ஒதுங்கிக் கொண்டார். ஒரு வெள்ளிக் கிழமை...

அவருடைய மூத்த தங்கை பாக்கியம் சன்னதிக்கு வந்த இடத்தில் அவரைக்கண்டாள்.


''அண்ணை நீ செய்யிறவேலை நல்லா இருக்கா? நாங்கள் எல்லாரும் இருக்கத்தக்கதாக நீ ஊர் ஊராப் பிச்சை எடுத்துக் கொண்டு எங்களை ஏன் பரிசுகெடுக்கிறியள்?'' என்று கத்தினாள்.

''ஆர் ஆரைப் பரிசு கெடுக்கிறது பாக்கியம்? என் மன அமைதிக்காக நான் கோயில் குளம் என்று திரியிறன்''

''உனக்கு இப்ப என்ன கவலை வந்தது? உனக்கு ஆர் என்ன குறை வச்சம்.

''என்ன கவலையா பாக்கியம் என் கடமைகளை நான் செய்தன் உங்களையெல்லாம் ஆளாக்கி வாழ வைத்தன். எனக்கு கிடைத்த பலன் ஏமாற்றம். எல்லாம் சுய நலத்துக்காக பணத்திற்காக பணமிருந்தால்தான் பாசம் இருக்கும் என்றால் அது எனக்கு வேண்டாம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில்
வசிக்கும்
தமிழர்களும் முஸ்லிம்களும்



| | | |
|---|---|---|
| வட மாகா. | தமிழர் | 799,406 |
| வட மாகா. | முஸ்லிம் | 139,501 |
| கிழ. மாகா. | தமிழர் | 319,837 |
| கிழ' மாகா. | முஸ்லீம் | 149,458 |

பாக்கியம் சினத்துடன் சீறினாள்.

''அண்ணை நீ எங்களுக்கு உழைச்சுத் தந்தாய் இல்லை என்கிறமா? அதுக்காக எங்களுடன் இருந்து சாப்பிடன்? ஏன் ஊர் ஊராகப் பிச்சை...''

''அந்த நிலை எனக்கு வரவில்லை பாக்கியம்''

''அந்தக் காணியை எனக்கு எழுதித் தந்திட்டு என்னோடை வந்திரு அண்ணை உன்னை ராசா போல நானும் பிள்ளைகளும் வைச்சுக் காப்பாத்துறம்.''

''அது சரிவராது...'' என்று முருகர் சிரித்தார். ''அந்தக் காணியைத் தந்தால்தான் பாப்பியள் என்றால் அந்தப் பாசம் பரிவு எனக்கு வேண்டாம்' காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து அன்பை வாங்க முடியாது பாக்கியம்.''

'நீ நல்ல இருக்க மாட்டாய்,

'இப்ப மட்டும் நல்லாவா இருக்கிறன்.'

'நீ அழுந்தித்தான் சாவாய்'

'சாபமா கொடுக்கிறுய்... முருகா என்ஞர் முருகர்.'

'அழுந்தி அழுந்திப் பிச்சை எடுத்துச் சாவாய் பாவி... நீ ஒரு அண்ணனு?

அவள் போய்விட்டாள். அவர் அப்படியே அமர்ந்திருந்தார்.

அதோ தெரியும் மடத்தில் சோற்றுக்காக போராட்டம் நடக்கிறது. முதல் பந்தியில் பெட்டியுடன் இருந்துவிடப் பலர் துடிதுடிக்கிருர்கள். சண்முகமும் கால்களே இழுத்து இழுத்து உடனே செல்ல முயல்கிருன். ஏற முடியாமல் அவன் தள்ளாடி விழ, முண்டியடித்த கூட்டத்தில் அவன் அகப்பட்டு சண்முகம் 'ஐயோ' என்று கத்திஞன்.

முருகர் வேகமாக அங்கு ஓடிச் சென்ருர். சண்முகம் நிலத்தில் கிடந்தான். எவரும் அவனேக் கவனிக்கவில்லே. பசி எதைதான் கவனிக்கிறது. அவர் சண்முகத்தை தூக்கிஞர். அவன் அரை மயக்கத்தில் கிடந்தான். பசி மயக்கமும் கால்களால் விழக்கப்பட்ட மயக்கமும் சேர்ந்து.

அவர் அவனே மடத்திற்கு தூக்கிவந்து திண்ணேயில் கிடத்திஞர்.

'சண்முகம் சண்முகம் அவர் அவன் முகத்தில் நீர் தெளித்து அழைத்தார்.

'சோறு சோறு' என்று அவன் பிதற்றிஞன். அவன் கடவாயில் இரத்தம் வடியத் தொடங்கியது. துடைக்கத் துடைக்க வடிந்தது.

'அம்மான் பசி... சோறு சோறு...'

சண்முகத்தின் கண்கள் மெதுவாக திறந்தது.

'சோறு... சோறு...அ ம்... மா...ன்...'

'நான் என்னடா செய்வேன் என்னிடம் சோறு வாங்க காசில்லேயே? 'அவர் கண்கள் நீரைச் சொரிகின்றன.

'சோறு...மடத்தில்... அவிச்சுக் கொடுக்கினம் அம்மான்'

'மடத்திலா?... பெட்டி ஏந்திப் பிச்சை எடுக்கவா? கடவுளே என முருகர் வீரிட்டார்.

'உங்களுக்காகவில்லே...எனக்காக ... அம்மான் எனக்காக

'முருகா இது என்ன சோதனே 'என்று முருகர் வீரிட்டார்

'கெதியாய்ப் போங்கோ சோறு முடிஞ்சிடும்... அந்தப் பெட்டி...' ஈனஸ்வரத்தில் சண்முகம் சொன்னுன்.

முருகர் அவனேப் பார்த்தார் சன்னதி முருகனேப் பார்த்தார். நடுங்கிய அவர் கரம் சோறு வாங்கும் சண்முகத்தின் பனேயோலேப் பெட்டியை எடுத்துக் கொண்டது. உடல் தள்ளாட உயிர் துடிக்க அவர் சுடு மணலில் இறங்கிஞர்.

'முருகா என் பிடிவாதத்தைக் குலேத்து விட்டாயே? எந்த ஒரு வைராக்கியத்தோடு வாழ்ந்தேனே அதை பறிச்சிட்டியே...? இதே பார்... அப்பா எச்சில் பெட்டி ஏந்தி எனக்காக அல்ல... இன்னெரு உயிருக்காக எச்சில் ஏந்த ஐயோ... என்னேச் சோதிக்காதே...'

கோயில் முன்றலில் பறை மேளம் முழங்கியது.

கோயில் முன்றலேக் கடக்கும் போது அவர் கால்கள் சோர்ந்தன.

அப்படியே... கீழே சரிந்தார்.

திண்ணேயில் படுத்துக்கிடந்த சண்முகம் வீரிட்டான் 'அம்மான் எனக்குச் சோறு வேண்டாம்.'

★


## வசந்தத்தின் வரவு

செல்வி பவானி இராமையா

குயில் ஒன்று கூவுதம்மா
துயில் எழச் சொல்லி
குரலொன்று கேட்கு தம்மா
துணே வரச் சொல்லி
மயிலொன்று ஆடுதம்மா
மழை வரக் கண்டு
மையல் கொண்டு வாடுதம்மா
மைவிழி யிரண்டு
இசையொன்று பிறக்குதம்மா
என் நெஞ்சிலின்று
இளேயவள் உருவ எழில்
இள நெஞ்சிற் படிந்து
எனேவந்து தழுவுதம்மா
இளந்தென்றல் காற்று
வசந்தத்தின் வரவு தனே
அறிவிக்க இன்று ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




★ பதில் எழுதியவர்

அ. இ. ஸ்ரான்லி

இவருக்கு எமது பாராட்டுக்கள். சரியான விடைகளை எழுதிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

★ ஆசிரியர்

# கடந்த இதழில் நாம் கேட்ட கேள்வி இதோ !

ஆனந்தன் மாலா இருவரும் இணைபிரியாத காதலர்கள், பள்ளி வாழ்வில் ஆரம்பித்த இவர்களது காதல் பல வருடங்களாகத் தொடர்ந்து இறுதியில் அவர்கள் வேலைசெய்யும் இடம் வரை தொடர்ந்தது.

ஆனந்தன் மாலா இருவரும் உல்லாசமாகப் பல இடங்களுக்கும் போய் வருவர். ஆனந்தன் அளித்த நம்பிக்கையின் பெயரில் அவனுடன் கணவன் மனைவிபோல் உறவு கொண்டு வந்தாள் சில நாட்களின் பின் மாலா தாய்மையுற்றதை அறிந்த ஆனந்தன் அவளுடன் தொடர்பை நிறுத்தத் தொடங்கினன். ஆனல் மாலா அவன் இருந்த இடத்தை தேடிப்பிடித்து அவன் முன்னிலையிலேயே உயிர் விட முனைந்தாள்.

இதனல் மனம் குழம்பிய ஆனந்தன் தனது நண்பனை வைத்தியர் சிங்கத்துடன் தொடர்பு கொண்டு மாலாவிற்கு கருச்சிதைவு செய்யும்படி வேண்டினன். முதலில் சம்மதித்த வைத்தியர் பின்னர் மாலாவைக் கூட்டிவந்த போது அவள் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டுப் கருச்சிதைவு செய்ய மறுத்தார். இதனல் ஆத்திரமடைந்த ஆனந்தன் அங்கிருந்த கத்தியை எடுத்து கொலை செய்வதாக பயமுறுத்தி கருச்சிதைவு செய்யும்படி வற்புறுத்துகிறன்.

உயிர் போகப் போகிறதே எனப் பயந்த வைத்தியர் கருச்சிதைவு செய்தார், கருச்சிதைவின் போது எவ்வளவோ முயற்சி செய்தும் மாலாவை காப்பாற்ற முடியாமற் போய்விட்டது. அவள் இறப்பினல் அதிர்ச்சியுற்ற ஆனந்தன் வைத்தியரை பலம் கொண்ட மட்டும் ஓங்கி தாக்கினன் இதனல் வைத்தியர் படுகாயமடைந்தார். மாலாவின் இறப்புக்கும் வைத்தியரின் படுகாயத்திற்கும் ஆனந்தனே பொறுப்பாளி என வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஆனந்தன் குற்றவாளியா? நிரபராதியா?

நீங்கள் ஒரு நீதிபதியாய் இருந்தால் உங்கள் தீர்ப்பு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவியல் சட்டக்கோவை 87 ன் படி பயமுறுத்தலின் விளைவாகச் செய்யப்படும் குற்றத்திற்கு அவர் பொறுப்பாளியல்ல. என்று கூறுகின்றது. காரணம் அவருக்கு குற்றமனம் இருக்கவில்லை என்பதும் குற்றம் செய்யும் கருத்து எண்ணம் இல்லையென்பதும் ஆகும். அப்படியாயின் பயமுறுத்தல் எத்தகையதாக இருந்தாலும் அது பாதுகாப்பு தருமா என்று வினவுவது பொருத்தமானது. பயமுறுத்தலின் அளவு எவ்வளவு பாரதூரமானது என்பதைக் கொண்டே குற்றத்தின் அளவு பெரும்பாலாக நிர்ணயிக்கப்பட்டது. பொருளை அழிப்பேன் என்பதற்கும் உயிரை எடுக்கப்போகிறேன் என்று கூறுவதற்கும் உள்ள இடைவெளி வித்தியாசமானது.

X என்பவர் Y யினுடைய கையை பலாத்காரமாக எடுத்து அதன்மூலம் Z கொலை செய்தால் Y ஒரு ஆயுதமாக பயன்பட்டாரே தவிர அவர் அதற்குப் பொறுப்பாளியல்ல.

இச் சூழ்நிலையையும், சட்டப்பிரச்சனைகளையும் ஆதாரமாகக் கொண்டு இவ்வழக்கின் நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது ஆனந்தனுடைய செயல் மாலதி இறப்பதற்கும் வைத்தியர் படுகாயமடைவதற்கும் பொறுப்பாளியாகிறார்.

வைத்தியரை ஆனந்தன் பயமுறுத்தி கத்தியைக் காட்டி கட்டாயம் கருச்சிதைவு செய்ய வேண்டும் என்று கூறியபோது மாலதிக்கு கருச்சிதைவு செய்தால் இறப்பாள் என்ற நிலையை டாக்டர் அறிந்திருந்தார் என்பது தெரிகிறது. அப்படியானால் டாக்டர் இப்பயமுறுத்தலை சமாளிக்கும் தைரியமற்ற கோழையா என்றுகூட சிலர் எண்ணலாம்.

பயமுறுத்தல் எல்லாம் உயிருக்கு ஆபத்தாக முடிந்துவிடாது, உயிருக்கு ஆகக்கூடிய அச்சம் இருக்கும் வேளையில் வரும் பயமுறுத்தலை சமாளிப்பதிலும் அவன் கூறியபடி செய்வது தவிர்க்க முடியாதது என்று கண்டால் ஒழிய அப்பயமுறுத்தலை சமாளிக்க வேண்டியது கடமையாகும்.

ஆங்கிலச் சட்டம், ஸ்கொட்டிஸ் சட்ட விளக்கங்களும் உடலுக்கோ, உயிருக்கோ ஏற்படக்கூடிய அச்சம் பாரதூரமாக இருக்குமானால் அது தகுந்த பாதுகாப்பாக கருத முடியும் என்று அறிவுறுத்துகின்றது. அப்படியானால் பொருளை அழிப்பேன் என்று கூறுமிடத்து ஏற்படக்கூடிய நிலைமை என்ன என்பதையிட்டு சாதக பாதகமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

MACROWTHER என்ற வழக்கின் நிகழ்வுகள் இதற்கு பொருத்தமான சிந்தனையைத் தரும் இவ்வழக்கில் சதிக்குற்றத்திற்கு குற்றவாளி குற்றம் சாட்டப்பட்டிருந்தார். அவர் அதற்கு புரட்சிவாதிகளில் ஒரு பகுதியினர் நகருக்கு வந்து தன்னை தம்முடைய புரட்சிப்படையில் சேரும்படியும் இல்லாமல் மறுத்தால் வீட்டையும் எரித்து தரைமட்டமாக்குவதோடு எல்லா ஆடுகளையும் அழித்துப்போடுவவோடு தானிய மூடைகளையும் சேதப்படுத்துவதாக எச்சரிக்கை செய்யப்பட்டது இதனால்தான் குற்றவாளியல்ல என்று வாதிட்டார்

இதற்கு மாறாக உள்ள இந்திய வழக்கான MAGANLAL AND MOTILAL வழக்கில் வருமானவரி உத்தியோகத்தர் தொடர்பாக எழுந்தது பயமுறுத்தி லஞ்சம் கொடுக்கப்பட இதனால் மதிப்புத் தொகையையும் உயர்த்தி, அவர்களுக்கு புதிய எல்லைகளையும் நிறுவி சலுகைகளை வழங்கினர். இத்தனையும் பயமுறுத்தலின் விளைவு என்று வாதிட்டதிற்கு மாறாக—தீர்ப்பு அமைந்தது அதன்படி உத்தியோகத்தர்கள் அத்தனை பேரும் குற்றத்திற்கு உடந்தையானவர்களாக கணிக்கப்பட்டு உயிருக்கு உடனடியான ஆபத்து நேரும் பட்சம் ஒழிய இவ்வாறான தணிக்கும் பாதுகாப்பு வழங்கப்படாது என்று தெளிவாகக் கூறப்பட்டது. ஏனெனில் அவ்வித சூழ் நிலையில் உயிருக்கு ஆபத்து ஏதும் இருக்கவில்லை என்பது தெரிந்தது.

ஆனால் நமது வழக்கின் சூழ்நிலையில் நிலைமை மாறானது. வைத்தியர் கருச்சிதைவு செய்ய மறுத்தால் நிச்சயம் அவரை கொலைசெய்வான் என்பது தெளிவான உண்மையாகும். அந்தகைய உடனடியான விளைவு ஏற்படும் என்பதைக் கண்டு இத்தகைய முடிவுக்கு வந்த டாக்டரை விட, ஆனந்தனே மாலதியின் இறப்புக்கும் முழுப் பொறுப்பாளியாகிறான். ஏனெனில் டாக்டர் ஏற்கனவே மாலதியின் உடல்நிலை பற்றி மருத்துவ விளக்கம் அளித்துள்ளார். இதனை நன்குணர்ந்திருந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் ஆனந்தனே அதற்கு முழுப் பொறுப்புக்கும் உள்ளாக்கப்பட வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் டாக்டர் கருச்சிதைவுக்கு சம்மதித்திருக்கக் கூடாது என்பதற்கோ ஏன் ஆனந்தனோடு போராடவில்லை. என்பதற்கோ இடமில்லை. தனி ஒருவன் தானே, கூடுமானவரை கத்தியைக் காட்டி பயமுறுத்தினாலும் கூட தடுத்திருக்கலாம். என்றுகூட வாதிடலாம்.

கலிபோனிய வழக்கொன்றில் PETRO என்ற வழக்கில் குற்றவாளியினுடைய ஆயுதத்தை மற்றோர் புறம் திருப்பியதால் குற்றமற்ற மனிதன் தப்பிப் பிழைக்க மற்றொருவன் பாதிக்கும்படி நேர்ந்தது.

BLACTSTONE என்பவரும் குற்றமற்ற தான் தப்பி வாழ்வதிலும் குற்றவாளியின் மூலம் தானே மடிவது மேலான செய்கையாகும் என்று விளக்கியுள்ளார்.


இப்படிப் பார்க்கும் போது வைத்தியர் கூடுமானவரை இவ் துரதிர்ஷ்டமான இச் சம்பவத்தை தவிர்த்திருக்கலாம் போல் தோன்றுகின்றது. விளக்கம் எதுவாயினும் சூழ்நிலைக்கேற்றது போல் நிலைமையையும் நாம் அணுகுதல் அவசியமானது.

எதுவாயினும் ஆனந்தன் தன்னுடைய வெளிப்படையான நடத்தையின் மூலம் தன்னுடைய குற்ற மனதை ஐயமற நிரூபித்து விட்டமையால், மாலதியின் இறப்புக்கும், வைத்தியரின் படுகாயத்திற்கும் குற்றவாளி என கண்டு தீர்ப்பளிக்கிறேன்.

★

---

Appropriate Technology Services
121, POINT- ... ROAD
NALLUR, JAFFNA
No.........




செவ்வந்தியின் அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

# கிரம்பகந்தா கொலை வழக்கு

★ வில்பத்து கொலை வழக்கு

★ கோகிலாம்பாள் கொலை வழக்கு

முழு இலங்கையையுமே பரபரப்புக் குள்ளாக்கிய இக் கொலை வழக்குகளின் வரிசையில் மற்றுமோர் கொலை வழக்கு

'' கிரம்பகந்தா கொலை வழக்கு ''

★ தெஹிவளைப் பகுதியையே இக் கொலை பயங்கரத்துக்குள்ளாக்கியது

★ விளையாடித் திரிந்த சுட்டிச் சிறுவனைக் காணவில்லை. அவன் பிரேதம் தேவாலய வளவுக் கிணற்றில் காணப்பட்டபோது அதிர்ச்சியடையாதோர் இல்லை.

★ சிறுவனின் தந்தையைக் காதலித்தாள் அழகும் இளமையும் நிறைந்த போலின் டீ குருஸ் காதல் வளர்ந்தது சிறுவனையும் உபசரித்தாள் ஆனால்.........?

★ அவன் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டபோது போலின் டீ குருஸ் கைது செய்யப் படுகிறாள்.... விசாரணையில் பயங்கர உண்மைகள் வெளியாகின்றன.

அவ்வளக்கு விசாரணைகளையும் சம்பவங்களையும் கதையோடு கதையாக வழங்குகிறார்

★ சட்டத்தரணி .கே சற்குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# தீர்ப்புக் கூறமுடியுமா?

ரஞ்சன் கலா இருவரும் இளம் தம்பதிகள். இவர்களுக்கு இரு பிள்ளைகள். மூத்தவன் ரமேஷ் இளையவள் உமா ரஞ்சன் வெளிநாடு செல்வதற்கு தயாராகிறான். இவ்வேளை மனைவியான கலா அவனை போகவேண்டாமென்று தடுக்கிறாள் கணவனோ அவள் பேச்சைக் கேளாது பயணமாக ஆயத்தமாகிறான். கலா அவனை போகவேண்டாமென்று தடுத்ததோடு நிற்காது அவனது பாஸ்போட் மற்றும் முக்கிய பத்திரங்களை எடுத்து எரியும் அடுப்பில் போட்டு விட்டாள். அது எரிந்து சாம்பலாகியது. தன் சொல்லையும் மீறி தன்னை மதிக்காது தனது பத்திரங்களை எறிந்த போது அவன் அளவிலா கோபம் கொன்டான். அருகில் இருந்த உலக்கையை எடுத்து கலாவின் தலையில் ஓங்கி அடித்தான்.

மண்டை உடைந்து அதிர்ச்சியினால் மயங்கி வீழ்ந்தாள். பிள்ளைகள் இருவரும் வீரிட்டு கதறத் தொடங்கினர். மனைவியை கொலை செய்து விட்டேன் என்ற பயத்தில் நடுங்கியவாறு பிள்ளைகள் சத்தம் கேட்டு அயலவர் கூடிவிடாது தடுக்க பிள்ளைகள் வாயைப் அழுத்திப் பொத்தினான். மூச்சுத் திணறி ரமேஷ் உமா இருவரும் மயக்கமடைந்தனர். 5 நிமிடங்களின் பின் மனைவியின் பிரேதத்தை மறைக்குமுகமாக பிள்ளைகளை விட்ட போது இருவரும் பொத்தென விழுந்தனர்.

அவர்களும் இறந்து விட்டார்களென எண்ணி மூவரையும் ஒரு சாக்கில் போட்டு கட்டி வீட்டின் பின்னால் சிறிது தூரத்தில் பாய்ந்தோடும் ஆற்றில் எறிகிறான், சாக்கு பாறையொன்றில் மோதி மண்டை பிளந்து சிதறி மூவரும் மயங்கிய நிலையில் மரணமடைகின்றனர். வைத்திய பரிசோதனையில் அவன் தாக்கியபோது இறக்கவில்லை யென்றும் கடலில் எறியும்போதே இறந்தார்கள் என்று தெரியவருகிறது.

ரஞ்சன் கொலைக்குற்றம் சாட்டப் படுகிறான் நீங்கள் நீதிபதி ஸ்தானத்தில் இருந்தால்......

★

# சுபாஸ் சந்திரபோஸ்

## சுபாஸ் இன்னமும் உயிர்வாழ்கிறாரா

இந்திய சுதந்திரத்திற்காக போராடிய தலை சிறந்த தலைவர்களில் பிரதானமானவர். தாய் நாட்டிலிருந்து தப்பி ஓடி வெளிநாடு சென்று அந்நியரை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடியவர். வங்காளத்தில் 1897 ஜனவரி 23-ம் திகதி பிறந்த இவர் தனது 17 வது வயதில் துறவியானார். துறவறத்தில் வெறுப்புற்று கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். 1919 இல் இங்கிலாந்து சென்று ஐ சீ எம் தேர்வில் தேறி உயர் பதவி பெற்றார். 1921 இல் அப் பதவியை விட்டு விலகி காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். 1924 ல் அரசாங்கம் இவரை கைது செய்து பர்மா சிறையில் அடைத்தது. காந்தியடிகளின் முயற்சியால் விடுதலையானார்.

தீவிர கொள்கையுடைய சுபாஸ் காந்தி போன்ற தலைவர்களின் கொள்கைகளை முற்றாக ஏற்கவில்லை 1932 இல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கருத்து வேற்றுமையால் பதவியில் இருந்து விலகி முன்னணி கட்சியை ஸ்தாபித்தார். அரசுக்கு எதிராகப்பல இயக்கங்கள் நடாத்தி சிறை சென்றார்.

இரண்டாம் உலகப் போரில் (1939) ஆங்கிலேயருக்கு பெருந் தோல்வி ஏற்பட்டு விட்டதால் அத்தருணம் ஆயுதம் தாங்கிப் போராடினால் இலகுவில் சுதந்திரம் கிடைக்கும் என எண்ணி 1941 இல் மாறுவேடம் பூண்டு ஆப்கானிஸ்தான் வழியாக மேற்கு ஜேர்மனியின் நலைதகரான பெர்லினுக்கு சென்றார், பின் டோக்கியோ சென்று இறுதியில் சிங்கப்பூரை அடைந்தார். அங்கு இந்தியர்களை திரட்டி இந்திய தேசிய இராணுவம் என்னும் படையையும் ஒரு சுதந்திர அரசாங்கத்தையும் அமைத்தார். சுதந்திரப் படையினர் இவரை நேத்தாஜீ (தலைவர்) என அழைத்தனர் இந்திய தேசிய இராணுவத்தினர் இந்தியாவுக்குள் நுளைந்து மணிப்புரி சமஸ்தானத்தில் பல இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IF YOU ARE INTERESTED IN GOING ABROAD
OUR SERVICE IS AT YOUR DISPOSAL
COME NOW............, AVAIL YOUR SELF OF
YOUR TRAVEL DOCUMENTS
TODAY WITH OUR HELP ALWAYS AT YOUR SERVICE-

FOR YOUR

*Pasport Visas Ticket Bookings*
*Inter National Driving Licences*
*Travel Consultations Etc*

## ★★ QUICK TRAVEL ★★

*136, Kasthuriar Road, JAFFNA.*

OPPOSITE OF DR: YOGU PASUPATIES KASTHURIAR CLINIC

இளமை இனிமை புதுமை
ஸ்மக்ஸ் ஸ்மக்ஸ் ஸ்மக்ஸ்

இளம் உள்ளங்களை கொள்ளை கொண்டு
விட்ட தையல் நிலையம் நீங்களும் ஏன்
ஒரு தடவை விஜயம் செய்யக்கூடாது.

★ பெல்பட்டம் ★ பான்ஸ்
★ லோங்ஸ் ★ சேட் ★ சூட்
● சோட்ஸ்

உங்களுக்கு ஏற்ற முறையில் நீங்கள்
விரும்பிய நாகரீக பாணியில்
ஆண் பெண் இருபாலார்க்கும் ஆடைகள்
தயாரித்துக் கொடுப்பதில் புகழ் பெற்றவர்கள்

## ஸ்மக்ஸ்

*10 (12) பசார் லேன். — யாழ்ப்பாணம்.*

*SPACE DONATED BY*

★★★★★★

## ★★ FANCY HOUSE ★★

★★★★

*68, Grand Bazaar*
*JAFFNA*

T PHONE 7084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனேக் கைப்பற்றினர். இவ்வேளை இரண்டாம் உலக யுத்தப் போக்கு மாறி ஜெர்மனி யப்பான் தோற்றன. வீரத்துடன் சமர் புரிந்தும் பலனில்லாமல் போய்விட்டது.

1945 ஆகஸ்ட் மாதம் போஸ் மறைந்தார். விமான விபத்தில் இறந்ததாக செய்தி வந்தது. மரணம் அடைந்ததை ஆய்வுக்குழு உறுதி செய்தது. இறக்கவில்லை எனக் கூறுவோரும் உண்டு கடந்த வருடம் இந்தியாவில்கூட ஒரு அரசியல் பிரமுகர் சுபாசை கொண்டு வருவோம் அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை என எழுத்தில் தந்தும் அவர் குற்றச்சாட்டு பத்திரங்களை தம்மிடம் கையளிக்குமாறும் கேட்டனர். இதை பார்க்கும்போது உயிர் வாழ்கிறார் என்றும் எண்ணத் தோன்றுகின்றது,

சுபாஸ் ஒரு தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர்.

★ ஜீவி

★ ★ ★ ★

# சுதந்திரச் சிலை

## உலகின் மிகப்பெரிய சிலை

உலகிலுள்ள சிலைகளில் மிகப் பெரியது. பெண் வடிவில் ஆக்கப்பட்டிருக்கும் இச்சிலையின் ஆள் காட்டி விரலின் நீளம் 8 அடியாகும் (இரண்டரை மீற்றர்) இது அமெரிக்காவின் நியூயோக் துறைமுகத்தில் உள்ள ஒரு தீவில் அமைக்கப்பட்டுள்ளது.

சிலையின் வலக்கையில் ஒரு தீப்பந்தமும் இடக்கையில் சுதந்திரப் பிரகடன நாளைக் குறிக்கும் பலகையும் உண்டு காலடியில் அறுந்த சங்கிலித் துண்டும் காணப்படுகிறது. கூடுபோன்ற அமைப்புள்ள இச்சிலை வைக்கப்பட்டுள்ள பீடத்தின் உயரம் 45 மீட்டராகும். சிலையின் உயரம் 45 மீட்டர். சிலையின் உச்சிவரை செல்வதற்கு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. தலைப்பகுதியில் ஒரே சமயத்தில் 50 பேர் வரை நிற்கலாம் சிலையின் தலையிலுள்ள கிரீடத்தில் 25 சன்னல்கள் உள்ளன. இதன் வழியே நியூயோக், நியூஜேர்சி பகுதிகளைப் பார்க்கலாம். சிலையின் வலதுபக்க கைக்குள்ளே இன்னொரு படிக்கட்டு தீப்பந்த விளக்குக்கு செல்கின்றது. தற்போது இவ்வழியே பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தீப்பந்தம் தரைமட்டத்தில் இருந்து 93 மீட்டர் உயரத்தில் உள்ளது. இரவில் இது வீசும் ஒளியால் கப்பல்களுக்கு கலங்கரை விளக்கமாயும், விமானங்களுக்கு விமான எச்சரிக்கை விளக்காகவும் உள்ளது. 1884 ல் பிரஞ்சு மக்கள் தமது நட்பின் சின்னமாக அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு வழங்கினர். சிலை அமைப்பை திட்டமிட்டவர் பார்த்தால்டி (BARTHOLDI) சிலையைச் செய்தவர் கஸ்டாவ் ஐபல்' (GHSTAVE EIFFEL)

ஜீவி ★

---

## ஈழத்து எழுத்தாளர் நூல்களுக்கு செவ்வந்தியில் இலவச விளம்பரம்.

எமது நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்கு உரமிட்டு. சேவை நோக்குடன் அரசியல் பொருளியல் செல்வாக்கற்ற பல திறமை வாய்ந்த எழுத்தாளர்கள் தமது சொந்த முயற்சியில் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்களின் முயற்சிக்கும் திறமைக்கும் கௌரவம் அளிக்கும் வகையில் ஈழத்து எழுத்தாளர்கள் எழுதும் நூல்களுக்கு செவ்வந்தியில் இலவச விளம்பரம் வெளியிட முன்வந்துள்ளோம். இன்றைய சம்பவம் நாளைய சரித்திரம் இதை எமது மொழிபேசும் அனைவரும் உணர்ந்து செயற்படுவார்களேயானல் ஈழத்து இலக்கியம் பரிணமிக்கும்.

எழுத்தாளர்கள் தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விளம்பர விபரத்தை தெளிவாக எழுதி எமது முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

★ ஆசிரியர்

● ★ ● ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தி மலர் செழிப்புற்று விளங்க
மகிழ்ச்சியுடன் வாழ்த்துபவர்கள்

# கவிதா ட்ரவல் ஏஜென்ட்ஸ்

# (TRAVEL AGENTS)

126, கே. கே. எஸ். வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கவிதாஸ்
22. நவீனசந்தை
மேல்மாடி, யாழ்ப்பாணம்.

கவிதா
91, சதாம் வீதி,
கொழும்பு 1 போன், 29799
தந்தி: கவிதா கொழும்பு

இன்னிசைப் பிரியர்களுக்கு
ஓர் நற் செய்தி

★ கல்யாண வைபவங்கள்
★ களியாட்டு விழாக்கள்
★ கோவில் திருவிழாக்கள்

ஆகியவற்றிற்கு உங்கள் இதயங்குளிர
வில்லிசை விருந்தளிப்பவர்கள்
அழைத்து மகிழுங்கள்

நாச்சிமார் கோயிலடி

# இராஜன் வில்லிசைக் குழு

இலங்கையின் எப்பாகத்துக்கும் விஜயம் செய்து
உங்களை மகிழ்விக்க காத்திருப்பவர்கள்

இராஜன் வில்லிசைக் குழுவினரே
567 கே. கே. எஸ் வீதி, - யாழ்ப்பாணம்.

*SPACE DONATED BY*

# JAFFNA SCIENCE CENTRE

CLASSES CONDUCTED FOR

G. C. E. [O-L]
G. C. E. [A-L]

JAFFNA SCIENCE CENTRE
166 | 7 HOSPITAL ROAD JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகளும் கோணங்களும்

அத்தியாயம் 13

விதியை மதியால் வெல்லலாம் என்று சிலர் கூறிவைத்துள்ளனராயினும் மதியால் விதியின் கோட்டை மாற்றியமைத்துவிட முடியாது. ராதா லட்சுமி ரங்கநாதன் திருமணத்துக்கு தடைகல்லாக இருந்த ஒருவர் தானே விலகிநின்றுகொண்டே அந்தத் திருமணம் நடைபெற வழி வகுத்தாராயினும் அது வேறொரு உருவில் வந்து குறுக்கே நின்றுகொண்டிருந்தது. அவருடைய முடிவைக் கேட்டு இராசேஸ்வரன் அதிர்ச்சியுற்றார்.

"ராதா" யாரோ ஒருத்தி எதற்காகவோ பிடிபட்டவள் அவள் கூறும் கதையைக் கேட்டு உன் திருமண எழுத்தை தள்ளிவைக்கவேண்டிய அவசியமில்லையே இராசேஸ்வரன் ஏதும் புரியாதநிலையில் அப்படிக் கூறினர்.

"அப்பா நீங்கள் இப்படிப்பட்ட காரணங்களை அறிந்துவைத்துக் கொண்டே முதலில் இத் திருமணத்துக்கு தயங்கினீர்கள் நான் என் சொந்தப் பிரச்சனையை விட நீதிக்கு மதிப்பளிப்பவள் இந்தக் கேஸ் முடியும்வரை என் திருமணப் பேச்சையே எடுப்பதில்லை. இப்படி ஏழைகளின் கண்ணீரிலும் இரத்தத்திலும்தான் சம்பாதித்து பணக்காரர்களாகணுமா?"

"நீ பேசுவது நியாயமாயிருந்தாலும் இந்தக் கேஸில் உனக்கு தர்மசங்கடமான நிலை உருவாகியுள்ளது. அவன் குற்றம் சாட்டுபவன் பணக்காரனுயிருந்தால் நான் பயப்படமாட்டேன்"

"மிஸ்டர் ராமநாதன் எனக்கு வரப்போகும் கணவரின் அண்ணன் அவரைப்பற்றி அவர் தம்பி கொண்டிருக்கும் நம்பிக்கை அளவிடமுடியயது. அவர் உலகமே அண்ணனின் காலடியென நினைப்பவர். அண்ணர் ஓர் கடத்தல் மன்னர் என்று புரிய வைத்துவிட்டால் நாளை அவர் எங்கள் வீட்டுப்பிள்ளை அப்பா என்னைப் பிரிந்திருக்க முடியாது என்று அழுதீர்களே அதற்கு என் பராசக்தி காட்டிய அருள்தான் இது. ரங்கநாதன் வரட்டும் நான் யாவையும் கூறிவிடுகிறேன். அவருக்கு கடிதம் எழுதியுள்ளேன். அனேகமாக நாளை வரலாம்" என்றாள்.

"என்னவோ அம்மா எல்லாம் நல்லபடியாக நடக்க ஆண்டவன் அருள் புரியட்டும்" என்றார்.

மனிதனே தனது விதியின் கோடுகளை வகுத்துக் கொண்டுவிட்டால் ஆண்டவன் போடும் கோணங்கள் என்னவது கோணங்களின் அளவுக்கு ஏற்ப கோடுகள் அமையாவிடில் எல்லாமே தலைகீழாகிவிடும். விவேகம் உள்ள ஒவ்வொருவரும் தன்னை விடவேறு திறமைசாலி இருக்கமுடியாதென்று நினைப்பதினலேயே உலகில் பல அனர்த்தங்கள் உருவாகின்றன. அதிலும் பெண்ணுன ராதா லட்சுமி தன்னை நீதிதேவனின் தூதனுக நினைத்துவிட்டாள்.

என்றும்போல அன்று காலை மலர்ந்தது. காலதேவனின் அரசாங்கத்தில் மனிதனுடைய முட்டுக்கட்டைகளுக்கு இடமில்லையே. இறைவன் போட்டமுடிச்சை அவிழ்க்க எவராலும் முடியாதே. ஆனலும் மனிதனுடைய மதிமுயல்கின்றது. அங்கேதான் விதி சிரித்து விளையாடுகின்றது. ரங்கநாதன் பெற்றதும் நேராக ராதாலட்சுமியிடமே வந்து சேர்ந்தான். வந்தவனை உபசரித்து வரவேற்கு முன்னரே "வீட்டில் எல்லோரும் சுகமா? அண்ணு இதுபற்றி என்ன கூறினர்" என்றாள்.

"ராதா! நீர் நினைக்கிறமாதிரிஎதுவும் இல்லை என்பது உம் கடிதம் படித்தபோதே எனக்கு தெரியும் எனது உடன்பிறந்த அண்ணனைப்பற்றி நீரோ மற்றவர்களோ கூறிநான் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. என் அண்ணுவைப் பற்றி எனக்குத் தெரியும். உண்மையான உழைப்பில் வளர்ந்தவன் என் அண்ணன். ஒருவேளை சோற்றுக்குக் கஸ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்கள் நாம் மற்றவனுடைய கண்ணீரிலேயே ஒரு சதமும் சம்பாதிக்கப் பிரியப்படாதவன் அண்ணன். அப்படிப்பட்டவன் பிறர் வாழ்வோடு விளையாடமாட்டான். நீர் நீதிக்காக, நேர்மைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ராணி சினிமாவில் **175-வது நாள்** வெள்ளி விழாவை

நோக்கி வெற்றிநடை போடுகிறுன்



இதுவரை இலங்கையில்

திரையிட்ட சகல

படங்களின் வசூலையும்

98 நாளில்

முறியடித்து விட்டான்

சிவாஜி மஞ்சுளா

நடித்த

★
★
★
★

# உத்தமன்

(கலர்)

தினசரி 4 காட்சிகள்

---

## ஸ்ரீதர் வெண் திரையில்

வெற்றிமுழக்கமிடுகிறது (தினசரி 4 காட்சிகள்)

சிவாஜி கணேசனின்

# "காத்தவராயன்"

(புதிய பிரதி)

முன்னர் திரையிடப்பட்ட பொழுது இலங்கையில் பெரும் பரபரப்பையும் சாதனையையும் ஏற்படுத்திய சிறந்த காவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாதிடலாம். உண்மை என்றுமே உறங்கி விடாது. இந்தக் கேஸ் எங்கள்மீது திணிக்கப்பட்ட ஒரு மோசடி. இதற்காக நானோ அண்ணனோ கலங்கவில்லை. ஆனால் நீர் இதில் தலையிட்டிருக்க வேண்டாம் என்றுதான் நான் கருதுகிறேன்'' என்றான்.

''நீங்கள் நினைப்பது தவறு. இந்தக் கேஸை வேறு யாரும் எடுக்கமுடியாதபடி உங்கள் அண்ணனுடைய செல்வாக்கு பிரயோகம் நடைபெற்றிருக்கு அதனால்தான் அவள் என்னிடம் வந்தாள்''.

''உம் அப்பா இதனை எடுத்திருக்கலாமே''

'அப்பா உங்கள் அண்ணாவுக்கு பயப்படுகிறார்

''ராதா இது எங்களின் குடும்பத்தின் மீது யாரோ விஷமிகளால் சுமத்தப்பட்டுள்ள களங்கம் தன்மானப் பிரச்சனை இதில் நீர் தலையிடுவதால் எமக்குள்ள உறவு கூட பாதிக்கப்படலாம்.''

''நீங்கள் மிரட்டுகின்றீர்களா?''

''நோ நோ நான் மிரட்டவில்லை. உண்மையில் இதில் உனக்கு வெற்றி கிடைக்குமாயின் மாலைபோட்டு மரியாதை செய்பவர்களில் முதலாவது ஆள் நான்தான். உம்முடைய கொள்கையின் பலவீனத்தை யாரோ பயன்படுத்துகினம் திருமணத்தை குழப்ப சதிசெய்கின்றார்கள். அதனை உணராமல் அண்ணனுக்கு எதிராக......... நான் விரும்பவில்லை''

''நீதிக்காகப் போராடும் இடத்தில் உறவு முறைக்கும், உயர்வு தாழ்வுக்கும் இடம் இல்லை. வலிந்தவன் பெயரைக் கேட்டே நீதிக்காக போராடுபவர்கள் ஒதுங்கிக் கொண்டால் ஏழையின் நீதியும் ஏழையாகிவிடுவதா? நீங்கள் தெய்வம் தெய்வீகம் என்பீர்களே அவை பொய்யா? நான் உங்கள் அண்ணருக்கு எதிராக வாதிடவில்லை. ஓர் சமூகத் துரோகிக்கு எதிராக வாதிடப் போகிறேன். ஓர் அபலைப் பெண்ணிற்கு நீதி வேண்டி நிற்கிறேன்.''

''இதனால் உன் வாழ்வு.........''

''நீதிக்காகப் போராடி எனக்குக் கிடைக்கும் வெற்றி ஒன்றே எனக்கு வாழ்வளிக்கும். ஓர் அறியாததை மூடிமறைத்து ஓர் அபலையின் வாழ்வைப் பாழடித்து அதன் மீதுதான் என் வாழ்வு அமைக்கப்பட வேண்டுமென்றால் எனக்கு அந்த வாழ்வே வேண்டாம். நீங்கள் அநீதிக்காக என்னை போராடும்படி கேட்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்' என்று கூறிவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

''ராதா நாம் நினைப்பது போல தெய்வமும் நினைப்பதில்லை. நாம் போடும் கணக்கு தவறாக இருக்கலாம். ஆனால் அவன் போட்ட கணக்கில் தவறு இருக்க முடியாது. ஒன்றைமட்டும் உமக்கு உறுதியாகவும் இறுதியாகவும் கூறுகிறேன். இந்தக் கேஸ் சுத்த மோசடியான கேஸ். இதில் உமக்கு ஏமாற்றமே கிடைக்கும். காரணம் உண்மை உம் பக்கமில்லை. அதே சமயம் வேண்டாத ஆணவத்தால் நீர் பிடிவாதம் பிடிக்கலாம், அது உமது வாழ்வுக்கே சவாலாகும். எந்த ஒரு அவசர முடிவும் நன்மையில் முடிந்ததாக நான் அறியவில்லை என்னைப் பொறுத்தவரையில் இதில் உண்மை இல்லை. உம் வாதத் திறமையினால் வெற்றிபெற்று உண்மைக்கு தோல்வி கிடைக்குமானால் உம் விருப்பப்படி என்றும் நடக்கத் தயார். இதில் தோல்வி காண்பீர் என்பது உறுதியானதாகும். அதேசமயம் உமது வாழ்வையும் நீர் இழந்துவிடுவீர். என் பதையும் மிக மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் வருகிறேன் என்று கூறிவிட்டு அவள் பதிலுக்கும் காத்திராமல் விரைந்து நடந்தான்.

★ வளரும் ★

## இதயங்கள் பேசுகின்றோம்

★ புதுவை இரத்தினதுரை ★

சந்திரனைத் தொட்டு... சரித்திரத்தில் ஏறியுள்ள
இந்த யுகத்தின் இதயங்கள் பேசுகின்றோம்
மந்திரத்தால் நானை மாங்காய் விழுமெனவே
தந்திரங்கள் சொன்ன தலைகள் தனையுருட்டி
வந்தனைகள் செய்யா வரலாறு தீட்டிவிட்ட
இந்த யுகத்தின் இதயங்கள் பேசுகின்றோம்
கோரக் கொலைவெறியர் குதியாட்டம் போட்டிடவும்
வீரம்விளைந்த நிலம் வியட்னாமில் பாடியதும்
கம்போடியாவினிலும் கறுப்பு நிறப் பூக்களது
சிம்பாவே நாட்டினிலே சிரம்நிமிர்ந்து பாடுவதும்
எங்களது வர்க்க எழுச்சிப் பெருங்குரலே
சிங்களமாம் இந்தத் திருநாட்டை மூடியுள்ள
கங்குற் திரைகிழிக்கும் கதிரவனும் நாமேதான்
சந்திரனைத் தொட்டு சரித்திரத்தில் ஏறியுள்ள
இந்த யுகத்தின் இதயங்கள் பேசியது.........
உங்களது காதின் உள்ளே புகுந்ததுவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ யாழ் நகரில் உங்கள் ★

கிராங்சாவ்ற் கிறைன்டிங் றிபோறிங் கடைச்சல்

எலெக்றிக் வெல்டிங் வார்ப்புவேலே (அலுமினியம் பித்தளே)

★ மற்றும் இயந்திரங்கள் சம்பந்தமான
சகல தொழில் நுட்ப வேலேகளும்
அனுபவம்மிக்க பொறியியலாளர்களின்
மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ★

விபரங்களுக்கு

**PROMOTERS ENGINEERING COMPANY LTD.**

*884 Point Pedro Road, MUTHIRAICHANTHAI.*

**Nallur. Jaffna.**

**SUNDRAM TRADING (CO)**

NO 163 MAIN STREET POINT-PEDRO

*Agent For JOHNSON Motors & Spares*

★ DEALERS IN HARDWARE ELECTRICAL GOODS AND CYCLES

★ DISTRIBUTORS FOR S-LON PIPES AND FITTINGS

புதிய இல்லங்கள் அமைத்தபின் உங்கள்

★ ஞாபகத்தில் வரவேண்டிய ஸ்தாபனம் ★

**சுந்தரம் றேடிங் (கோ.)**

இல. 163, பிரதான வீதி, — — பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்க் கவிதைத்துறையில் ஒரு மைல்கல்'

அ. குமரன் B. A. [Cey.]

இருபதாம் நூற்றாண்டைத் தமிழ் இலக்கியப் பரப்பின் வளர்ச்சிக்காலம் எனக்குறிப்பிடலாம் வேறு காலங்களிலும் தமிழ் இலக்கியம் வளர்ந்து வந்திருக்கிறது என்றாலும் புதிய சிந்தனைகளதும் கருத்துக்களினதும் வெளிப்பாடுகளுக்கமைய புதிய வடிவங்களில் புதிய பொருளில் புதிய எல்லைகளைத் தொட்டும் புதிய பரிணாமங்களைப் பெற்றும் இலக்கியம் பிறந்தகாலம் பிறக்கின்ற காலம் இருபதாம் நூற்றாண்டே எனலாம். இங்கு வளர்ச்சி என்ற பதம் இலக்கியங்களின் தொகைவகை ரீதியான அகல கணிப்பிலன்றி பரிசோதனை முயற்சிகளாக அமைந்து பாதைகளாகவே ஆகிவிட்ட பொருளமைப்பு வடிவம், வெளிப்படுத்தும் விதம் ஆகிய ரீதியான ஆழக் கணிப்பிலேயே கையாளப்படுகிறது. அத்தகைய வளர்ச்சிகளில் கவிதையின் தற்காலப் பரிணாமமாகவும் ஏன் எதிர்காலக் கவிதை வடிவமாகவும் அமையக்கூடிய புதுக்கவிதை குறிப்பிடத்தகுந்தது, இலக்கணப் பண்டிதர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் இளையதலைமுறைக் கவிஞர்களுக்கு இலக்கியப் புரட்சியாகவும் பொதுவாகவே பிரச்சனைக்குரிய தொன்றாகவும் அமையும். இப்புதுக்கவிதையின் வளர்ச்சி தவிர்க்கமுடியாததும் தடுக்கமுடியாததுமாகும் இவ்வகையில் காலவேகத்தில் கவிதைத் துறையில் இயல்பாக ஏற்பட்ட இப்பரிணாமம் விரிவான கவனிப்பை பெறவேண்டியதாகிறது

புதுக்கவிதை என்னும் பொழுதே அவ்வாறு குறிப்பிடப்படுவது என்ன என்ற வினா பரவலாக எழுப்பப் படுகிறது. இப்படித்தான் புதுக்கவிதை என்று எடுத்தவுடன் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வரைவிலக்கணம் பெருமளவிற்கு இல்லை என்றாலும் அதனது அண்ணளவான வரைவிலக்கணமும் பண்புகளும் தெளிவாக இருக்கின்றன. 'சம்பிரதாயமான யாப்புமுறைகளுக்கு கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்கு சுதந்திரமான உருவம் கொடுக்கும் படைப்புமுயற்சி' என்றே ஆரம்பத்தில் புதுக்கவிதை வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. இது புதுக்கவிதையை முழுமையாக விளக்குவதாக அமையாவிட்டாலும் மரபுக் கவிதையிலிருந்து வேறுபடுத்திக் காண வழிசெய்தது, வழமையான இலக்கண வரம்புகளை மீறி பழைய தடத்திலேயே செல்லாமல் புதியதடம் போட்டுக் கொண்டவர்களின் குழந்தையே புதுக்கவிதையாகும். 'இன்று ரூபமற்ற கவிதையென சிலர் எழுதி வருவது இன்று எவற்றையெல்லாம் ரூபமெனப் பெரும்பாலோர் ஒத்துக்கொள்கிறார்களோ அவற்றிற்கு புறம்பான ரூபத்தை அமைக்கமுயலுகிறார்கள் எனக்கொள்ள வேண்டும்.' எனப் புதுமைப்பித்தன் புதுக்கவிதை பற்றிக் கூறியுள்ளதை இந்த இடத்தில் சுட்டிக்காட்டலாம். சுருங்கச் சொல்வதானால் ஒரேவகையான மரபுச் செய்யுட்களிலும் பரம்பரையான பண்டிதப் பாடல்களிலுமிருந்து விலகி பழமையிலிருந்து விடுபட வேண்டுமென்ற ஆர்ப்பாட்டங்கள் அறிவித்தல்கள் இல்லாமல் சில துணிச்சல் மனிதர்கள் செய்துவைத்த கவிதைப் புரட்சியின் வளர்ச்சி இன்று புதுக்கவிதையெனப் புகழப்படுகிறது எனலாம்.

இந்த விளக்கத்தோடு மட்டுமே அமைந்து விட்டால் இக்கட்டுரையும் புதுக்கவிதை பற்றிய ஒரு கோடிகாட்டலாகவே இருந்துவிடும். சற்று ஆழமாக இதுபற்றி நோக்குவது புதுக்கவிதை பற்றிய குழப்பங்களையும் பிரச்சனைகளையும் தெளிவாக்கும் என நம்புகிறேன். தமிழ்க் கவிதையின் விடிவெள்ளியாகக் பாராட்டப்படும் பாரதியுடனேயே புதுக்கவிதையும் தமிழில் பிரசவமெடுக்கிறது பாரதியினது காட்சிகள் ''புதுக்கவிதை முயற்சியின் ஆரம்பம் எனக் கொள்ளப்படுகின்றன. இனிமை, எளிமை, கவிதைமெருகு ஓட்டம் என்பன அமைந்து காணப்பட்ட இப்படைப்பு வழக்கமான கவிதைத் தன்மையிலிருந்து வேறுபட்டதாக அமைந்தது பாரதியினது இம்முயற்சி ''பொருந்தாத பொருளைப் பொருத்திவைத்து இசையுண்டாக்குதல்'' என்று குறிப்யிடப்படுமளவு இசைத்தன்மையும் சொற்கோப்பும் கொண்டமையும் புதியதொரு வெளிப்பாட்டு வடிவமாயிற்று. ''எமக்குத் தொழில் கவிதை'' என முழக்கமிட்ட பாரதி பிரக்ஞ பூர்வமாகவே இதனை மேற்கொண்டாரா அல்லது பரிசோதனையொன்று இத்தகைய பிரசவமாயிற்றா என்பது ஆராய்ச்சிக்குரியது '.தாகூரினது கீதாஞ்சலியின் தாக்கம் பாரதியிடமிருந்தது'' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. மகாதேவனின் கூற்றும் புதுக் கவிதைகளுக்கே வழிகாட்டியாக அமையும். வால்ட் விட்மனது ''புல்லின் இதழ்'' (லீவ்ஸ் ஆவ்கிராஸ்) களது செல்வாக்கும் பாரதியினது புதிய முயற்சிக்கான சூழ்நிலையை ஓரளவு தெளிவாக்குகின்றன.

பாரதியினுடைய காட்சிகளோடு புதுக்கவி ஆரம்பமானது எனக்குறிப்பிட்டாலும் அதற்கும் இன்று காணப்படும் புதுக்கவிதைக்கும் உள்ள வேறுபாட்டை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பாரதியினது ஆரம்ப முயற்சி அதாவது யாப்பு முறைகளுக்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வு களுக்கு சுதந்திரமான உருவம் கொடுக்கும் படைப்பு முயற்சி வசன கவிதை என்றே குறிப்பிடப் பட்டது. இதற்குப் புதுக் கவிதை என்றபெயர் 1960 ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டதென குறிப்பிடுகிறார். இன்றும்கூட புதுக்கவிதையினை வசன கவிதை எனக்கொள்ளும் மாரீச மயக்கங்கள் இலக்கிய உலகில் இல்லாமலில்லை. இந்த இடத்தில் புதுக் கவிதையையும் வசன கவிதையையும் வேறு பிரித்துத் தெளிவாக்கிக் கொள்வது புதுக்கவிதை பற்றிய தெளிவான அறிவிற்கு அத்தியாவசியமாகும்.

புதுக்கவிதையின் வளர்ச்சியிலும் அதன் அறிவு பற்றிய தெளிவிலும் நியாயமான பணிபுரிந்த எழுத்து ஏட்டின் சில கருத்துக்களைக் குறிப்பிட்டு இந்த வேறுபாட்டை விளக்குவது பொருத்தமானதாக அமையும், புதுக்கவிதைபற்றி என்ற எழுத்து 15 வது ஏட்டில் வெளிவந்த சி. சு. செல்லப்பாவின் தலையங்கக் கட்டுரை புதுக்கவிதையின் பண்புகளையும் வசன கவிதைக்கும் அதற்குமான வேறுபாடுகளையும் பற்றித் தாக்கமான சில தெளிந்த கருத்துக்களை தருகிறது. மென்மையான ஒலிநயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுதான் புதுக் கவிதை முயற்சி என்பதனால் ஒலிநயம் என்ற இசை தன்மைக்கு அதிக இடம் கொடுத்து அமைவது புதுக்கவிதையின் ஒரு பண்பாகும் எனத்தெரிகிறது அத்துடன் மேல்நாட்டுப் புதுக்கவிதை முயற்சியில் காணப்படும் இசைவான பேச்சுவழக்குச் சொற்களையும் தொடர்களையும் கவிதையும் நிறையப் புகுத்தும் அம்சத்தினையும் விளக்கிக் காட்டி ''பேச்சு அமைதியையும் புதுக்கவிதைகளில் காணமுடியும் எனவே புதுக்கவிதை அமைவதற்கு உதவுபவைகளில் சொற்களின் முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது'' என்றும் கூறுகின்றார். இதனைத் தெளிவாக்க ''கவிகள் களைப்பின்றிக் காவியமியற்ற ''என்ற கு.ப. ராஜகோபலனது கவிதை வரிகள் சிலவற்றைக் காட்டி அவற்றைப் பாரதியின் காட்சிகளிலுள்ள வரிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் புதுக்கவிதைக்கும் வசன கவிதைக்கும் உள்ள பல வித்தியாசங்களைப் புரிந்து கொள்ள முடியுமென்று வேறுபடுத்திக் காட்டுகிறார்.


## செவ்வந்தியின் அடுத்த இதழில்

வடக்குக் கிழக்கின் பொருள்வளம்
இக்கட்டுரைத் தொடரில்
நீர்ப்பாசன திணைக்களத்தை சேர்ந்த
**எஸ். குமரகுரு [B. A. Cey.]**
அவர்களின்
**வடக்கு கிழக்கு இலங்கையின் நீர் வளங்கள்**
— ஒரு சிறு மதிப்பீடு —
என்னும் ஆய்வுக் கட்டுரை வெளிவரவுள்ளது

★ இக்கட்டுரையில் நீர்த் தேக்கங்கள் காணப்படும் மாவட்டடங்கள் தனித்தனியே
★ அம்பாறை ★ மட்டக்களப்பு
● திரிகோணமலை ● மன்னார்
★ வவுனியா ★ யாழ்மாவட்டம்
எனப் பாகுபடுத்தி
★ அவற்றின் பெயர்கள்
★ வடக்கு கிழக்கில் காணப்படும் நீர்த் தேக்கங்கள் அவற்றின் பெயர்கள்
★ நீர்ந்தேக்கங்கள் கொள்ளும் நீரின் மொத்த கொள்வளவு,
★ நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய பகுதி.
★ நீர்த் தேக்கங்கள் காணப்படும் தொகுதிகள் என்பவை வெளிவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விளக்கங்களை நுணுகிப் பார்க்கின்ற பொழுது புதுக்கவிதைவேறு வசனகவிதைவேறு என்ற தெளிவான உண்மை புலனாகிறது. மரபான உருவவகைகளை வைத்துக்கொண்டு புதுக்கவிதை முயற்சிகளை மதிப்பிடக் கூடாதெனக் கருதும் புதுமைப்பித்தன் ''இன்று வசன கவிதைகள் என்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கைகள் வசனமும் அல்ல கவிதையும் அல்ல'' என்று கூறுவதன் மூலம் இவையிரண்டையும் வேறுபடுத்தி உள்ளதை இங்கு சுட்டிக் காட்டலாம். ஆங்கிலத்தில் காணப்படும் பிரீ வேர்ஸ் (FREE VERSE) என்ற சொல்லின் அர்த்தமாக கருதப்பட்டு வழங்கப்படும் வசனகவிதை என்ற பதத்தினால் புதுக்கவிதை முயற்சி என்றாலேயே அது வசன கவிதைதான் என்று சாதிக்கும் 'முயலுக்கு மூன்றுகால்' கருத்துக்கள் வளர்ந்துவிட்டன. எனவே வசனத்தை முறித்துப் போட்டு அடுக்குகின்ற சோ ஆனந்த விகடனில் (கு)தர்க்கப்பட்டுக் கொண்ட கத்பாலிடர் கவிதைகள் அல்ல புதுக்கவிதைகள் என்பது குறிப்பிடத் தக்கது. சில நல்ல வசன கவிதைகள் புதுக்கவிதையின் அம்சங்களைக் கொண்டமைகின்றன என்பது கவனிக்கத்தக்கது. ஆனால் அதற்காகப் புதுக்கவிதைகள் வசனகவிதைகளாகத்தான் இருக்கும் என்றோ வசனகவிதைகள் எல்லாம் புதுக்கவிதைகள் என்றோ அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. சுருங்கச் சொன்னால் ''சவுக்கைத் தோப்பின் வளியே காற்று பாய்ந்து சென்ற பிறகு தோன்றுமொரு ஒயுமொலி'' எனப் பிச்சமூர்த்தி குறிப்பிடும் மென்மையான இசைத்தன்மை சுருதிமீட்டலாக ஓடும் ஒலிநயத்தையும் கருத்து உணர்வு இசையினால் கவிதை ரூபத்தைத் தரும் சொற்கள் சொற்கோவைகளையும் கொண்டு உருவ அமைப்பில் மட்டுமன்றி உள்ளடக்கம் சம்பந்தமாகவும் சில புதிய இயல்புகளைக் கொண்டமைவதே புதுக் கவிதையெனக் கூறலாம்.

---

கடந்த இதழில் வெளியான 'கண்களுக்கு தெரியாத மூலவேர்கள்' என்ற சிறுகதை காவலூர் எஸ். ஜெகநாதனின் பரிசுபெற்ற சிறுகதையாகும் ஆசிரியரின் முடிவுக்கேற்பவே பெயர்மாற்றம் செய்யப்பட்டு பிரசுரமானது. கடந்த இதழில் இதனை குறிப்பிடத் தவறியமைக்கு வருந்துகிறோம்.

★ ஆசிரியர்

இத்தகையதான புதுக்கவிதை இலக்கிய ரீதியாக என்ன முக்கியத்துவத்தினைப் பெறுகிறதெனக் கவனிக்கும்போது கருத்துக்களைச் சொல்லும் அதனது பாணி தலைதூக்கி நிற்கிறது. மரபுக்கவிதை எட்டித் தொடமுடியாத இடங்களைக் கூட மிக அனாயசமாகத் தொட்டு அதைச் சொல்வதில் ஒரு ஆழமான தாக்கத்தையும் நயத்தையும் ஏற்படுத்தி விடும் தன்மை புதுக்கவிதைக்கே உரிய தனிச் சிறப்பாகும். ''மரபுக் கவிதைகளில் காணமுடியாத கண்டெடுக்கமுடியாத முத்துக்களெல்லாம் அர்த்தத்தோடு உள்ளாழத்தோடும் புதுக்கவிதைகளில் பிரகாசத்தோடு வந்தன'' என்ற பாண்டுரங்கனது கூற்று இந்த உண்மையை நன்கு விளக்குகிறது. உதாரணமாக

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்
ஆடைகள் வாங்குவதற்காக

மன்மத அச்சகத்தின் மலிவுப் பதிப்புகள் நாங்கள் என்ற நா. காமராஜனது ''வீபச்சாரிகள்'' கவிதையின்வரிகள் இலக்கியநயத்தோடும் இதயத்தை தொடுமளவிற்கும் சமுதாயத்தின் ஒரு சாபக்கேட்டை அற்புதமாகச் சித்தரிக்கின்றன. எந்த மரபுக் கவிதையும் தராத தாக்கமும் வேகமும் தெளிவும் இந்த வரிகளில் வந்து விழுகின்றன. புதுக்கவிதை பற்றிச் சொல்லப் பறப்பட்ட மேத்தா

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவையெதுவும் இல்லாத
கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக் கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி முறையே

என்றதன் மூலம் காலத்தையும் மொழியையும் இணைத்துக்கொண்டு காலத்துக்கேற்ற கவிதையின் வடிவமெனச் சித்தரிக்கும்போது சற்று ஆழமாகத்தான் அக்கருத்து அமைந்து விடுகிறது.

கருத்தை ஆழமாகச் சொல்வது போலவே புதிய உவமைகள் புதிய பார்வைகள் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்

மணிக்கூடு திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்

ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

★ உரிமையாளர்: M. நடராஜா ★

42 - 44 - 46 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

போன்: 7103 — — தந்தி — ரதி

VISIT

RATHY WATCH WORKS & STORES

42 44 46 KASTHURIAR ROAD JAFFNA

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

SUBHAS TOURIST HOTELS LTD.

*15, Victoria Road,* *JAFFNA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை இலக்கிய உலகில் ஏற்படுத்தியதாகவும் புதுக்கவிதை அமைகிறது. இருளின் பிரிவுக் கண்ணீர், இரவிக் கலவியின் புல்நுனிப் பிரசவங்கள், காற்று நதி வியர்வைகள் இரவியின் வருகைக்கு இறைத்த முத்துக்கள் அரும்பு நாசிக்கு தேவன் அணிவித்த மூக்குத்தி என்ற மரங்களுள் காணும் காலைப் பனித்துளிகள் பற்றிய உவமைகளும்

இருளின் மடல்கள் குவிந்தன
வானத்து ஜவந்திகள் மின்னின

என்ற பிச்சமூர்த்தியினது வரிகளும் புதுக்கவிதை கையாளும் புதிய உவமைகளுக்கும் புது உருவங்களுக்கும் பதமாகும் ஒரு சோறுகின்றன.

பாம்பே படமெடுத்து நீ ஏன்இப்படி
மகுடிமுன் மெய்மறந்து ஆடுகிறாய்
பாம்பாட்டிக்குப் பிழைப்பளிக்கவா
இல்லை இல்லை
ஆடியாடியுன் ஆவலைத் தீர்த்துக்கொள்ள

என்ற கு. ப. ராவினது கவிதை எதையும் புதிய பார்வையில் நோக்கும் புதுக்கவிதையின் பண்பை விளக்குகிறது. காலண்டர், சிலந்தி, கடிகாரம் என்பவற்றைப் பற்றிக் கூடப் புதிய பார்வையோடு புதுக்கவிதைகள் படைக்கப்பட்டன. வித்துவச் செருக்கை (வித்துவம் இல்லாவிட்டாலும் இருப்பதாக நினைத்துக்கொண்டு) வெளிக்காட்டும் நாயக்கர் காலங்களும் புதுக் கவிதையில் இருந்தாலும் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் உத்தியிலும் புதுமையும் எளிமையும் கலந்து பிரகாசிக்கும் காலத்துக்கேற்ற கவிதை வடிவமாக அது திகழ்கிறது.

ஏறத்தாழ 1930 அளவில்பிறந்து இன்று இத்தகைய ஒரு நிலையினைப் பெற்றிருக்கும் புதுக்கவிதையினது வளர்ச்சியை கவனிப்பதன் மூலம் அதனது போக்குகளையும் தன்மைகளையும் இன்னும் தெளிவாக்கலாம். ''சோதனைக் காரப் புதுக்கவிதை முதல்வன்'' என செல்லப்பாவினுல் குறிப்பிடப்படும் ந. பிச்சமூர்த்தியுடனேயே தமிழின் புதுக்கவிதை உண்மையில் ஆரம்பமாவதாகக் குறிப்பிடப்படுகிறது. அவரது முதல்கவிதையான ''காதல்'' 1934 ம் ஆண்டு மணிக்கொடியிலேயே பிரசுரமானது. தொடர்ந்து ஒளியின் அழைப்பு கிளிக்குஞ்சு, பிரார்த்தனை, தீக்குளி என்பன அதே வருடம் மணிக்கொடியிலே பிரசுரமாயின. வாழ்க்கை பற்றிய ஆழ்ந்த பார்வையையும் எதையும் பற்றிய ஆழமான நோக்கும் கொண்டிருந்த பிச்சமூர்த்தி எதனையுமே புதிய பார்வையிலும் ஆழ்ந்த சிந்தனையோடும் தமது கவிதைகளில் வெளிக்கொணர்ந்தார் இவரது புதுக்கவிதைப் படைப்பின் இரண்டாவது காலகட்டம் 1960 அளவில் எழுத்துருவில் வளர்ந்தது இயற்கை தரிசனங்களையும் வாழ்க்கை உண்மைகளையும் இணைத்து எழுதும்போக்கு அப்போது பிரதிபலித்தது. சுமைதாங்கி, வீலை, திறவுகோல். ஸ்விச், மணல் முதலியன இரண்டாவது காலகட்ட படைப்புகளில் குறிப்பிடத்தக்கன. பிச்சமூர்த்தியைப் போன்றே புதுக்கவிதை பற்றிய தெளிவான சில கருத்துக்களைக்கொண்டு விளக்கிய கு. ப. ராஜகோபாலனுக்கும் புதுக்கவிதையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்குண்டு. பெண்மையை வியக்கும் பெண்ணை எண்ணி ஏங்கும் அகத்துறைக் கவிதைகளை அதிகம் படைத்தவராக கு. ப. ரா விளங்குகிறார் கருவளையும் கையும், பெண்ணின் பிறவி ரகசியம் விரகம் போன்றவற்றை இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லலாம். இதேபோன்று வல்லிக்கண்ணன் மயன் போன்றோரையும் குறிப்பிடத்தக்க புதுக்கவிதையாளராகக் காட்டலாம். இவ்வாறு ந. பியினுல் ஆரம்பிக்கப்பட்ட புதுக்கவிதை இத்தகைய கவிதையாளர்களைப் பெற்று இயக்கமாக வளர்ந்துள்ளது. 1939 ல் சூருவளி 1942 ல் கலமோகினி ஆகிய இதழ்கள் பிறந்து மணிக்கொடியினுல் ஆரம்பிக்கப்பட்ட இக்கவிதைப் பணியை வாதங்கள் கருத்துக்கள் கவிதைகள் ஆகியவற்றைத் தாங்கி வந்ததன் மூலம் உரமிட்டுவளர்க்கலாயின


1959 ல் 'எழுத்து' பிறந்ததனேடு புதுக்கவிதையும் ஒரு வளர்ச்சிக் காலகட்டத்துள் நுழைந்தது. உண்மையில் கவிதைக்கு அதிக இடமளிக்கும் எண்ணம் எழுத்துக்கு இல்லாவிட்டாலும் ''சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்துப் புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயல்கின்றவர்களின் படைப்புகளை வரவேற்பது'' எனப் பிரகடனப் படுத்திக் கொண்டதற்கிணங்க புதிய முயற்சியான புதுக் கவிதைக்கும் அதுபற்றிய கருத்துக்களுக்கும் இடமளித்து அதனுல் புதுக்கவிதைச் சுழலுள் இழுக்கப்பட்டு அதன் வளர்ச்சியில் கணிசமான பங்கேற்பதாக அது அமைந்தது. தி. சோ. வேணுகோபாலன் டி, கே. துரைஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது யுகம்

அடுத்த இதழில்
இவர்களின் ஆக்கங்கள்
இப்பகுதியில்
இடம்பெறுகின்றன.



## சீதனப் பேயே தொலைந்து போ.

செல்வி செ. மாலினி
அரியாலை.



## உலக நாடுகளிலே ஜனநாயகம்

க. கணேசராஜா
நீர்வேலி.


## HUTCHINSON F. I. P. WORKS

★ PUMP SERVICING

- *Dismantiling & Injectors Reconditioning and*
- *All Other Diesel Pumps Works*

*UNDER TAKEN*

NO 5 OPPOSITE BROODIE LANE

ARIYALAI — — JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவய்யா, சுந்தரராமசுவாமி, தருமசிவராமு, சி. மணி, எஸ். வைத்தீஸ்வரன் போன்ற சிறந்த புதுக்கவிதையாளர்களும் வேறும் சிலரும் எழுத்து மூலம் புதுக்கவிதையை வளம்படுத்தினர்கள் கற்பனை விரிவும் கருத்தாளமும் உணர்வோட்டமும் கொண்ட நயமான கவிதைகள் வேணுகோபாலனிடமிருந்து பிறந்தன. வாழ்க்கைத் தத்துவங்களை சாதாரண நிகழ்ச்சிகளோடு பொருத்திக்காட்டி எளியமுறையில் கவிதைகள் இயற்றினர். பிரகாசத் தொனியோடும் கிண்டலாகவும் கவிதைகள் இவரிடம் உருவாயின

சொல்வ திரண்டுவகை
சிந்தித்துச் சொல்லல்
சிந்தை இலேயாதல்
கரகம் அல்லது
கண்கட்டு
இரண்டுக்கும்
பொருள்
சொன்னவன் புலவன்
கண்டவன் கலைஞன்
முழிப்பவன்
நீயும் நானும் கேவலம்
வாசகக் கும்பல்

என்ற 'இலக்கிய அனுபவம்' என்னும் கவிதை கிண்டலுக்கு தக்க எடுத்துக்காட்டு டி. கே. துரைஸ்வாமி சோதனைக்காகவே பல கவிதைகளைப் பாடியவர். வசனத்தையே கவிதையாகத் தருவதும் படிப்பவரைக் குழப்பி அவதிப்பட வைப்பதுமான தன்மைகளையும் பரிசோதனையாகக் கையாண்டவர். வர்ணபேதம் அறியாதார் ஒருவருமில்லை பேதாபேதம் அலங்காரம், போன்ற கவிதைகள் இப்படியானவை இருப்பினும் இத்தகைய சோதனை முயற்சிகளாலேயே புதுக்கவிதையை வளம்படுத்திய பெருமை இவருக்குரியது.

இக்காலத்தைப் புதுக்கவிதையாளர்களில் முக்கியமானவர்கள் தரும சிவராமுவும் மணியுமாவர் இருள் மனக்குகை ஓவியமாக அமையும் குகை உலக இயல்பைக் கூறும் 'அரக்கம்' ஓடிமறைந்த பெண்ணை எண்ணிப் பித்துற்ற மனதின் விரக்திப் புலம்பலான 'மறுப்பு' வேறு தொனியில் அமைந்தாலும் விரக்தியே மேலோங்கி நிற்கும் 'கதவை மூடு' என்ற பல நல்ல கவிதைகளைப் படைத்தவர் மணி கற்பனை நயமும் சிந்தனைச் செறிவும் கொண்ட கவிதையாற்றல் பிரவகிக்கும் விடிவு, மாலை நிழல்கள் சைத்திரீகன் மறைவுபோன்ற கவிதைகளை புதுக்கவிதை இயக்கத்திற்கு அளித்தவர் தருமசிவராமு டி. இ. ஹூம், எஸ்ரா பவுண்டு ரீச்சர்ட் ஆல்டிங்டன் எமிலோவல் போன்றோர்களால் கவிதைத்துறையில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் முன்வைக்கப்பட்ட 'இமேஜீஸம்' என்னும் படிமக் கொள்கையை தமிழ்க் கவிதையில் சிறப்பாகக் கையாண்டவர் தரும சிவராமு என்பது குறிப்பிடத்தக்கது.

பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து
படரும் விந்து
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி

என்ற 'விடிவு' என்னும் இவரது கவிதை படிமச்சிறப்பிற்காகப் பாராட்டப்படுவது. நிலவை புதியகோணத்திலிருந்து சித்தரிக்கும் 'கிணற்றில் விழுந்த நிலவு' என்னும் அற்புதமான கவிதையின் மூலம் புதுக்கவிதையுலகில் கால்லூன்றிக் கொண்டவர் எஸ். வைத்தீஸ்வரன் இவ்வாறு ஓங்கி ஒலிக்கத்தொடங்கிய இந்தப் பல்குரல்களும் புதுக்கவிதையை வளர்த்தெடுத்தன. தத்தமக்கெனத் தனி முத்திரைகளும் தனியான சித்தரிப்புக்களையும் கொண்ட இக்கவிஞர்களது படைப்புக்கள் புதுக்கவிதையின் பிரகாசமான எதிர்காலத்துக்குக் கட்டியங் கூறின.

அந்தப் பிரகாசமிக்க எதிர்காலத்தை புதுக்கவிதை 1962 ல் சந்தித்தது சாதனைகள் நிறைந்த வருடமான இதில் பிறந்த கவிதைகள் கருத்தாழமும் கற்பனைவளம் வாழ்க்கைத் தத்துவம் மற்றும் நயங்கள் பலவும் கொண்ட வழமான படைப்புகளாகத் திகழ்ந்தன. புதுக்கவிதையில் நெடுங்கவிதை முயற்சிகளாகப் பிச்சமூர்த்தியினது 'காட்டுவாத்தும்' சி. மணியினது 'நரகமும்' சிறப்பான படைப்புகளாக அடையாளங் காணப்பட்டன. நாகரீக நகரத்தில் திரியும் ஒருவனது உணர்வுக் கிளர்ச்சியை அதை வேதனையாக வளர்த்துவிடும் புறநிலைகளை அவனது ஏக்கங்களை விபரிப்பதாக அமையும் நரகம் இவ்வருடத்தைய சிறந்த சாதனை எனலாம். உள்ளடக்கம், உருவ அழகு, படிமச்சிறப்பு. வாழ்க்கைப்பார்வை, மதிப்பு தத்துவ நோக்கு உத்தி கையாளுதல் போன்றவைகளில் சிறந்து விளங்கும் இக்கவிதையை புதுக் கவிதையில் ஒரு மைல் கல் என எழுத்து கௌரவித்துச் சிறப்பிக்கிறது. பிச்சமூர்த்தியினது கவிதைகளின் தொகுப்பான காட்டுவாத்தும் மற்றொரு புதுக்கவிதைத் தொகுப்பான புதுக்குரல்களும் இவ்வருடத்தைய சிறந்த சாதனைகளாகும் 1938 முதல் 1962 முடிய பிச்சமூர்த்தி எழுதிய 35 கவிதைகளைக் கொண்டதாக 'காட்டுவாத்தும்' 24 கவிஞர்களின் 63 கவிதைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொண்டதாகப் புதுக் குரல்களும் அமைந்தன. அவரவர் நம்பிக்கையையும் வேறு வேறு அவரவர் சொல்திறனும் நானாவிதமானது. அவநம்பிக்கையும் சமுசயமும். தன்னம்பிக்கையும் கவலையும் உறுதியும் ஆதங்கமும் லட்சியமும் யதார்த்தமும் உண்மையும் போலியைக் கண்ட ஆத்திரமும் எத்தனை விதமாக ஒலிக்கின்றன அவர்கள் குரல்களில்'' என்ற புதுக்குரல்களது முன்னுரையின் வரிகள் காலரீதியாக புதுக்கவிதையில் ஏற்பட்ட பரந்துபட்ட வளர்ச்சியைத் தெளிவாக்குகின்றன.

இவ்வாறு தனக்கெனத் தனியான போக்குகளையும் வளர்ச்சியையும் பெற்றுவந்துள்ள புதுக்கவிதையின் இன்றைய நிலை நம்பிக்கையூட்டுவதாய் அமைகிறது மேத்தா, நா. காமராஜன், கங்கை கொண்டான், மீரா' சக்திக்கனல், தமிழன்பன் போன்ற இளையதலை முறையின் எழுச்சிக் குரல்கள் நயமும் வடிவையும் பொருள் விரிவும் பரந்துபட்ட பார்வையும் கொண்டனவாக ஒலிக்கின்றன. இன்றைய புதுக்கவிதையின் குரலில் மனிதனைப் பற்றியும் கேட்பதை உணரலாம். பிராய்டும் கார்ல் மார்க்சும் கொடுத்த கொள்கைகளே இதற்குக் காரணம்'' என்ற பேராசிரியர் கனகசபாபதியின் கூற்று இன்றைய புதுக்கவிதைகளின் போக்கைப் பலப்படுத்துகின்றன

நாங்கள் சேற்றில்
கால்வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில்
கைவைக்க முடியாது
என்ற கலாஜோதியின்முழக்கம்
நாங்கள் நெருப்புக் கோழிகள்
எங்கள் மீது
சாம்பலைத் தூவாதீர்கள்
என்ற கங்கை கொண்டானது எச்சரிப்பும்
ராஜதானியில் மலர்க்கிரீடங்கள்
சூட்டப்படும் பொழுது
சேற்று குழந்தையின்
சின்னவிழிச் செடியில்
உப்பு மலர்கள்
உதிர்ந்து விழுந்தன
என்ற மேத்தாவின் குமுறலும்

சமுதாயப் பிரச்சனைகளும் வாழ்க்கையும் அழுத்தமான சித்தரிப்பைப் பெறுவதைக் காட்டுகின்றன. தாமரை, வானம்பாடி, கசடதபற என்பன புதுக்கவிதைகளின் பிரசவத் தொட்டில்களாகின்றன. தாமரை மார்க்சீயப்பார்வையிலான இங்கே இடிமுழக்கம் கேட்கிறது (நவபாரதி) சிகரங்கள் பொடியாகும் (சிற்பி) சாணி பொறுக்கும் சிறுமி (சார்வாகன்) போன்ற கவிதைகளை அளித்தது ஒரு ரோடு ரோலரின் பவனி (சக்திக்கனல்) சில நைலோன் கனவுகள் என்றன (கங்கை கொண்டான்) தாலாட்டுக் கேட்காத தொட்டில்கள் (மேத்தா) போன்ற வானம்பாடிகளது புதிய பார்வைகளாயின. இத்தகைய தனிக்கவிதைகளேயன்றி முக்கியமான கவிதைத் தொகுப்புகளும் இன்றைய காலகட்டத்தில் குறிப்பிடவேண்டியன வாகின்றன மீராவினது கனவுகள் கற்பனைகள் காகிதங்கள், ராமியினது ஆக்கடோபஸும் நீர்ப்பூவும் மேத்தாவினது கண்ணீர்ப்பூக்கள். நா. காமராஜனது கறுப்பு மலர்கள் என்பன புதுக்கவிதையின் நயத்தையும் வளத்தையும் பறைசாற்றும் தொகுப்புகளாகும் வடிவ அமைப்பில் புற்றீசல்களாகப் புறப்பட்டிருக்கும் துணுக்குக் கவிதைகளைக் குறிப்பிடலாம். அரசியல் முதற்கொண்டு அவித்தன்மை வரையுமான அனைத்தையும் பொருளாக்கும் இம் மினிக் கவிதை புதுக்கவிதை வடிவத்தில் காலப்போக்கில் ஏற்பட்ட நிலைப்பாடாக அமைகிறது, இதுகால வரையுமான வளமும் வளர்ச்சியும் இன்றைய சூழ்நிலையில் மெருகூட்டப்பட்டு பொருட்பரப்பு விரிவடைந்து ஆரோக்கியமான ஒரு இலக்கிய வடிவமாக இன்று புதுக்கவிதை எழுந்து நிற்கிறதெனலாம்.

காலவேகம் தமிழ்க் கவிதைத் துறையில் ஏற்படுத்திய பரிணாமம் இன்று கவிதை இயக்கமாக காலூன்றும் அளவு வளர்ந்துள்ளது. மரபின்கட்டுக்கோப்பை உடைத்துக்கொண்டு வெளிப்பட்ட சுதந்திரமான முயற்சி இன்று புதிய மரபை வகுக்கும் நிலைக்கு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது தமிழ் கவிதைப்பரப்பில் தோன்றிய சத்தான தாக்கு முயற்சிக்காக அமையும் புதுக் கவிதை பற்றிய இந்த நோக்கினை பூர்த்தியாக்குகையில் வளரும் கவிதை வடிவமாகப் பிறந்து இன்று வாழும் கவிதை வடிவமாக ஆகிவிட்ட புதுக்கவிதை நாளை நிலைத்து நிமிர்ந்து நிற்கும் ஆரோக்கியமான அறிகுறிகள் இன்று காணக்கிடக்கின்றன. என்று குறிப்பிட்டு முடிப்பது பொருத்தமானதாகும்.

★ முற்றும்


Appropriate Technology Services
121, POINT ... ROAD
NALLUR, JAFFNA
No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கவனத்திற்கு!

எம்மிடம் தற்போது பின்வரும் கட்டுரைகளைத் தாங்கிய 'செவ்வந்தி' இதழ்களே விற்பனைக்குள்ளன. ஏனைய கட்டுரைகள் அடங்கிய செவ்வந்தி யாவும் முடிந்து விட்டன. சொற்ப பிரதிகளே விற்பனைக்குள்ளன. பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**பொருளியல்**

- ★ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் நாணய மதிப்பு இறக்கமும்
- ★ இலங்கையின் உள்நாட்டு விவசாயத் துறையும் பொருளாதார அபிவிருத்தியும்
- ★ சென்மதி நிலுவையில் பிரச்சனை ஏற்படுவதற்கான காரணங்களும் அதனைத் தீர்ப்பதற்கு கையாளப்படும் வழிகளும்
- ★ நாணயப் பெறுமதி இறக்கமும் சென்மதி நிலுவைப் பிரச்சனையும்
- ★ பல்தேசியக் கம்பனிகள்
- ★ இலங்கையின் கிராமியப் பொருளாதாரமும், அது எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்
- ★ சுதந்திர வர்த்தக வலயம் — சில பிரச்சனைகள்
- ★ தனியார்துறை இயங்கும் நாடுகளில் அரசாங்க நடவடிக்கையின் அவசியம்

**புவியியல்**

- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்
- ★ நேருருவெறிய விளக்கத்திற்கு நான்கு படங்கள்
- ★ இலக்கியமும், பண்பாடும்
- ★ இலங்கையின் மீன்வளம்
- ★ உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களின் நிர்ணயிப்புக் காரணிகள்
- ★ இலங்கையில் வளர்ந்த கட்டடக் கலைப் பண்பாட்டின் தோற்றம்
- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்

**இலக்கியம்**

- ★ 20-ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
- ★ தமிழியல் வளர்ச்சியின் முன்னோடி 'சுவாமி விபுலானந்தர்'
- ★ பாரதியின் 'கண்ணன் பாட்டு'
- ★ ஆரம்பகாலத் தமிழ் நாவலாசிரியர்களின் குறிக்கோள்
- ★ தமிழில் பக்தி இயக்கம்
- ★ பல்லவர் கால இலக்கிய நெறியும் சோழர் கால இலக்கியப் போக்கும்

இவ் வேறுபட்ட கட்டுரைகள் தனித்தனி இதழ்களில் அல்லாது புவியியல் — சட்டம் இலக்கியம் — பொருளியல் கட்டுரைகள் ஒரே இதழில் எழுதப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தேவையான 'கட்டுரைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு' எழுதவும் இவை வி. பி. பி யில் மட்டுமே அனுப்பி வைக்கப்படும். பிரதி ஒன்றின் விலை ஒரு ரூபா மட்டுமே.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

'நிர்வாகி' செவ்வந்தி கலைக்கூடம்

185—4, கில்னர் லேன், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEVVENTHI
MONTHLY

1978

REGISTERED AS A NEWSPAPER AT G P O SRI LANKA

CEY-NOR

*MANUFACTURERS OF*

★ FIBRE GLASS
★ FERRO CEMENT FISHING BOATS
AND
★ FISHING NETS
★ EXPORTERS AND MARINE PRODUCTS

FISHING NET FACTORY

*Gurunagar — Jaffna*

HEAD OFFICE
BOAT YARD JETTY
KARAINAGAR.

★ EDITOR & PUBLISHER: S. THAVAPALAN
185/4 KILMAR LANE JAFFNA (CEYLON)

★ PRINTER — — CHETTIR PRESS - JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org